# புதிய கல்விச் சிந்தனைகள்



கலாநிதி சபா. ஜெயராசா

# புதிய கல்விச்சிந்தனைகள்

கலாநிதி. சபா ஜெயராசா

முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை

சவுத் விஷன்

**Puthiya Kalvi Chinthanaikal**
**Kalanidi Saba Jayarasa**

First Published : June 2000
Published in Association with
National Association for Art & Literature

By

**SOUTH VISION**
6 Thayar Sahib II Lane, Chennai - 600 002.

*Published and Distributed in Sri Lanka by*
**Vasantham (P) Ltd.,**
South Asian Books,
44, 3rd Floor, CCSM Complex, Colombo - 11
Tel : 00941 - 335844 Fax : 00941 - 333279

தேசியக் கலை இலக்கியப் பேரவையின்
25 வது ஆண்டு நிறைவு வெளியீட்டு வரிசையில் பதினோராவது நூல்

**புதிய கல்விச்சிந்தனைகள்**
கலாநிதி சபா. ஜெயராசா
முதற் பதிப்பு: டிசம்பர் 2000

வெளியீடு:
தேசியக் கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து
**சவுத் விஷன்**

6. தாயார் சாகிப் 2வது சந்து. சென்னை 600 002.

ரூபாய்: 35.00

■ ஒளிஅச்சுக் கோர்வை: ஆதவ் கிராபிக் சென்னை -600 014 ■ அச்சு: மணி ஆப்செட். சென்னை-5 ■ அட்டை அச்சு: பிரிண்ட் ஷ்பெஷாலிடி

*யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்வியியற்துறைத் தலைவர்*
**பேராசிரியர் வ. ஆறுமுகம்** அவர்கள் வழங்கிய

# முன்னுரை

**ம**னித சமுதாயத்தின் ஆரம்பத்திலிருந்தே கல்வியும் வளர்ந்து வந்துள்ளது என்பது சமூகவரலாற்றில் நாம் காணும் உண்மை. மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு ஜீவனும், அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும், தனக்குப் பொருத்தமானதை, தேவையானதைக் கற்றுக்கொள்கின்றது. தேவைகள் மட்டுமல்லாமல், காலம், சூழல் என்பவையும் கல்வியில் அதன் போக்கு, பொருள், இலக்கு, முறை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அத்தகைய மாற்றங்களுக்கு அடிப்படைகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் சிந்தனையாளர்கள் வழங்குகின்றார்கள். அவர்களுடைய சிந்தனைகள் அவரவர் வாழ்நாட் கால, தேச, சமூக வர்த்தமானங்களின் பிரதிபலிப்பாக விளங்குகின்றன. இந்த அடிப்படையில் கல்வி பற்றிய சிந்தனைகள் பாரம்பரிய நோக்கில் பழையனவாகவும், மாற்ற வழக்கில் புதியனவாகவும் இனங்காணப்படக் கூடியன.

பிளேற்றோ, அரிஸ்டாட்டில் ஆகியோர் காலத்திலிருந்து, ரூசோ, கொமெனியஸ், புறொபல், பெஸ்டலொசி போன்றோரும் கூட்டாக., டூயி, காந்தி, தாகூர் போன்றோர் வரை பல்வேறு கோணங்களில் கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகளை விளக்கிய மேதைகளை நாம் காணகிறோம். அவர்களுடைய சிந்தனைகள் அவர்கள் வாழ்ந்த தேசம் / சமூகம், எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்பவற்றால் உருவாக்கப்பட்டன / நெறிப்படுத்தப்பட்டன என்பது கண்கூடு. ஆரம்பத்தில் ஆன்மீக நோக்கத்தை வலியுறுத்திய சிந்தனைகள் காலப்போக்கில் அரசியல், பொருளாதார, சமூகவியல் அழுத்தங்களையொட்டி வளர்ந்தமை கல்வி வரலாற்றில் பரவலாகக் காணப்படுவது. அண்மைக் காலங்களில், அத்தகைய கல்விச் சிந்தனைகளில் புதிய, புரட்சிகரமான போக்கு உருவெடுத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது.

இவ்விதம் உருவெடுத்துள்ள புதிய சிந்தனைப் போக்கில் கல்வியானது அகல்விரிப் பண்புடையதாய், ஒடுக்கப்பட்டவர்களின்

உயர்வுக்காய், சமூக பேதங்களை மாற்றியமைப்பதற்காய், தற்சார்புத் தன்மை கொண்டதாய், மானிட மேம்பாட்டை உறுதிப்படுத்துவதாய் பல்வேறு ஒளிகளில் மிளிர்கின்றது. இதன் சிற்பிகளாய் பேற்றன்ட் றசல், போலோ பிறெறி, பசில் போர்ண்ஸ்ரீன், இவான் இலிச், மாஓசேதுங், ஜீன் பியாசே கொலின் ரெறி போன்றோர் இயங்கியுள்ளனர். அத்தகைய செம்மல்கள் பதினேழு பேரின் கல்விசார் கருத்துக்களை 'புதிய கல்விச் சிந்தனைகள்' என்னும் இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

இந்நூலாசிரியரின் கவனத்தை ஈர்த்த சிந்தனைகள் தற்கால உலகில் கற்றோர் சமூகத்தில் கருத்தூன்றிய வாதத்தைத் தோற்றுவித்தவை. குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகளிலிருந்து மானிட சமூகத்தின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்த பல்வேறு பிரச்சினைகள் இச்சிந்தனைகளின் மையப் பொருளாகின. மூன்றாம் உலக மக்கள் மத்தியிலும், வறிய மக்களிடையேயும் கல்வி எத்தகைய செயற்பாடு உடையதாக விளங்கவேண்டும் என்பது ஒரு புறத்தில், மறுபுறத்தில் வளர்ந்து விரிந்து செல்லும் நவீன அறிவியல் உலகத்தையும் அறிவியல் நுண்மதியையும் பயன்படுத்தவேண்டிய தேவை. இவற்றுக்கிடையே மனித விழுமியங்களைப் பேணவேண்டிய போற்ற வேண்டிய நிர்ப்பந்தம். எல்லாவற்றுக்கும் மேலாக, வழங்கப்படும் கல்வியானது மக்கள் வாழ்வில் பயன்நிறைந்ததாய் வழங்கப்படுவதை நிலைநாட்ட வேண்டிய கடப்பாடு. இவற்றுள் ஒவ்வொன்றையும் முன்னெடுத்து விளக்குகின்றவகையில் பல பெரியோர்கள் செயற்பட்டுள்ளனர். அவர்களுள் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரின் சிந்தனைகள் இந்நூலில் எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியரின் 'நோக்கு' உட்பட இருபது இயல்களைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகள் பற்றிய இரண்டு இயல்கள் தவிர்ந்த ஏனையவை முன்னர் குறிப்பிட்ட கருத்துக்களை வகுத்துணர்த்திய ஆசான்கள் எடுத்துரைத்த எண்ணக் கருக்களை விளக்குவனவாய் அமைந்துள்ளன. ஒவ்வொரு அறிஞருடைய சிந்தனையையும் ஒவ்வொரு இயலாக ஆசிரியர் நூலை வடிவமைத்துள்ளார். பதினேழாம் பதினெட்டாம் இயல்கள் முறையே ஐ. நா. வின் 'அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்' பற்றியும், யுனெஸ்கோவின் 'அனைத்துலகப் பரிந்துணர்வுக்கான கல்வி' என்ற கோட்பாடுபற்றியும் உரைக்கின்றன. எமது வாழ்நாளில் கல்வி பற்றிய கரிசனையை உலகநோக்கில் வலியுறுத்திய பங்களிப்பில் ஐ. நா. வுக்கும் அதன் கிளைநிறுவனங்களுக்கும் முதலிடம் உண்டு. கல்வியுலகில் அவற்றின் செயற்பாடுகளையும் அச்செயற்பாடுகளில் அடிப்படைத் தத்துவங்களையும் இந்த இயல்கள் இரண்டும் விளக்குகின்றன.

நூலாசிரியர் கலாநிதி சபா. ஜெயராசாவின் ஆற்றலும் ஆளுமையும் இதில் மிளிர்கின்றன. எமது துறையில் கடந்த பதினோர் ஆண்டுகளாக

விரிவுரையாளராகக் கடமையாற்றும் அவர் காலத்துக்கூடாக வளர்த்துக் கொண்ட அறிவின் வெளிப்பாடு இந்நூல் என்பது கவனத்துக்குரியது. கலாநிதி ஜெயராசா, தமக்கே உரிய மொழிநடையில், பல ஆழமான கருவூலங்களை வாசகர்க்கு எளிதாக முனைந்துள்ளார். இந்த முயற்சி கல்வியுலகில் கணிசமான கவனத்தை வளர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர் அமைத்துள்ள இந்த அடிப்படை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் சிந்திக்கவைக்கும். அச் சிந்தனைகளின் பலாபலன்கள் எமது இன்றைய சந்ததியினரை மட்டுமல்லாமல், வருங்காலச் சந்ததியினரையும் வளமூட்டும். தாய்மொழிமூலம் கல்வியை வழங்கும் கோட்பாடு உலகரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இக் காலகட்டத்தில் இதைப் போன்ற நூல்கள் பெரிதும் தேவைப்படுகின்றன. அந்த முயற்சியில் தம்மை அர்ப்பணிக்கும் ஆசிரியர்கள் தமது மொழிக்குமட்டுமல்லாமல் தாம் சார்ந்த துறைக்கும் பெருந்தொண்டாற்றியவராவர். அத்தகையோருள் ஒருவர் என்ற வகையில் சபா. ஜெயராசா அவர்களை நான் பாராட்டுகிறேன். இதைப் போன்ற மேலும் பல நூல்கள் ஆக்கிக் கல்வியுலகினை வளம்பெறச் செய்ய வேண்டுமென அவரை வாழ்த்துகிறேன்.

**வ. ஆறுமுகம்**
கல்வியியற் துறை,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம்

1. எமது நோக்கு - பன்முகக்கல்வியியற் கோட்பாடு ........ 9

2. போலோ பிறேறி - ஒடுக்கப்பட்டவர்களுக்கான கற்பித்தலியல் ........ 14

3. அல்துஸ்சர் - உழைப்புவலுவை மீள் உற்பத்தி செய்வதற்கான கல்வி ........ 19

4. இவான் இலிச் - பள்ளிக்கூடக்கலைப்புச் சமூகம் ........ 23

5. பேற்றண்ட்ரசல் - அகல்விரிப்பண்புடைய பயன் கொள் கல்வி ........ 27

6. ஜீன் போல் சார்தர் - இருப்பியத்துக்கான கல்வி ........ 32

7. விற்யென்ஸ்ரின் - அளவைசார் புலனறிவாதத்துக்குரிய கல்வி ........ 37

8. பசில் பேர்ன்ஸ்ரின் - மொழியும் வர்க்கமும் கல்விக்கையளிப்பும் ........ 41

9. நியெறெறே - தற்சார்புக்கான கல்வி ........ 45

10. ஜெரோம் புறூனர் - எந்தப்பாடத்தையும் எந்தப்பிள்ளைக்கும் எந்த நிலையிலும் நேர்மை பெறக்கற்பித்தல் ........ 49

11. மாஓசேதுங் - சமூகத்தையும் இயற்கையையும் மாற்றியமைப்பதற்கான கல்வி ........ 53

12. கார்ல் ரொஜர்ஸ் - கல்வியில் மானுடக் கோட்பாடு ........ 57

13. ஜீன்பியாசே - பிறப்புநிலை சார்ந்த அறிவாய்வியல் ........ 61

14. அல்பேற் பண்டுறா - சமூகக்கற்றற் கோட்பாடு ........ 66

15. கொலின் ரெறி - பள்ளிக்கூடங்களில் நுண்கணிப்பொறிகளைப் பயன்படுத்தும் புரட்சி. ........ 71

16. மாரியா மெயிஸ் - பெண்ணியக்கல்வி ........ 77

17. ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வளர்வுறும் நாடுகளுக்கான கல்விமுன்னுரிமைகள் ........ 82

18. யுனெஸ்கோ - அனைத்துலகப்புரிந்துணர்வுக்கான கல்வி ........ 86

19. ஜோன்பேர்குசன் - வான் பல்கலைக்கழகம் ........ 91

# எமது நோக்கு பன்முகக் கல்வியர் கோட்பாடு

மனிதருக்கும் - இயற்கைக்கும், மனிதருக்கும் - மனிதருக்குமிடையே நிகழ்ந்து வரும் இடை வினைகளின் தொடர்ச்சியானது கல்வியின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் இருந்து வருகின்றது. கல்வி வலுவானது, ஊடல் வலு, உளவலு என்பவற்றுடன் இணைந்து உலகின் ஆற்றலை கட்டமைப்புச் செயயத் தொடங்கியுள்ளது. சிக்கலான இந்தச் செயல்முறையில் மனிதக் கோலங்கள் பன்முகமாகின்றன. நேர் விளைவுகளும் எதிர் விளைவுகளும் சம நேரத்தில் உருவாக்கப்படுகின்றன. இந்நிலையில் மனிதருக்கும் இயற்கைக்குமான தொடர்புகளை நெறிப்படுத்தல், மனிதருக்கும் மனிதருக்குமிடையேயுள்ள உறவுகளை நெறிப்படுத்தல் என்பவற்றிற் கல்வி பன்முகமான பங்கை ஏற்க வேண்டியுள்ளது. இவற்றின் பின்புலத்தில் "பன்முகக் கல்வியியற் கோட்பாடு" (The Theory of Multi Faceted Education) என்பது முன்வைக்கப் படுகின்றது.

கல்வியானது இயற்கை மீதான பொருள் நிலை உறவுகளை நெறிப்படுத்தி வருகின்றது. இயற்கை வளங்கள் பன்முகப்பட்டவை - இந்நிலையில் வளங்களைப் பயன்படுத்தும் தருக்க முறைகள் பன்முகப் பட்டவையாக வளர்க்கப்பட வேண்டியிருப்பதால் கல்வி முறைமையும் அளவிலும் பன்பிலும் பன்முகமாக்கப்பட வேண்டியுள்ளது. இயற்கை யானது மனித முயற்சியினால் தீவிரமாகச் சுரண்டப்படும்பொழுது இயற்கைச் சமநிலை தாக்கப்பட்டு எதிர்விளைவுகள் பெருக்கெடுக்கத் தொடங்கும். இந்நிலையில் இயற்கை விதிகளைக் கற்றலும் அவற்றைச் சரியாகப் பயன்படுத்துதலும் கல்வியில் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

மனிதமேம்பாடு இயற்கை வளங்களுடன் சமூக வளங்களுடனும் ஒன்றிணைந்துள்ளது. இந்நிலையில் உற்பத்தி விசைகள் (Productive forces), உற்பத்தி முறைமைகள் (Production relation) என்பவற்றில் கல்வி கவனம் செலுத்தவேண்டியுள்ளது. சமூகவளர்ச்சிக்கட்டங்களில் வெவ்வேறு பட்ட உற்பத்தி முறைகள் இயங்கி வந்துள்ளன. உற்பத்திவிசைகள் மனிதவளத்தாலும், மனித ஆற்றலாலும், பொருத்தமான கல்வி ஒழுங்கமைப்பினாலும் தீர்மானிக்கப்படுகின்றன.

உற்பத்தி முறைமை மாற்றமடையும் பொழுது, உற்பத்தி விசைகள் நிலைமாற்றமடைந்தும் பன்முகப்பட்டும் வந்துள்ளன. விவசாய நிலத்தை முதன்மையாகக் கொண்ட உற்பத்தி முறைமை மாற்றமடைந்து, தொழிலாக்கம் மேம்படத்தொடங்க மனித உடலுழைப்புச் செயல் முறையிற் கணிசமான பங்கு இயந்திரங்களிடம் விடப்பட்டன. உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அளவிலும் பண்பிலும் இன்று பன்முகமாக்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வேகமாக மாற்றியமைக்கப்படுகின்றன. மேலும் சிக்கலான பண்புகள் தோன்றுகின்றன. "அதிக அளவிலும், சிறந்த தரத்திலும்" என்றவாறு உற்பத்தி முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. ஒரு பொருளில் இருந்து இன்னொரு பொருளுக்கான நிலை மாற்றம் வேகமாக நிகழ்ந்து வருகின்றது.

சமகாலக் கல்வி வளர்ச்சியும் விஞ்ஞான, தொழில்நுட்ப விசைகளும் வாழ்வில் பன்முக மட்டங்களிலும் அறிவுத்தொகுதியிலும் நிலைமாற்றங் களை ஏற்படுத்திவருகின்றன. இவற்றின் பின்புலத்தில் அறிவுத்துறைகளுக் கிடையே புதிய இணைப்புகளும் புதிய வேறு பிரித்தலும் (Differentation) விரைந்து தோன்றி வருகின்றன. அவற்றுக்கிடையே முரண்பாடுகளும் தொடர்ந்து இயங்குகின்றன.

மிகவும் சிக்கலடைந்த தொகுதிகள் பற்றிய பன்முக ஆய்வுப் புலங்களை உருவாக்கி வருகின்றன. இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், தொழில் நுட்பவியல், முதலிய புலங்களுக்கிடையே ஒன்றிணைப்பை ஏற்படுத்தி உற்பத்தி மேம்பாட்டை முன்னெடுக்க வேண்டியள்ளது. அறிவு முன்னேற்றம், சமூக வளர்ச்சி முதலியவை, பன்முகப் பண்புகளை (Multiple Aspects)த் தொடர்ந்து உருவாக்கிவருகின்றன. இன்றைய நகரவளர்ச்சியினை ஆராயும் பொழுது பன்முகப் பண்புருவாக்கத்தின் நேர்முக, எதிர்முகப் போக்குகளை விளங்கிக் கொள்ளலாம்.

சமூக மாற்றங்கள் தனிமனிதர்மீது முடிவில்லாச் செல்வாக்குகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. வேலை, வாழ்க்கை நிலை, உணவு, இல்லம், பொழுது போக்கு, கல்வி, கலைநுகர்வு முதலிய துறைகளிலே பன்முகப்பெருக்கங்கள் ஏற்பட்டுவருகின்றன.

அறிவின் பன்முகப்பட்ட வளர்ச்சியையும், புதிய திருப்பங்களையும், பின்வரும் எடுத்துக்காட்டுகள் புலப்படுத்தும்.

1 . 18 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் 150 ஆக இருந்தன. 19ஆம் நூற்றாண்டில் அவை 450 ஆக உயர்ந்தன. 20 ஆம் நூற்றாண்டில் 10,000க்கு மேல் உயர்ந்தன.

2 . 16 ஆம் நூற்றாண்டுகளில் மனிதரால் கண்டறியப்பட்ட இரசாயன தனிமங்கள். 10 ஆகஇருந்தன. 18 ஆம் நூற்றாண்டில் அவை

12 ஆக உயர்ந்தன. 19 ஆம் நூற்றாண்டில் அவை 32 ஆக உயர்ந்தன. 20 ஆம் நூற்றாண்டில் ஐசதோப் உட்பட அவை 100க்கு மேல் உயர்ந்துள்ளன. (விக்டர் கேவ்டா - 1981, ப. 232)

ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவரப்படி முன்னர் பயன்படுத்தப்படாத உற்பத்திப் பொருள்கள் பத்து இலட்சம் வரை இன்று உலகில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை கைத்தொழில்கள், விவசாயம் போன்றவற்றின் சாதாரண இயக்கத்துக்குரிய தவிர்க்க முடியாத பொருள்களாகி விட்டன. விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளில் மட்டுமல்ல கலை இலக்கிய ஆக்கங்கள், அறிவுசார் எழுத்தாக்கங்கள், முதலியவற்றிலும் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுவருதல் அறிவின் பன்முகப்பாட்டை விளக்குகின்றது.

பன்முகக் கல்வியியற் கோட்பாட்டின் அடிப்படையாக எழும் அறிகை முறைமை, "அறிகைச் சிக்கல் அமைப்பாக்கம்" (Cogno-Complex Formation) எனப்படும். அதாவது வினைத்திறன் மிக்க விளைவுகளை உருவாக்கும் வேளை செயல் முறையானது இயல்பாகச் சிக்கலடையும் என்பது இக்கோட்பாட்டின் அடிப்படை. தாழ்ந்த உயிரினங்களிலும் பார்க்க மனித மூளை அதிக சிக்கலடைந்து இருப்பதற்குக் காரணம் கூடிய விளைவுகளை ஏற்படுத்துவதற்கேயாம். சிக்கல் அமைப்பாகத்தினை தொழில் நுட்பவழிகளாலும் விளக்கலாம். உதாரணமாக, எருதுகளைப் பயன்படுத்திக் கலப்பையால் வயலை உழுவதிலும், இயந்திரத்தினால் உழுதல் கூடிய பெருக்கத்தை ஏற்படுத்தும். இயந்திரத்தின் செயல் பாரம்பரிய உளவு முறையிலும் சிக்கலான அமைப்பைக் கொண்டது. அதாவது விளைவுப் பெருக்கத்தை ஏற்படுத்தும் பொழுது செயல்முறை முன்னரிலும் சிக்கலடையும். புலக்காட்சி கொள்ளல், ஒழுங்கமைத்தல், அணுகுமுறைகளை வகுத்தல், அறிகை அமைப்பாக்குதல் முதலியவற்றின் பெறுபேறுகளை அதிகரித்து மேம்படுத்த வேண்டுமாயின் செயல் முறைகளைச் சிக்கலாக்கும் தேவை எழுவதை உணரமுடியும்.

பன்முகக்கல்வியியற் கோட்பாட்டுக்குரிய கலைத்திட்டம் பின்வரும் தொகுதிகளை உள்ளடக்கியதாக அமையும்.

1. மொழித் தொகுதி - இதில் தாய்மொழி, உலகமொழி, அயல்மொழி, உலக மொழிகளின் பன்முகப்பாங்கு, ஒற்றுமைப்பாங்கு, மொழிஒப்பியல் முதலியவற்றைக் கற்பிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

2. கணிதம், அளவையியல், விஞ்ஞான முறையியல், புள்ளி விவரவியல் முதலியவற்றை உள்ளடக்கிய காரணங்காணும் தொகுதி.

3. இயற்கை விஞ்ஞானத்தொகுதி.

4. சமூக விஞ்ஞானத் தொகுதி

5. அழகியற் தொகுதி.

6. உடற் கல்வியை உள்ளடக்கிய தொழில் நுட்பத் தொகுதி.

7. மெய்ஞானத் தொகுதி - இதில் சமயம், சமயங்களின் பன்முகப்பாடு, வேற்றுமையில் ஒற்றுமை, ஒப்பியல் சமமயவிழுமியங்கள் முதலியவற்றைக் கற்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

8. பன்முகமாகிச் செல்லும் அறிவுக் கோலங்களின் மத்தியில் யாதாயினும் ஒரு நுண் துறையைத் தெரிவு செய்து கற்றல். - இடைநிலை மட்டத்திலிருந்து இத்தொகுதி படிப்படியாக விருத்தி செய்யப்படும். சமூகத்தில் உள்ள பல்துறை ஆற்றல் மிக்கோரின் பணிகள் இத்துறையில் ஒருங்கிணைக்கப்படும், ஆற்றுப்படுத்தலும், சீர்மியமும் (Counseling) இத் தொகுதியோடு இணைக்கப்பட்டிருக்கும்.

பன்முகக் கல்வியியற் கோட்பாட்டுக்குரிய அசிரியர் இயற்கை விதிகள், சமூக விதிகள், முரண்பாடுகள், வேறு பிரித்தறிதல் முதலியவற்றை அறிந்த இயல்பினராகியிருத்தல் வேண்டும். அறிவின் சிக்கலாகும் பண்பு பற்றிய தெளிவு ஆசிரியருக்கு இன்றியமையாதது. சிக்கலும், சுரண்டலும் மிக்க சூழல் பற்றிய விளக்கம், பிறழ்நிலை செயற்பாடுகளை மாற்றி அமைக்கும் அறிவு, வாழ்வின் மனிதமலர்ச்சி (The Humaneness of life) பற்றிய அறிவு ஆசிரியர்க்கு வேண்டப்படுகின்றது. எவற்றை நன்றாகச் செய்ய முடியுமோ அவற்றை மேலும் நன்றாகச் செய்து முடிப்பதற்குரிய அறிவுப்புலமும் ஆன்மிக பலமும் அசிரியருக்கு அவசியமாகின்றது. பலதுறைகளிலும் பரந்த அறிவும், சில துறைகளில் ஆழ்ந்த அறிவும் ஆசிரியர்க்கு அணிகலன்களாகும். ஒரு துறையில் தேவைப்படும்பொழுது ஆழ்ந்த அறிவைத் தேடும் திறனும் ஆசிரியருக்கு வேண்டும்.

அறிவு தொடர்பான ஒரு "வளநிலையர்" ஆகவும், ஆற்றுப்படுத்தல் சீர்மியம் முதலியவற்றில் ஈடுபடும் ஆற்றலும் கொண்டிருத்தல் ஆசிரியப் பணிக்குரிய பரிமாணங்களாகும்.

இக் கோட்பாட்டுக்குரிய சிறப்பார்ந்த கற்பித்தல் முறையாக "இருதள அணுகுமுறை" (Dual Plane approach) விளங்குகின்றது. அதாவது வகுப்பறை இரண்டுதளங்களைக் கொண்டு செயற்படும். முதலாவது தளத்தில் மாணவரது இயல்புக்கும், பாட உள்ளடக்கத்துக்கும் எற்றவாறு பொருத்த மான முறையியல்களையும், நுட்பவியல்களையும் பயன்படுத்தி ஆசிரியர் கற்பிப்பார். கற்பித்தல் முடிவிலே ஆசிரியரும், மாணவரும் அடைவை மதிப்பீடு செய்வார்கள். குறித்த அலகில் போதுமான அடைவைப் பெற்ற மாணவர்களுக்கு பாடத்துறையோடு தொடர்புடைய ஓர் உயர் நிலை ஒப்படை அல்லது செய்திட்டம் தரப்பட்டு வகுப்புக்கு வெளியே அருகில் உள்ள ஆய்வு கூடம் நூலகம் வளநிலையம் என்பவற்றுக்கு மாணவர் அனுப்பப்படுவர்.

போதுமானஅடைவைப் பெறாது எஞ்சியுள்ள மாணவர்க்கு ஆசிரியர் சிறப்பார்ந்த கவனம் மேற்கொண்டு பிணி நீக்கல் உபாயங்களைக் கையாண்டு மீண்டும் கற்பிப்பார். பாடமுடிவில் இரு தொகுதி மாணவரும் ஒன்று சேர்ந்து அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் முறையே இருதள அணுகு முறையாகும். இக்கோட்பாட்டின் வழியாக இரண்டு விதமான மதிப்பீட்டு முறைகள் முன்னெடுக்கப்படு கின்றன. ஒன்று - மாணவர் தம்மைத்தாமே உற்று நோக்கும். "தன் மதிப்பிடு", மற்றையது ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் புறநிலை மதிப்பீடு.

மேற்கூறியவற்றின் பின்புலத்திற் பன்முகக் கல்வியியற் கோட்பாட்டினை நடைமுறை ஆய்வுகளின் வழியாக மேலும் வளம்படுத்தலாம்.

# போலோ பிறேறி:
# ஒடுக்கப்பட்டவர்களுக்கான கற்பித்தலியல்

**க**ல்விச் செயல்பாடுகளின் துருவப்பாடுகளை "ஒடுக்குவோர்", "ஒடுக்கப்படுவோர்" என்ற எண்ணக்கருக்களின் வாயிலாக இலத்தீன் அமெரிக்காவின் சுரண்டல் முறைமையினை ஆதாரமாகக் கொண்டு போலே பிறேறி விளக்கினார். மூன்றாம் உலக நாடுகளின் கல்வி முறைமை நீண்டகாலக் குடியேற்ற நாட்டுச் சுரண்டல் முறையின் சோகமான வெளிப்பாடுகளாக இருத்தலை அவர் சுட்டிக்காட்டினார்.

அவலமான கல்விமுறைக் கோலங்களை விளக்குவதற்கு அவர் முதலில் "வங்கி முறைமை எண்ணக்கரு" (The Banking Concept of Education) என்பதைப் பயன்படுத்தினார். ஒடுங்குவோர் தமக்குச் சாதகமான முறையிலே அறிவை ஒடுக்கப்படுவோரில் "வைப்புச் செய்தல்" இங்கு முதன்மை பெறுகின்றது. அந்தக்கல்வி நலிந்ததாகவும், புத்தாக்கம், புதிய கண்டு பிடிப்பு, படைப்பாற்றல் அற்றதாகவும் ஒடுக்கப்படுவோரை மேலும் பலவீனப்படுத்துவதாகவும் உள்ளது. ஆசிரியர் "தமக்குத் தெரிந்தவற்றை" மாணவர்களிடத்து வைப்புச் செய்கின்றனர். ஒடுக்குமுறைக்குச் சாதகமாகும் அவ்வகை வைப்புச் செய்தல், மாணவரின் சுயாதினப் பண்புகளை உடைத்து விடுகின்றது. அவர்களின் ஆன்ம பலத்தை குலைத்து விடுகின்றது. படைப்பாற்றலை ஒடுக்கிவிடுகின்றது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கான கல்வியிலே பின்வரும் பண்புகள் காணப்படும்.

1. ஆசிரியர் தமக்குத் தெரிந்த அறிவை வழங்குபவராயும் மாணவர் எவ்வித விமர்சனப் பாங்குமின்றி அப்படியே அறிவை உள் வாங்குபவராகவும் உள்ளனர்.

2. ஆசிரியருக்கு எல்லாம் தெரியும். ம்ாணவருக்கு ஒன்றும் தெரியாது.

3. ஆசிரியர் சிந்திக்கும் அதே வழியில் மாணவரும் சிந்திக்கும்படி கற்பிக்கப்படுகின்றனர்.

4. ஆசிரியர் பேசுவார் - மாணவர் கேட்கும்படி ஆக்கப்பட்டவர் ஆகின்றனர்.

5. ஆசிரியர் ஒழுக்கத்தை நிறுத்துபவராகவும், மாணவர் அவ்வழி ஒழுகுபவராகவும் உள்ளனர்.

6. ஆசிரியர் தெரிவுசெய்து வலியுறுத்துபவராகவும், மாணவர் அவற்றை எற்பவராயும் உள்ளனர்.

7. மாணவர் ஆசிரியரின் செயற்பாட்டு நடிப்புகளைப்பார்த்துத் தாமும் நடிக்கும் மாயைத் தோற்றத்தை வெளிப்படுத்துகின்றனர்.

8. மாணவரோடு கலந்தாலோசிக்காது ஆசிரியர் உள்ளடக்க நிகழ்ச்சித் திட்டத்தைத் தெரிவு செய்கின்றார். மாணவர் அதை எதுவிதத் திறனாய்வுமின்றி பின்பற்றல் வேண்டும்.

9. அறிவு மேலாதிக்கம், வாண்மை மேலாதிக்கம் என்பவற்றைப் பயன்படுத்தி ஆசிரியர் செயற்படும் பொழுது அவை மாணவரின் சுதந்திரத்துக்கு எதிராகவுள்ளன.

10. கற்பித்தல் செயற்பாட்டின் அகப்பொருளாக ஆசிரியரும் புறப்பொருளாக மாணவரும் உள்ளனர்.

தம்மீது வைப்புச் செய்யப்பட்ட யதார்த்தம் பற்றிய உடைந்ததும், திரிபுபட்டதுமான அறிவை வைத்துக் கொண்டு மாணவர் உலகை விளங்க முயற்சிக்கின்றனர். ஒடுக்கப்படுபவர்களின் தேவைக்கு ஏற்றவாறு மாணவர்கள் முகாமை செய்யப்படுகின்றனர். ஒடுங்குபவர்களுக்குச் சாதகமாக அமையக்கூடிய "உள்நிலை உணர்வு" (Consciousness) மாணவரிடத்தே உருவாக்கப்படும். உறுதி செய்யப்பட்டும் வருகின்றது. இந்நிலையில் அவர்கள் மீது மோலாதிக்கம் செலுத்தல் இலகுவாகின்றது.

ஒடுக்கப்படுவோருக்கான கல்வியில் மாணவர் தம்மீது பதிவு செய்யப்பட்ட அறிவின் வாயிலாக நடப்பியல் முரண்பாடுகளை அறிந்து கொள்ள முடிவதில்லை. "எதிர் மானுடப்படுத்தல்" என்ற பண்பு இந்தக்கல்வி முறையின் கருத்தை உள்வாங்கும் பார்வையாளர்களாக உருவாக்கப் படுகின்றார்களேயன்றி மீளாக்கம் செய்யும் திறன்கள் உடையவர்களாக வடிவாக்கப்பட்டிலர்.

அடாத்து மிக்க உலகை மாற்றியமைக்கும் வல்லமை அவர்களிடத்து உருவாக்கப்படுவதில்லை. மாறாக அவற்றுக்கிடையே இசைவாக்கம் செய்து பொருந்தி வாழ்வோராக உருவாக்கப்படுகின்றனர்.

எறிக் புறெம் (Eric Fromm) மிகுந்த செறிவுடன் உருவாக்கிய உளவியற்கருத்துக்கள் பிறேறி மீது செல்வாக்குச் செலுத்தின. மார்க்சீயம்,

பிராய்டிசம் ஆகிய இரண்டு பெரும் அறிவு விசைகளும் முரண்பட்டவை என்ற கருத்து வேரூன்றியிருந்த காலகட்டத்தில் புறொம், அவை இரண்டினுக்குமிடையே ஒப்புமைகளையும் இசைவுகளையும் இனங்கண்டு வெளிப்படுத்தினர். மனித இயல்புகளை அடியொற்றி இரண்டு பெரும் வகைப்படுத்தலை புறொம் மேற்கொண்டார். அவை,

1. பயோபிலி வகையினர் அல்லது இயல்புமனிதம் (Biophily) கொண்டோர்.

2.நெக்ரோபிலி அல்லது பிறழ்வு மனிதம் (Necrophily) கொண்டோர்.

பிறழ்வு மனிதம் கொண்டோர் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் விரும்பாதவர்கள். மனிதர்களை வெறும் பொருள்களாகக் கருதுபவர்கள். வாழ்க்கையைப் பொறிமுறைச் செயற்பாடாக உணர்பவர்கள். அனுபவங்களை விட்டு வெறும் பொறிமுறையாக அறிவதை விரும்புவார்கள். தாம் வைத்திருக்கும் யாதாயினும் பொருள்மீது கண்டனம் விடுக்கப்படும் பொழுது, அவற்றைத் தம்மீது விடுக்கப்படும் கண்டனமாக உள்வாங்குபவர்கள். இவ்வாறாக விரும்பத்தகாத இயல்புகள் பல பிறழ்வு மனிதத்தில் காணப்படும் என புறொம் விளக்கினார். ஒடுக்கப்பட்டவர் களுக்கான வங்கி முறைமைக் கல்வியில் பிறழ்வு மனிதமே கட்டியெழுப்பப் படுகின்றது என்பது பிறேறியின் கருத்து.

ஒடுக்குவோரது கருத்தியல், கற்பித்தலின் வழியாகக் கருத்தேற்றம் செய்யப்படுகின்றது. விடுதலைக்குரிய உபாயங்களைச் சிந்தித்தல் தடுக்கப்படும் வகையிலே சிந்தனை முறைமை ஊக்குவிக்கப்படுகின்றது. தவறான ஆற்றுப்படுத்தல் நடவடிக்கை ஒவ்வொரு கட்டங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில் நடப்பியல் நிலவரங்களை ஆழ்ந்து சிந்திப்பவர்கள் அந்நியமாதலை விடுவிக்கும் கல்வி பற்றியும், எதிர் மானுடப்படுத்தலை ஒழிக்கும் கல்வி பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. வங்கி முறைமைக் கல்வியை" உடனடியாகத் தள்ளுபடி செய்தல் வேண்டும். உரைகாரராக தாம் அறிந்தவற்றை நடைமுறைப்பாங்கின்றி வாய்மொழிக் கோபுரங்களாக அமைக்கும் ஆசிரியத்துவக் கோலங்களை மாற்றியமைத்தல் வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழி "பிரச்சினை முற்கவிப்பு" (Problem Posing) கல்வியை முன்னெடுத்தலாகும்.

பிரச்சினை முற்கவிப்புக் கல்வியானது மனித அகநிலை உணர்வுகளுக்கு இசைவுதல் தருவதாக அமையும். ஆக்கத்திறன் அற்ற தொடர்பாடலை அது வேண்டும் என்றும் திட்டமிட்டும் குலைத்து விடுகின்றது. அகநிலை உணர்வுகளுக்கு உணர்வை ஊட்டும் கல்வியாக அது மாற்றப்படுகின்றது. கருத்துக்களையும் பரப்புரைகளையும் பரிமாற்றம் செய்வதல்ல, அறிகை முயற்சிகளை வளர்க்கும் செய்பாடாக மாற்றம் பெறுதலுக்கு இடமளிக்கப்படும்.

ஆசிரிய மாணவ முரண்பாடுகளை பிரச்சினை முறிகவிப்புக் கல்வி ஒழித்துவிடுகின்றது. "மாணவருக்காக ஆசிரியரும்" "ஆசிரியருக்காக மாணவரும்" என்ற நடப்பியல் தருக்க முறைமை முன்னெடுக்கப்படும். ஆசிரியர் இயந்திரப்பாங்கான உரைகாரராக இருக்கமாட்டார். மாணவரும் ஆசிரியரும் வளர்ச்சியடைகின்ற செயல்முறையின் பங்காளிகளாக செயற்படுவர். ஆசிரியரின் மேலாத்திக்க அதிகாரத்துக்கு அங்கு இடமில்லை. கூட்டுறவும் புரிந்துணர்வும், அறிகைச் செயல் முறையும் ஒன்றிணைந்து இடம்பெறும். ஆசிரியர் சொல்வதை விளக்கமின்றி மனனம் செய்யும் ஒருதலைப்பட்சமான முறைமை கைவிடப்படும்.

மாணவரின் செயல்பாடுகளின் வழியான அறிகை முன்னெடுக்கப் படும். மாணவரின் துலங்கல் முறைமைக் கேற்றவாறு ஆசிரியர் தம்மிடத்து நேர்முகமான மாற்றங்களையும் கருத்துத் தெறிப்புக்களையும் (Reflections) உருவாக்கிக் கொள்ளுதலே மேம்பாடானது. ஆசிரியரும் மாணவரும் ஒன்றிணைந்து பிரச்சினைக் கூறுகளைப் பகுத்து ஆராய்தல் ஊக்கு விக்கப்படும். கற்பிக்கும் பொருளை மாணவர்களிடத்துச் சமர்ப்பித்து, மாணவர்களின் துலங்கலைத்தூண்டி, ஈடுபடச் செய்து ஆசிரியர் தமது முன்னைய கருத்துக்களை மீள் பரிசீலனை செய்தல் உற்சாகமளிக்கப்படும்.

பிரச்சினை முறகவிப்புக் கல்வியில் நடப்பியல் மீது தொடர்ந்து ஒளிபாய்ச்சப்படும். உலகின் சவால்களுக்கு எவ்வாறு துலங்குதல் என்பது பற்றிய பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்து அறியப்படும். ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் முழுமையான சந்தர்ப்பத்தையும், பின்புலத்தையும், அறிதல், இடைத்தொடர்புகளைப் புரிந்து கொள்ளல், திறனாய்வுப் பாங்குடன் விளங்குதல் முதலியவை முன்னெடுக்கப்படும். மாணவர் தம்மை விலகியோராகக் கருதாது, பங்காளிகளாகக் கருதும் அகநிலை உணர்வுமேலோங்கித் தொடங்கும், ஒடுக்கப்படுவதற்கான கல்வி விடுதலைக்கான கல்வியாக மாற்றியமைக்கப்படும்.

உலகு என்பது மனிதரிலிருந்து வேறுபட்டதன்று. மனிதர் தனிமானங்கள் (Isolated) அல்லர். மனிதர் எதிலும் இணைக்கப்படாது தனித்து நிற்பவரும் அல்லர். மனிதர் இன்றி உலகுஇல்லை-இவ்வாறான கருத்துச் செறிவின் வழியாக மனிதரது புலக்காட்சிகள் நடப்பியலுடன் இணைந்து விரிவடைதல் வேண்டும். உலகின் நடப்பியல், அதன் மாற்றமுறும்இயல், ஆக்க நிலைமாற்றம் என்பவற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்பு பிரச்சினை முறகவிப்புக் கல்வியினால் கிடைக்கப் பெறுகின்றது. உலகை அறிந்து கொள்ளும் விதத்திலேதான் மனிதரின் செயற்பாடுகளும் எதிர்ப் பண்புகளை மாற்றியமைக்கும் குணவியல்புகளும் வளர்ச்சியடைகின்றன. இந்நிலையில் ஆசிரியரும் மாணவரும் நிகழ்மிய வடிவிலான சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் தம்முள்ளே முகிழ்த்தெழச் செய்தலே சிறப்புடையது.

வங்கி முறைமைக் கல்வி உருவாக்கிய தொன்மங்கள் பிரச்சினை முற்கவிப்புக்கல்வியால் மாற்றியமைக்கப்படும். நேர்வியம் கண்டறிவதற்கான உரையாடலை பிரச்சினை முற்கவிப்புக் கல்வி முன்னெடுக்கப்படும். மனிதரின் வரலாற்று இருப்பை அது உணர்த்திய வண்ணம் செயற்படும். மனித வரலாற்றை முன்னோக்கி அசைப்பதற்கான உபாயமாக அது அமையும். மனித மேம்பாட்டின் அசைவில் இடம் பெறும் ஒவ்வொரு கட்டத்திலும் நிகழும் பிரச்சினைகள் பற்றிய தெளிவான அறிவு ஊட்டப் படும். ஒத்துழைப்பு, கூட்டுறவு, புரிந்துணர்வு என்பவற்றின் அடிப்படை யாகவே மனிதப் பண்புருவாக்கம் நிறைவு படுத்தப்படும். தனித் திருப்பதாலும், சுய நலத்தினாலும் அதனை அடைய முடியாது. மனிதர் மனிதரிலிருந்து அந்நியப்படுதலும், மனிதர் அறிவிலிருந்து அந்நியப் படுதலும், தவிர்க்கப்படும். தமது முயற்சியால் மனிதர் தம்மீது சுமத்தப் பட்டுள்ள எதிர்மறை அழுத்தங்களை உடைத்தெறியும் ஆற்றல்கள் கல்வியின் வாயிலாக வளர்த்தெடுக்கப்படும்.

குடியேற்ற நாட்டு ஆட்சியின் ஆதிக்க முறைமையோடு இணைந்த ஒடுக்குமுறைக் கல்விச் செயற்பாட்டினை பிறேறி "வங்கி முறைமை" என்ற எண்ணக்கருவினால் விளக்கினாராயினும், அவர் மிகவும் துருவப் பாடான நிலையில் நின்று அதனை அணுகினார். அதாவது அக்கல்வி முறைமையிலே உட்பொதிந்திருந்த நேர் பண்புகளை நோக்காது, ஒரு பக்கச் சார்பாக நின்று எதிர்ப்பண்புகளை மட்டுமே நோக்கினர் என்பது அவர் மீது சுமத்தப்படும் கண்டனமாகவுள்ளது.

# அல்துஸ்சர் - உழைப்பு வலுவை மீள் உற்பத்தி செய்வதற்கான கல்வி

மார்க்சிய சிந்தனை மரபுகளை அடியொற்றி அமைப்பியற் கண்ணோட்டத்திற் கல்விச் செயற்பாடுகளை லுயி அல்துஸ்சர் அணுகினார். நவீன கல்வியின் எதிர்மறைக் குணவியல்புகளை விளக்குவதற்கும், கல்விசார் போராட்டங்களைத் திறனாய்வு செய்வதற்கும் தவிர்க்க முடியாத ஒரு கருத்துருவமாக "அமைப்பியற் கோட்பாடு" அல்லது கட்டமைப்பு வாதம் அமைந்தது. இறுகிய மார்க்சீயக் கோட்பாட்டிற் காணப்பட்ட சுருக்கிய அழுத்தம் (Reductionism) அமைப்பியற் கோட்பாட்டிற் காணப்படவில்லை.

1965 ஆம் ஆண்டில் அல்துஸ்சரின் முதல் நூலாகிய ("FOR MARX") பிரஞ்சிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டது. மார்க்சிய சிந்தனைகளைப் புதிய கருத்தாடல் நிலைகளுக்கும் தளங்களுக்கும் இழுத்துச் செல்வதற்கு அந்நூல் துணை செய்தது. சிறப்பாக மொழியில், உளவியல் தளங்களிலே மார்க்சிசத்தை வலிமையாக உலாவ விடுவதற்குரிய நெடுஞ்சாலைகளை அந்நூல் ஏற்படுத்தியது.

அல்துஸ்சரத் சிந்தனைகளில் "நடைமுறை" அல்லது செயல் மானம் (Practice) சிறப்பார்ந்த இடத்தைப் பெற்றது. செயல் மானம் என்பது ஒரு குறிப்பிட்ட மூலப்பொருளை இன்னொரு குறிப்பிட்ட பொருளாக மாற்றும் செயலைக் குறிக்கும். இந்த மாற்றம் மனித உழைப்பால் நிகழ்த்தப்படுகின்றது. மாற்றப்படும் செயல் முறையே இங்கு முனைப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. இது பொருள் நிலைப் பண்பும், பன்முகத்தன்மையும் கொண்டது.

ஒரு சமூகத்தின் கூட்டு மொத்தமான செயல்மானம் பல்வேறு சிறு சிறு செயல்மானங்களினால் ஆக்கப்படுகின்றது. இந்தச் சிறுசிறு செயல்மானங்கள் தமக்குரிய தளங்களையும், விதிகளையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு செயல் மானத்துக்கும் தனித்துவமான அமைப்பியல் தன்மைகள் உண்டு. அல்துஸ்சர் நான்கு வகையான செயல்மானங்களை இனங்காட்டினார் அவை -

1. பொருளாதார செயல்மானம்
2. அரசியற் செயல்மானம்
3. கருத்துவருவச் செயல்மானம்

4. கோட்பாட்டுச் செயல்மானம்

ஒவ்வொரு செயல்மானமும் யாதாயினும் ஓர் அடிப்படைப் பொருளை சில முறைகளைப் பயன்படுத்தி, மனித உழைப்பால் மாற்றி யமைத்து விடுகின்றது. செயல்மானத்தில் மனித உழைப்பும், முறையியலும் (Method) என்ற இரண்டு பிரதான விசைகள் பங்குபற்றுகின்றன. இதனால் செயல்மானமும் ஓர் உற்பத்தியாகின்றது.

இவற்றின் பின்புலத்தில் ஒவ்வொரு பிரச்சினைகளையும், பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை, கருத்துருவப் பிரச்சினை, கோட்பாட்டுப் பிரச்சினை என்று பார்க்க வேண்டியுள்ளது. ஒவ்வோர் அமைப்புக்குமுரிய அடிப்படைப் பொருளும், உழைப்பு முறைமையும் வேறுபடுவதனால் அவற்றின் நிறைவுப் பொருளும் வேறுபடும்.

பல்வேறு வகைப்பட்ட முரண்பாடுகளையும் நுணுகி ஆராய்ந்த அல்துஸ்சர் அவை பல்வித அடுக்குகளைக் கொண்டதென்றும், பல முரண்பாடுகளை ஒருங்கிணைப்பது ஓர் அமைப்பு என்றும் அதன் பண்புகள், பிற முரண்பாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் தன்மையது என்றும் குறிப்பிட்டார்.

பல்வேறு விதமான முரண்பாடுகள் மீது மேலாதிக்கம் செலுத்தும் முரண்பாட்டை "மேல்நிலைத் தீர்மானிப்பு முரண்பாடு" (Contradiction Over Determined) என்று அவர் குறிப்பிட்டார். அவ்வாறே "மேலாதிக்க அமைப்பு" (Structure in Dominance) என்பதைப் பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமூகத்தில் காணப்படும் பல முரண்பாடுகள் ஒன்றிணையும் பொழுது புரட்சி சாத்தியமாகின்றது. அரசியல் முரண்பாடு, பொருண்மிய முரண்பாடு, கல்வியியல் முரண்பாடு, பண்பாட்டு முரண்பாடு முதலியவை ஒன்றிணையும்போது அடிப்படைப்புரட்சி முன்னெடுக்கப்படும்.

வரலாற்றியல் பற்றிய மார்க்சீய சிந்தனைகளை அதிகம் வற்புறுத்தும் அல்துஸ்சர் அவற்றின் கல்வியில் நிலைப்பட்ட தாக்கங்களை ஆழ்ந்து நோக்குகின்றார். மார்க்சீய வரலாற்றுச் சிந்தனைகள் கோட்பாட்டு நிலையிலும், அரசியல் நிலையிலும், மானுட வரலாற்றிலே புதிய அய்வுப் பலத்தை உண்டாக்கியிருத்தலைச் சுட்டிக்காட்டுகின்றார். அதேவேளை வரலாறுபற்றிய அதிதீவிரமான நிலைப்பாட்டினை நிலைநிறுத்தும் வரலாற்று வாதம் (Historicism) என்ற போக்கினையும் நிராகரிக்கின்றார். உற்பத்தியும் நடப்பியலும் வாழ்க்கைத் தேவைகளை மறு உற்பத்தியும் செய்வதுதான். பொருளாதாரச்சூழல் வரலாற்று நிச்சயிப்பில் அடித் தளமாகின்றது. இந்த அடித்தளத்துக்கு ஏற்றவாறு அமையும் மேற்கட்டுமானத்தைச் சேர்ந்த இயக்கங்களாகிய கல்வி, அரசியல், முதலியனையும், வர்க்கப் போராட்டத்தின் உந்தல்களும் வரலாற்றைத் தீர்மானிப்பதிற் பங்கு கொள்ளுகின்றன.

"காலகட்டம்" என்பதை சமூக முழுமையின் ஓர் உறுப்பாகவே வரலாற்றில் நோக்குதல் வேண்டும். கால அமைப்பானது குறித்த சமூக உறுப்புகள் எல்லாவற்றுக்குமுரியது பொதுவான குணவியல்புகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக, கல்வியின் இயல்பானது குறித்த காலகட்டத்தின் சமூக உறுப்புகள் எல்லாவற்றிலும் காணப்படும் பொதுவான பண்புகளைக் கொண்டிருக்கும். சமூகத்தின் அமைப்புக்களைப் போலவே காலமும் அமைப்புக்களைக் கொண்டிருக்கும்.

வரலாறு என்பது தொடர்ச்சியான பல முழுமைகளின் தொகுப்பு என்பது அல்துஸ்சர் தந்த கருத்து. அந்த முழுமைகள் தமக்குள் தொடர்புகளைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு முழுமையும் ஒரு கால அமைப்புடன் தொடர்பு கொண்டிருக்கும்.

அல்துஸ்சரது ஆக்கங்கள் திறனாய்வு நோக்கிலே பியர்மாசெரி (Pierre Macherey) என்பவரால் மேலும் விரிவாக்கப்பட்டன. மார்க்சீய மரபுகளை ஒட்டி எழுந்த அல்துஸ்சரின் கருத்துக்கள் வித்தியாசமானவை யாயும், புதுமையாயும் அமைந்தன. அமைப்பியற் கோட்பாடு என்பது பல்வேறு அறிவுப் புலங்களிலும் ஊடுருவிய ஒரு கோட்பாடாக வளர்ச்சிபெறத் தொடங்கியது. அமைப்புக் கோட்பாட்டைத் தொடர்ந்து பின்னெழு அமைப்புக் கோட்பாடு (Post Structuralism) மலர்ச்சி கொள்ளத் தொடங்கியது.

அழகியற் கல்வி பற்றிய அல்துஸ்சரின் அமைப்பியற் கோட்பாடு விதந்து குறிப்பிடத்தக்கது. அரசியல், பொருளாதாரம், கருத்துருவம், கோட்பாடு ஆகிய நான்கு செயல்மானங்களையும் விளக்கிய அவர் தமது பிற்கால எழுத்தாக்கங்களில் "கலையியல் செயல்மானம்" என்ற செயற்பாட்டையும் விளக்கினார்.

கலையியல் செயல்மானம் என்பது, பிறசெயல் மானங்களைப் போன்றதாக அமையாது, அதன் தனித்தன்மைக்குரிய தனித்துவமான விதி முறைகளை கொண்டது என அவர் விளக்கினார். அழகியல் தொடர்பான மார்க்சீய அணுகுமுறைகளுக்கு மாறுபாடான்தாகவும், புதுமையானதாகவும் இது அமைந்தது. ஆயினும் இதனை அவர் மார்க்சீயத் தளத்தின் சிந்தனை நீட்சியில் இருந்தே மேற்கொண்டார்.

ஒருவரது உணர்வுகள் கலை நோக்குடன் ஒன்றிக்கும் பொழுது கலை உணர்வு உற்பத்தியாகின்றது. கலைகளின் வாயிலாக ஒருவர் தாம் கொண்டிருக்கும் உணர்வுகளை அறிந்து கொள்ளுகின்றார். தனது உணர்வை அறிந்து கொள்ளலும் அறியப்படாது இருத்தலும் என்ற இருநிலைகளின் இயக்கம் புலன்கள் வழியாக நிகழ்த்தப்படும் பொழுது கலை உணர்வு உற்பத்தியாகின்றது. கலைப்படைப்பின் மீது தமது வாழ்க்கை நடப்பியலை இணைத்தல் சுவைஞர்களினால் படைக்கப்படுகின்றது. இவ்வகையில் எழும் "சுவைஞர்களின் படைப்பு" என்பது அழகியலில் ஒரு மாற்றுவகைக் கருத்தாக அமைந்தது.

சமூக பொருளாதார அடித்தள அமைப்பு எப்பொழுதும் அதன் மேல்தள அமைப்பாகிய கல்வியை வடிவமைத்துக் கொண்டிருக்கும். ஆள்வோர் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், வளம்படுத்திக் கொள்வதற்கும் உழைப்பு வலுவை மீள் உற்பத்தி செய்தல் வேண்டும். உழைப்பு வலுவை மீள் உற்பத்தி செய்தல் இரண்டு வழிமுறைகளில் நிகழும். அவை,

1. வினைத்திறன் மிக்க உழைப்பு வலுவுக்குரிய பொருத்தமான ஆற்றல்களை மீள் உற்பத்தி செய்தல்.

2. மேற்கூறிய செயல்பாட்டுக்குப் பொருத்தமான வகையில் ஆளும் வகுப்பினரின் கருத்தியலையும், தொழிலாளருக்குரிய சமூகமயமாக்கலையும் மீள் உற்பத்தி செய்தல்.

இவ்வாறாக நிகழ்த்தப்படும் இரண்டு செயல் முறைகளின் வழியாகவும், தொழில் நுட்ப வினைத்திறன் மிக்கவர்களாகவும் அதே வேளை கீழ்ப்படிவு மிக்கவர்களாகவும் விளங்கும் உழைப்பாளர்களையும் உழைப்பு வலுவை உருவாக்கலாம்.

உழைப்பாளர்களைப் பௌதிக ஆதிக்க நிலைகளால் அழுத்தி வைப்பதிலும் ஆட்சியாளரின் கருத்துருவங்களை மீள் உற்பத்தி செய்து வசியப்படுத்தி வைப்பதே நீண்ட கால நலனுக்குரிய செயற்பாடாக ஆளும் வர்க்கத்தினருக்கு அமையும். இந்நிலையில் கல்வி ஒரு பலம் மிக்க அரசு நிலைப்பட்ட கருத்துருவச்சாதனமாக (Ideological State Apparatus) அமையும்.

ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிந்து செல்லக்கூடிய நடத்தைகளின் மீள் உருவாக்கம், விழுமியங்களின் மீள் உருவாக்கம், உளப்பாங்குகளின் மீள் உருவாக்கம் முதலியனவும் கல்விச் செயற்பாடுகளினால் உருவாக்கப் படுகின்றன என்பது அல்துஸ்சரின் கருத்து. மார்க்சீய சிந்தனை மரபுகளை அடியொற்றி அவர் தமது ஆய்வுகளை முன்வைக்க முயன்ற வேளை, அவற்றை நிலைநிறுத்தப் போதுமான ஆதாரங்களைத் அவர் தொடர்புபடுத்தவில்லை.

# இவான் இலிச்: பள்ளிக்கூடக் கலைப்புச் சமூகம்

"பள்ளிக்கூடம் அதன் அமைப்பு வடிவில் நலிந்தோருக்குப் பாதகமாகவே அமைந்துள்ளது. வாய்ப்பு மிக்கோர் தொடர்ந்தும் அநுகூலங்களைப் பெற்று வருகின்றனர். - தொடர்ந்து முன்னேறுகின்றனர் - ஆனால் நலிந்தோர் தொடர்ந்தும் நசுக்கப்பட்டுப் பின்னடைகின்றனர்" என்பது இவான் இலிச்சின் வாதம். கல்வி தொடர்பான தளம் மாற்றுவாதத்தை இவரது எழுத்தாக்கங்கள் புலப்படுத்தின. இலிச் மாத்திரமன்றி வேறும் பல கல்விச் சிந்தனையாளர்களும் பள்ளிக்கூடத்தை எதிர்மறைக் கண்ணோட்டத்தில் அணுகினர். ஈ றெய்மர் என்பவர் "பள்ளிக் கூடம் இறந்து விட்டது" என்ற நூலை எழுதினார்.

1926 ஆம் ஆண்டில் வியன்னா நகரில் பிறந்த இவான் இலிச் மறையியல், மெய்யியல் ஆகிய துறைகளில் கல்வி கற்று வரலாற்றியலிற் காலநிதிப் பட்டத்தைப் பெற்றார். 1951ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்று நியூயோர்க் நகரில் உள்ள தேவாலயம் ஒன்றில் போதகராகப் பணிபுரிந்தார். 1956 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டுவரை புவற்றோ நிக்கோவில் உள்ள சமயப்பல்கலைக் கழகத்திலே துணை அதிபராகப் பணிபுரிந்தார். மிகுந்த சர்ச்சைக்குரிய ஆய்வு நிறுவனமாகிய "பல்லினப் பண்பாடுகளின் ஆவணப்படுத்தல் நடுவண் நிலையத்தின்" இணை நிறுவனராகவும் விளங்கினார். 1971 ஆம் ஆண்டு அவர் எழுதிய "பள்ளிக்கூடக் கலைப்புச் சமூகம்" என்ற நூல் வெளிவந்தது.

நடைமுறையிலுள்ள பள்ளிக்கூட முறைமைக்கு எதிரான பல கண்டனங்களை இலிச் தொடர்ச்சியாக முன்வைத்தார். வறியவர்கள் என்றும் வலுக்குன்றியவர்களாகவே இருக்கின்றனர். ஆனாலும் பாரம்பரியமான சமூக நிறுவனங்கள் மீது அவர்கள் தளராத நம்பிக்கை வைத்துள்ளனர். திக்கற்ற நிலையில் அவர்கள் சமூக நிறுவனங்களைத் துணையென்று கொள்வது அவல நிலையின் பரிமாணங்களைப் புலப்படுத்துகின்றது.

வறியவர்கள் உளவியல் அடிப்படையிலும் பாதிப்பு அடைந்துள்ளனர். அவர்களிடத்து ஆற்றல் குன்றிய ஆளுமைக் கோலங்கள் வெளிப்படுகின்றன. அந்த ஆளுமைக் கோலங்கள் மீது

மேலும் தாக்கு விசைகள் சுமத்தப்படுகின்றன. நவீன மயமாக்கப்பட்ட வறுமை அவர்களை அழுத்துகின்றது. நலிவடைந்த சிறுவர்களுக்கு உதவும் முகமாக ஒதுக்கப்படும் பாரிய முதலீடுகளின் பெறு பேறுகள் பயன் நுகர வேண்டிய அந்தச் சிறுவர்களைச் சென்று அடையவில்லை. பள்ளிக்கூடம் அதன் அமைப்பு வடிவில் நலிந்தோருக்குப் பாதகமாகவே உள்ளது. வாய்ப்பு வசதிகள் கொண்டோர் தொடர்ந்தும் அநுகூலங்களைப் பெறுகின்றனர். நலிவடைந்தோர் தொடர்ந்தும் நசுக்கப்பட்ட வண்ணம் உள்ளனர்.

பள்ளிக் கூடங்கள் சமூகத்தைத் துருவப்படுத்துகின்றன. சமூகத்தின் ஏறுநிலையான நிரலமைப்பைக் கட்டிக்காக்கின்றன. பள்ளிக் கூடங்கள் இன்றிக் கற்றல் நிகழாது என்ற கருத்தைப் பள்ளிக் கூடங்களே பரப்பி வருகின்றன.

ஆசிரியர்கள் பாரம்பரியங்களை வழுவாது கடைப்பிடிக்கின்றனர். ஆசாரங்களை நிறைவேற்றி வைக்கின்றனர். பெற்றோருக்குரிய பதிலீட்டா ளர்களாய் நின்று அறத்தையும் விழுமியத்தையும் புகட்டுகின்றனர். மாணவரது சிந்தனை வாழ்க்கையில் வெகு சுழுவாகத் தலையிடுகின்றனர். மாணவரிடத்துக் குறைகளைக் கண்டறிபவர்களாகவும், உள்ப்பிணி தீர்ப்பவராகவும் ஆசிரியர் செயற்படுகின்றனர். இந்நிலையில் ஒரு நாட்டின் சட்டங்களிலும் பார்க்க மிகவும் கூடுதலான வலுவை ஆசிரியர் பிரயோகிப்பதை நடைமுறையிற் காணமுடியும்.

பள்ளிக் கூடத்தில் மாணவரது படைப்பாற்றல் பறித்தெடுக்கப் படுகின்றது. உற்பத்தி நிறுவனம்போன்று பள்ளிக் கூடங்கள் செயற்படு கின்றன. ஆசிரியர் விநியோக மேலாளராக இயங்குகின்றார். ஆசிரியர் தாம் ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள முடிவுப் பொருள்களை மாணவருக்கு வழங்குகின்றார். இந்நிலையிற் சந்தை விழுமியங்கள் மேலோங்குகின்றன. கல்வி விழுமியங்கள் செயலற்று விடுகின்றன.

ஒரு நாட்டின் பெரும்பாலான மனிதவளம் பள்ளிகூடங்களிலே தேங்கிக்கிடக்கின்றது. வளங்கள் வீணடிக்கப்படுதலைப் பள்ளிக் கூடங்கள் நியாயப்படுத்துகின்றன. புதிய வகையான "அந்நியமாதல்" அங்கு உருவாக்கப்படுகின்றது. உழைப்பு அபகரிக்கப்படும் பொழுதும் உற்பத்தியில் முழுமையாகப் பங்குபற்றாதிருக்கும் பொழுதும் அந்நியமாதல் என்ற உளவியல் அழுத்தம் ஏற்படும். தொழில்களுக்கு நுழைவதற்கு முன்னரே அந்நியமாதல் என்ற உள நெருக்குவாரத்தை பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி விடுகின்றன. நடப்பியல் வாழ்வில் முழுமையாகப் பங்கு பற்ற முடியாத அந்நியமாதல் பள்ளிக்கூடங்களிலே வளர்த்தெடுக்கப்படுகின்றது.

"நிறுவன வடிவமைப்பு" என்ற ஆய்வின் அடிப்படையிலும் இலிச் பள்ளிக் கூடங்களைச் சாடுகின்றார்கள். சமூகத்தில் எதிர்விளைவுகளைப் புரிகின்ற பல்வேறு நிறுவனங்களுள் பள்ளிக்கூடமே முதலிடம் பெறுகின்றது. இந்த எதிர் விளைவுகள் வெளிப்படையாகத் தோன்று வதில்லை. அவற்றின் விளைவாக மனிதருக்குரிய சுயபரிமாணங்கள் உடைத்து எறியப்படுகின்றன. மனிதரிடத்து நிரந்தரமான நலிவடைதலைப் பள்ளிக் கூடங்கள் நிலைநாட்டிவருகின்றன.

நிறுவன அமைப்பியலின் காட்சித் திசைகளை "வலம் சார் நிறுவனங்கள்" என்றும் "இடம் சார் நிறுவனங்கள்" என்றும் இலிச் பாகுபடுத்தினார். வலம் சார் நிறுவனங்கள் என்ற வரிசையில் பள்ளிக்கூடம் உட்பட எதிர் விளைவுகளைப் புரிகின்ற அனைத்து நிறுவனங்களும் அடங்கும். அந்நிறுவனங்கள் அதிக சிக்கலடைந்திருப்பதுடன் சமூகத்தின் மீது அதிக தாக்குவிசைகளைப் பிறப்பிக்கின்றன. அவற்றின் செயற்பாடுகள் மன முறிவைத் தருகின்றன. வலம் சார் நிறுவனங்களின்றிச் சமூகம் வாழமாட்டாது என்ற பொய்ம்மை உணர்வையும் அந்நிறுவனங்களே ஏற்படுத்தி விடுகின்றன. இவற்றுக்கு மாறுபாடானவை இடம் சார் நிறுவனங்கள். வலம் சார் நிறுவனங்களைச் சமூக நன்மை பயிக்கக் கூடியவாறு இடம் சார் நிறுவனச் செயற்பாடுகளை நோக்கி நகர்த்தல் வேண்டும்.

பள்ளிக் கூடங்களின்றிக் கற்றலை ஏற்படுத்த முடியாதா? என்ற வினாவுக்கும் இலிச் விடை தருகின்றார். "கற்றல் வலைப்பின்னல்" என்ற தொடரில் அவரது விளக்கங்கள் அமைகின்றன. தாமே ஊக்கம் கொண்டு கற்கும் ஆற்றலை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். அத்தகைய ஊக்கல் செயற்படக் கூடிய நான்கு வலைப்பின்னல் அமைப்புக்கள் உள்ளன. அவை,

(1) கற்றற் பொருள்களுக்குரிய உசாத்துணைச் சேவை

நூலகம், ஆய்வுக் கூடம், வளநிலையம், சுவடிக் கூடம், அருமைப் பொருட்களம் என்றவாறு நியமமான கற்றற் செயற்பாடுகளை வழங்கக் கூடிய உசாத்துணைச் சேவை நிலையங்கள் இப்பிரிவில் இடம்பெறும்.

(2) திறன்களைப் பரிமாற்றம் செய்தல்.

பல்வேறு ஆற்றல்கள், திறன்கள், அனுபவங்கள் தொடர்பான விளக்கக் கையேடுகள், பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அவ்வாறான அனுபவங்கள் திறன்கள் முதலியவற்றைப் பெற விரும்புவோர்க்கு வழங்குதல்.

(3) கற்றலுக்குரிய துணையாளர் ஒருவரை இணைத்துவைத்தல்

கற்க விரும்பும் ஒருவரது ஆற்றலுக்கும் ஆர்வத்துக்கும் விருப்பத்துக்கும் கற்கும் நெறிக்கும் ஏற்றவாறு துணையாளர் அல்லது

சகபாடி ஒருவரைத் தெரிவு செய்து கொள்வதற்கு தொடர்புச் சாதனங்கள் வழியாகச் சந்தர்ப்பங்களை வழங்குதல்.

(4) கல்விமேம்பாடு கொண்டோரின் உசாத்துணைச் சேவை.

கல்வி மேதாவிகள், வாண்மையாளர், அறிவாற்றல் மிக்கோர், முதலியோரது விபரங்களும் முகவரிகளும் அடங்கிய வழிகாட்டி நூல்கள் தயாரிக்கப்பட்டு அவர்களது சேவைகளைப் பெற்று ஒருவர் தமக்குரிய கல்வியைப் பெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

பள்ளிக்கூடம் கலைக்கப்படும் ஒரு சமூகத்தில் மேற்கூறிய வலைப்பின்னற் பணிகள் வழியாகக் கல்வியை வழங்க முடியும்.

பள்ளிக்கூடங்கள் பல்வேறு திறனாய்வுகளை இன்று எதிர் கொள்ளுகின்றன. அவற்றின் பின்புலத்தில் இலிச் தரும் கருத்துக்கள் பள்ளிக்கூட முறைமை பற்றிய மீளாய்வுக்குத் துணை நிற்கின்றன. பள்ளிக்கூட செயல் முறைகளிலே பல குறைபாடுகள் உண்டு என்பது நிராகரிக்கமுடியாத ஒரு நேர்வியம். கலைத்திட்டத்தின் பிறழ்வு நிலை இயக்கம், மாணவர் வெளி வீசப்படுதல், ஆளுமைக்குலைவு, மனமுறிவு, முதலியவை பள்ளிக்கூட ஒழுங்கமைப்பில் நிகழ்ந்து வந்தாலும், அந்த ஒழுங்கமைப்பின் நேர்நிலை ஆற்றல்களைப் புறக்கணித்து விடமுடியாதென்பது இலிச்சுக்கு எதிராக முன் வைக்கப்படும் முதலாவது திறனாய்வு. அனைத்து அவலங்களுக்கும் பள்ளிக் கூடமே காரணம் என்று கூறுவதன் வாயிலாக சமூகக்கட்டமைப்பின் பன்முக இயக்கங்களை அடையமுடியாத ஒருதலைப்பட்சமான தரிசனமே இலிச்சிடம் காணப்படுகின்றது.

# பேற்றண்ட் ரசல்
# அகல்விரிப் பண்புடைய பயன்கொள் கல்வி.

தருக்க நிலைப்பட்ட ஆய்வுகளின் வழியாக கண்டுபிடிப்புக்களை முன் எடுக்கும் செயற்பாடுகள் ரசலின் அணுகு முறையில் குறிப்பிடப்படுகின்றன. உலக நடப்பியலைக் கண்டு கொள்ளவும் மீளாய்வு செய்யவும் இந்த அணுகு முறையே பொருத்தமானது என்றும் ரசல் கருதினார். மெய்யியல் ஆய்வுகளுக்கு அவை நிலைத்திருக்க முறைமையே (Logical Atomism) வலுவையும் வளத்தையும் வழங்கும் என்பது அவரது ஆரம்ப காலக் கருத்து. பின்னர் இக்கருத்தை அவர் கைவிட்டார்.

பேற்றண்ட ரசலது பன்முகப்பரிமானங்கள் அவரது கல்விக் கோட்பாட்டினை உருவாக்குவதற்கு துணை நின்றன. சமூகத்துறை, மெய்யியல்துறை, சமாதானத்துறை, அரசியல் குடிஉரிமை, மனித அடிப்படை உரிமைகள் போன்ற பல்வேறு புலங்களில் ஈடுபாடு கொண்டவராக அவர் விளங்கினார். இதன் காரணமாக ஒவ்வொருவரும் அவர்களுக்குரிய உளநாட்டங்களுக்கு ஏற்றவாறு தெரிவு செய்யக்கூடிய விதத்திலே கற்கும் புலங்கள் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

பல துறைகள் தழுவிய அறிவாற்றல் காரணமாக அவர் தாம் காலூன்றி நின்ற துறைகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார்.

டேவிட் ஹியும் என்பார் மெய்யியலில் தருக்க நிலைப் பகுப்பாய்வை முன் எடுத்தாராயினும் அவை உளவியல் சார்ந்த முறையியலாகவே அமைந்தன. உளவியலில் சிந்தனை, ஞாபகம், மனவெழுச்சிகள் முதலிய செயல்முறைகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஆனால் மெய்யியல் சார்ந்த தருக்கத்தில் பிரபஞ்ச உண்மைகள் அவற்றில் நிலைபேறு கொண்ட நேர்வியங்கள் முதலியவற்றைக் கண்டறியும் முயற்சி ரசலால் மேற்கொள்ளப்படுகின்றது.

கல்வித்தளத்தில் ரசல் பயன் கொள் கோட்பாட்டை வலியுறுத்தியவராக விளங்குகின்றார். கல்விசார் பயன் கொள் கோட்பாடு பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

(1) மனிதமுயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.

(2) எதிர் காலத்தில் நம்பிக்கை கொள்ளல்.

(3) ஒவ்வொருவரும் தத்தம் சொந்த அனுபவங்களில் இருந்து வியாக்கியானங்களைப் பெற்றுக் கொள்ளல்.

(4) தொடர்ச்சியான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படல் சிறந்தது.

(5) ஒவ்வொருவரதும் திறமை, ஆற்றல், உளநாட்டம் என்பவற்றுக் கேற்றவாறு கல்வி வழங்கப்படல் சிறந்தது.

(6) செயல்மானங்கள் வழியாக அனுபவங்களைத் திரட்டிக் கொள்ளல் நன்று.

(7) மனித இலக்குகளைச் சிறந்த முறையில் அணுக மக்களாச்சியே சிறந்தது.

(8) மக்கள் வாழ்க்கையில் இருந்து அறிவை அன்னியப் படுத்திவிடக் கூடாது. சமூகப் பெறுபேறு கொண்டதாக அறிவு கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

(9) கல்விச் செயல்முறையின் வாயிலாக சமூக அனுபவங்களும் சமூகப் பங்கு பற்றலும் மக்களாட்சி வாழும் முறைமைகளும் வளர்த்தெடுக்கப் படுதல் சிறந்தது.

(10) அகல்விரிப் பண்புடையதான செயல்மானக் கல்வியே வற்புறுத்தப்படுகின்றது.

ஆக்கப் பண்புடைய மனிதரை உருவாக்குதலும் ஆக்கப்பண்புடைய சமூகத்தைக் கட்டியெழுப்புதலும் மக்களாட்சிச் செயல்முறையாகும் என்பதை ரசல் வலியுறுத்தினார். கல்வியின்றி ஒருவரால் முன்னேற்றம் அடைய முடியாது. அமெரிக்கக் கல்வி முறைமையை ஓர் எடுத்துக் காட்டானதாக அவர் கருதினார். கல்விச் செயல்முறையின் வழியாக தன்னம்பிக்கை, சுயதிட்டம், துலங்கும்பாங்கு நுண்மதி முதலியவை வளர்க்கப்படல் வேண்டும். கல்வி கற்ற ஒருவர் திறந்த மனம் உடையவராக இருத்தலே மேம்பாடானது. உற்று நோக்கல், பொறுமை, விடா முயற்சி, அறிவிலே தளர்ந்த நம்பிக்கை முதலியவை கற்பவருக்கு இருக்க வேண்டிய அடிப்படைகளாகும். மேற்கூறிய குணவியல்புகள் ஒருவரின் பண்பு நலன் வளர்ச்சிக்கும் ஆளுமை மேம்பாட்டுக்கும் அவசியமானது.

சிறுவர்களின் உசாவல் விருப்பையும் (Curiosity) இயற்கைத் திறன்களையும் மேம்படுத்துவதற்கு கல்வி உதவுதல் வேண்டும். கற்பவர்கள் நடப்பியற் கருத்துருவங்களைக் கொண்டவர்களாகவும் சொல்லிலும் செயலிலும் ஒன்று பட்டவர்களாகவும் முற்சார்பு எண்ணங்களிலிருந்து விடுபட்டவர்களாகவும், தாமே முன்வந்து கவனம் கொள்வோராயும் இருத்தலே மேம்பாடானதாகும். ஒவ்வொருவரதும் வளர்ச்சிப்படி நிலைகளுக்கு ஏற்றவாறு மகிழ்ச்சியும் உளநாட்டமும்

தருவதாக கல்வி அமைதல் வேண்டும். ஆசிரியர் நண்பராயும், ஆற்றுப்படுத்துணராயும், மெய்யியலாளராயும் இருத்தலே சிறந்தது.

பாலர் கல்வி இலவசமானதாயும் கட்டாயமானதாயும் இருத்தல் வேண்டும். பாலர் கல்வி ஆசிரியர்கள் உளவியல், மருத்துவம் ஆகிய துறைகளில் அறிவுடையோராயும், குழந்தையின் உடலியல் மேம்பாட்டுக்கு உதவுவோராயும் இருப்பதற்கு உளவியலும் மருத்துவமும் உதவுகின்றன.

முன் ஆரம்பக் கல்வியானது ஒவ்வொரு சிறுவரதும் தனித்துவமான குணப்பணிச்சீடுகளுக்கேற்ப அமைதல் வேண்டும். இங்கு வாசிப்புத் திறனும் எழுத்துத் திறனும் விருத்தியாக்கப்படுதலே பொருத்தமானது. இவை ஆக்கப்பண்பு இணைந்ததாக இருத்தல் வேண்டும். கணிதம் கற்றல் தொடர்பான உளப் பயிற்சிகள் ஏழு வயதுக்குப் பின்னர் தொடங்குதலே பொருத்தமானது. இதற்கு முன்னதாக புவியியல் அறிவு, வரலாற்று அறிவு, பொது அறிவு என்பவற்றை வழங்கலாம். அதாவது ஐந்து வயதிலிருந்து இவற்றை வழங்கலாம். ஓவியத்திறன்களும், மொழித்திறன்களும் கல்வியினூடாக வளர்க்கப்படல் வேண்டும்.

12 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட வயதினருக்கான கலைத் திட்டத்தில் ஏனைய பாடத்துறைகளோடு, எண்கணிதம், கேத்திரகணிதம், அட்சரகணிதம் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் போன்றவை உட் பொதியப்படல் வேண்டும்.

14 வயதினருக்கும் 18 வயதினருக்கும் இடைப்பட்டோருக்கான கலைத்திட்டம் பின்வருமாறு வடிவமைக்கப்படலாம்.

(1) செம்மொழிகள்

(2) கணிதமும் விஞ்ஞானமும்

(3) நவீன மானுடவியல்கள்

மாணவரின் உளநாட்டத்துக்கு ஏற்றவாறு கற்பித்தல் நிகழ வேண்டும். கல்வித்தரம் உறுதியாகப் பராமரிக்கப்படல் வேண்டும். பாடப்புலத்தில் ஆசிரியருக்கு ஆழ்ந்த அறிவு இன்றியமையாதது. ஆசிரியர் முன் ஆயத்தம் செய்து மாணவரை ஊக்குவித்தலே உன்னத வழி, பாடப்புலங்களில் மாணவரிடத்து உள நாட்டங்களை ஏற்படுத்துதல் வேண்டும். கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் உள நாட்டம் தராத பகுதிகளையும் கற்றலே விரும்பத்தக்கது.

செயல்மானங்கள் வழியாகக் கற்பதே பொருத்தமான வழி. வகுப்பு வேலையிலும் தனித்தனி மாணவருக்குரிய வேலையே முக்கியமானது. தனி மாணவருக்குரிய ஆற்றல்கள் மற்றும் உள்ளார்ந்த திறன்களுக்கு ஏற்ற வகையில் ஆற்றுப்படுத்தல் வழங்குதலே விரும்பத்தக்கது. கல்வி மேம்பாடு, உடல் மேம்பாடு, சமூக மேம்பாடு ஆகியவை ஒரே காலத்தில் ஒன்றிணைத்து முன்னேற்றப்படல் வேண்டும். பள்ளிக்கூடம் சமூகத்தின்

மாதிரிச் சிற்றுருவமாக அமைக்கப்படுவதுடன் எல்லாப் பாடத்துறைகளிலும் மாணவர்கள் உளநாட்டத்தை ஏற்படுத்துமாறு ஊக்குவிப்புகள் தரப்படல் வேண்டும். மாணவர்கள் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் சுதந்திரமாகக் கருத்துப் பரிமாற்றிக் கொள்வதற்கும் வழியமைத்துக் கொடுக்கப் படுவதுடன், உண்மை பற்றிய தேடலை அவர்களிடத்து ஊக்குவித்தலே மேம்பாடுடையது.

பள்ளிக்கூடங்கள் வழிவிட அமைப்பைக் கொண்டதாகவோ நாளாந்தம் வந்து போகக்கூடியதாகவோ இருக்கலாம். இரண்டிலும் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் உள்ளன. இரண்டின் இயல்பு களையும் ஆராய்ந்து பெற்றோர் பொருத்தமான பள்ளிக்கூடங்களைத் தமது பிள்ளைகளுக்குத் தெரிவு செய்யலாம். மக்களாட்சிப் பண்புகளை வளர்த்தலும் மேம்படுத்தலும் பள்ளிக்கூட ஒழுங்கமைப்பின் உள்ளீடாக அமைதல் வேண்டும்.

தமது பல்கலைக்கழக அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல்கலைக்கழகக் கல்வி பற்றிய பரிமாணங்களை வெளியிட்டார். பல்கலைக்கழகத்தில் ஒவ்வொருவரும் தமது பெறு பேறுகளை மதிப்பீடு செய்து சகமாணவர்களோடு ஒப்புநோக்கி தம் நுண்ணறிவை மேலும் முன்னெடுக்கக் கூடிய வாய்ப்புத் தரப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தில் அதி உயர்ந்த நிலையிலே கருத்துப் பரிமாற்றம் செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. புலமை சார்ந்த நல்ல நண்பர்கள் கிடைக்கப் பெறுகின்றார்கள். உயர்ந்த விழுமியங்களை உய்த்தறியும் சந்தர்ப்பங்கள் பரவலாகக் கிடைக்கின்றன.

பல்கலைக்கழகக் கல்வியின் நேர்ப் பண்புகளையும் எதிர்ப் பண்புகளையும் அவர் சுட்டிக் காட்டினார். பல்கலைக்கழகத்திலே கற்கப்பட்ட அறிவுத் தொகுதிகள் பல பிற்காலத்தில் மறக்கப்பட வேண்டியவை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

ஆற்றலுடையவர்களுக்கும் விருப்பமுடையவர்களுக்குமே பல்கலைக் கழகக் கல்வி தரப்படல் வேண்டும் என்பது ரசலின் வாதம். அறிவை விரிவாக்குதலும் ஆராய்ச்சியுமே பல்கலைக்கழகங்களின் முதல் நிலை நோக்கங்கள். பல்வேறு தொழில்களுக்குமுறிய ஆற்றல் மிக்கோரை உருவாக்குதல் இரண்டாவது நோக்கமாய் இருத்தல் வேண்டும். திறமை அடிப்படையில் பல்கலைக்கழக நுழைவு இருத்தலே சிறந்தது. கற்பிப்போர் நிதி நெருக்கு வாரங்களில் இருந்து விடுவிக்கப்படல் வேண்டும். தமது அறிவை மேம்படுத்தவும் வளப்படுத்தவும் அவர்களுக்குப் போதிய விடுமுறை தரப்படுதல் நன்று. ஆராய்ச்சிகள் மேலும்மேலும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். மானுட நலன்களும், உலக முன்னேற்றமும் ஆராய்ச்சிகளின் தலையாய இலக்குகளாக இருத்தலே ஏற்புடையது.

மேற் கூறியவற்றின் பின்புலத்தில் ரசல் பல்வேறு கண்டனங்கள் எழுப்பப்படுகின்றன. ஒளிரும் மாணவர் (Brilliant Student) மீது கவனம் செலுத்திய அளவுக்கு ரசல் சாதாரண நிலை மாணவர் மீது

கருத்தூன்றிக் கவனம் செலுத்தவில்லை. இலட்சியப்பாங்கான கருத்துருவங்கள் இவர்களது அணுகுமுறையிலே நழுவி விடுகின்றன. சமூகத்திலே நிகழும் சுரண்டல் முறைமைகளின் அடியாதாரங்களைத் தேடுதலும் ரசலின் கோட்பாடு களிலே நலிவடைந்த நிலையில் உள்ளது.

அணு ஆயுத ஒழிப்பு, சமாதானத்துக்கான கல்வி, மானுட மேம்பாட்டுக்கான விஞ்ஞானம், உலக அரசு போன்ற துறைகளிலும் அவரால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. பலவகைப் போராட்டங் களையும் இனங்கண்டு அவற்றைக் கல்வியுடன் தொடர்பு படுத்தினார். போராட்டங்களை அவர் மூன்று விதமாகப் பகுத்து ஆராய்ந்தார். அவை

(1) மனிதருக்கும் - இயற்கைக்குமிடையே நிகழும் போராட்டம்.

(2) மனிதருக்கும் - மனிதருக்குமிடையே நிகழும் போராட்டம்.

(3) மனிதரின் உளப் போராட்டம்.

மனிதருக்கும் - இயற்கைக்குமிடையே நிகழ்ந்த போராட்டத்தில் விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவம் தெளிவு பெறுகின்றது. அதேவேளை இயற்கைச் சமநிலையைப் பேணுவதிலும் அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. மனிதருக்கும் மனிதருக்குமிடையே நிகழும் போராட்டம் மனிதரின் அடிப்படைத் தேவைகளில் இருந்தும் பங்கீட்டிலிருந்தும் எழுவதனால் குடிப்பெருக்கம் உணவு வழங்கல். போன்ற தொடர்புகள் அவரால் ஆராயப்பட்டன. உலக மனித உறவு மேம்பாட்டில் "உலக அரசாங்கம்" என்ற அமைப்பின் முக்கியத்துவத்தை முன்மொழிந்தார்.

மனித உளப்போராட்டம் சமத்துவமின்மை, சமநீதியின்மை என்பவற்றுடன் தொடர்பு பட்டுள்ளன. ஆண் பெண் சமத்துவம், அடக்குமுறைகளால் எழும் குமுறல்கள், அச்சம் காரணமாக மனித நடத்தைகள் தளும்புதல், பாதுகாப்பு இன்மையால் ஏற்படும் நிலைகுலைவுகள் முதலியவற்றை ஆராய்ந்த அவர் மரபு நிலைப்பட்ட கருத்துக்களைப் பகுத்து ஆராய்ந்து திறனாய்வு செய்கிறார்.

"அணு ஆயுத ஒழிப்பு" தொடர்பான ஆற்றல் மிக்க கருத்துக்களை முன் மொழிந்த ரசல் அந்த எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவதற்கு உலக அரசாங்கமே பொருத்தமுடையது என விளக்கினார். அனைத்துலகப் புரிந்துணர்வை வளர்ப்பதற்குரிய கல்வியின் அவசியத்தைக் குறிப்பிட்டார்.

பொதுவுடைமைக் கோட்பாடுகளைத் திறனாய்வு செய்த ரசல் வர்க்கநிலைப் போட்டிகளிலும் கூட்டுறவே மேம்பாடுடையது என்பதை வலியுறுத்தினார். பழைய பாரம்பரியங்கள் என்பவற்றிலே பொதிந்துள்ள நல்லியல்புகளை முற்றாகப் புறக்கணித்தார். மேலும் பொதுவுடைமைக் கோட்பாட்டின் வலிமைமிகு நற்பண்புகளை அவரால் தரிசிக்க முடியாமற் போய்விட்டது.

# ஜீன் போல் சார்தர் - இருப்பியத்துக்கான கல்வி

இருப்பியத்துக்கான கல்வி பற்றிய சிந்தனைகள் கிர்கேகார்ட், நித்சே, ஜீன் போல் சார்தர் முதலியோரிடத்துப் பல்வேறு நிலைகளிலே காணப்படு கின்றன. இருபதாம் நூற்றாண்டின் தலையாய இருப்பியவாதியான சார்தர் தாம் எழுதிய நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், திறனாய்வுகள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு முதலி யவற்றின் வழியாக இருப்பியத்துக் கான கல்வியை முன் மொழிந்தார்.

மனிதரின் செயல்களே அவர்களது இருப்பியத்துக்குத் தெளிந்த பொருளைக் கொடுக்கின்றன. ஒவ்வொருவரதும் செயல்களுக்கும் அவர்களே பொறுப்பாளிகள். இந்தப் பொறுப்பைச் சமாளிக்க ஒவ்வொரு வரும் "போலி மனச்சாட்சியை" அமைத்துக் கொள்கின்றார்கள். போலி மனச்சாட்சியும் அதில் மற்றவர்களின் குறுக்கீடும் இடர்களை ஏற்படுத்து கின்றன. ஒருவருடைய எண்ணத்துக்கும் மற்றவர்களது எண்ணத்துக்கு மிடையே தவிர்க்க முடியாத முரண்பாடு தொடர்ந்து கொண்டேயிருக் கின்றது என்பது அவரது கருத்து.

"போலி மனச்சாட்சி" என்பதை அவர் மிக விரிவாக விளக்குகின்றார். தன்நிலை இதுதான் அதற்குத்தாமே பொறுப்பு என்பதை உணரமறுக்கும் கோழைத்தனமாக அது அமைகின்றது. மற்றவர்கள் தம்மை நல்லவிதமாக மதிக்க வேண்டும் என்பதற்காக முகமூடி அணிந்து கொண்டு அதன் வழியாகப் பாதுகாப்பை தேடும் தப்பித்தல் உபாயமாகவும் அது அமைகின்றது.

இருப்பியம் என்பது மனித வாழ்க்கை இன்னும் முற்றுப்பெறாமல் நடந்து கொண்டிருக்கின்றது என்ற "நிலையையும்" அது எவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற "விதத்தையும்" உள்ளடக்கி நிற்கின்றது. இவற்றின் வழியாக இருப்பியம் வாழ்க்கைக்கு "கருத்து" வழங்க முயல்கின்றது. மனிதரைச் சுற்றியுள்ள அனைத்தும் தொடர்ந்து வளர்ச்சியும் கூர்ப்பும் அடைந்து கொண்டு இருப்பதனால் முடிந்த முடிவான ஒரு கருத்தைப் படைத்துவிட்டு அதில் நிலைத்து நிற்றல் பொருத்தமற்றது.

இந்நிலையில் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட வாழ்க்கை நெறிக்குக் கீழ்ப்படிந்து நடக்க முற்பட்டுப் பிறரின் அங்கீகாரத்தைப்

பெறும் செயலானது "போலி மனச்சாட்சி" யாகும் என்பது சார்தர் தரும் விளக்கம். இந்நிலையில் சுதந்திரமாக இருக்கும் மனிதரால் மட்டுமே தமது இருப்பியத்துக்கான பொறுப்பை மேற்கொள்ள முடியும் என்பது அவரது துணிபு. அப்பொழுதுதான் ஒருவரது இருப்பியத்துக்கான நியாயமும் அர்த்தமும் ஈட்டப்பட முடியும். இந்நிலையில் வாழ்க்கைக்கு அர்த்தம் தரும் கல்வியே இருப்பியத்துக்கான கல்வியாகப் பரிணமிப்பதைக் காணலாம்.

"ஒருவர் என்னவாக விரும்புகிறார் என்பதை அவருடைய செயலே முடிவு செய்யும்" என்பதே இவருடைய கருத்து. விடுதலை என்பது ஒருவர் தமது இருப்பியத்துக்குரிய பொறுப்பை ஏற்பதுதான். "இந்த உலகத்தில் பலபேர் நரகத்தில் உள்ளனர் - ஏனெனில் அவர்கள் பெருமளவு மற்றவர்களைச் சார்ந்திருக்கின்றார்கள்" என்று மனித உறவுகளை சார்தர் மட்டிடுகின்றார்.

"அறிவு", "வியாக்கியானம்" என்பவற்றிலும் "செயல்", "தெரிவு" என்பவற்றுக்கு இருப்பியக் கல்வியே முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதரும் மேம்பாடும் ஈடேற்றமும் அவர்களது சுயமுயற்சியால் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தச் செயல்முறையில் பிறர் உதவுதல் இயலாதது என்றும் இருப்பியத்தை நோக்கிய கல்வியில் வற்புறுத்தப்படுகின்றது. உண்மை என்பது அகவயப்பாங்கானது. அது "புறவயமானது" "அருவமானது" என்பதெல்லாம் மருண்ட தோற்றங்கள். விஞ்ஞானிகள் புறவயமான சிந்தனைகளை மீள வலியுறுத்திவரும் வேளை இருப்பியர்கள் உண்மை என்பது உடனடி அனுபவங்களினால் மட்டிடப்பட வேண்டும் என்று விபரிக்கின்றனர்.

பதகளிப்பு, உள முரண்பாடு, உளப்பாதிப்பு முதலியன உடனடி அனுபவங்கள் வாயிலாகவே மெய்ப் பொருள் மட்டிடப்படல் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. உளத்தாக்கங்களால் வாழ்வின் யதார்த்தங்கள் வெளிப்படும். அகவயமான தரிசனங்கள் வழியாக ஒவ்வொருவரும் தமது இருப்புப்பற்றிய உண்மைகளையும் வாழ்வின் நேர்மிய நடிபங்கினையும் (Authentic Role) அறிந்து கொள்ளமுடியும். அது ஓர் ஆக்கச் செயல் முறையாக விளங்குவதுடன் புதிய காட்சிகளுக்கும் வழிவகுக்கும். தனது இருப்பினை ஒருவர் தன்னந்தனியாகவே எதிர் கொள்ளுகின்றனர். தனியனாகிய நிலையில் ஒருவர் தமது உண்மையான தன்மம் (True Self) என்பதுடன் உறவாட முடியும். விழுமியங்களின் தோற்றங்களைச் சமூகச் சந்தர்ப்பங்களிலே காணமுடியாது. தனிமனித அகக்காட்சிகள் வாயிலாகவே கண்டு கொள்ளமுடியும்.

மனிதனே பிரபஞ்சத்தின் நடுநாயகமாக விளங்குகின்றான். இந்த நிகழ்ச்சிக்கு வேறு பிரதியீடுகள் கிடையாது. மனிதரின் அடிப்படைப் பண்பு விடுதலையைத் தேடுதல். மனிதருக்காகவே சமூக நிறுவனங்கள் தோற்றம் பெறுகின்றன. சமூக நிறுவனங்களுக்காக மனிதர் அல்லர். "பொதுவான சித்தவலு" என்று ஒன்றில்லை. அதில் தனிமனித

"சித்தவலுவே" பொருளாகி நிற்கும். மனித விருத்தியைத் தடை செய்யும் எவையும் தள்ளுபடி செய்யப்படல் வேண்டும்.

சிக்கலாகிவரும் நவீன சமூகத்தின் மையப் பொருளாகி நிற்பது கருத்துருவ முறைமையன்று. நடைமுறைகளே கருத்துருவங்களைப் பின்பற்றுமாறு தூண்டுவதிலும், பொறுப்புணர்ச்சியோடும், விடுதலைப் பக்குவத்தோடும் நடந்து கொள்ளத் தூண்டுதலே சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான செயற்பாடாகும். வெறும் சுலோகங்களினாலும், பதாகைகளினாலும் உலக சமாதானத்தைக் கட்டியெழுப்பிவிட முடியாது. விடுதலை கொண்ட மனிதர் விடுதலையோடு மற்றவர்களோடு தொடர்பு கொள்வார்கள். தம்மைப் போன்று பிறரையும் மதிப்பார்கள். நெஞ்சத்திலே அமைதியும் சமாதானமும் இருக்கும் பொழுதுதான், உலகில் விடுதலை என்பது சாத்தியமாகும். ஒவ்வொரு மனிதரும் உள்ளார்ந்த முரண்பாடுகளில் இருந்தும் விடுதலை பெற வேண்டும்.

உண்மையான ஒத்திசைவு என்பது கருத்துக்களின் ஒத்திசைவு அன்று. சிந்தனைகளின் ஒத்திசைவும் அன்று, அது உளவிருப்பு உந்தல்களின் ஒத்திசைவாக இருத்தல் வேண்டும். உண்மையான மெய்யியல் என்பது உடனடி அனுபவங்களின் மெய்யியலாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட வாழ்வியல் நோக்கங்களை இருப்பிய மெய்யியலின் முன்னெடுக்க முடியாது.

வாழ்க்கை என்பது ஆக்கத்திறனுடன் அசைந்து செல்வதால், யாதாயினும் ஒரு நோக்கத்துடன் அதனைக் கட்டிவைத்தல் சாத்தியம் அன்று. நிகழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையின் பண்பும் இயல்பும் நேர்மியமாக அமையும். நேர்மிய வாழ்க்கை (Authentic Life) என்பது ஒவ்வொருவரதும் சொந்த அனுபவங்களுக்கு உட்பட்டதாகவும், அவருக்கே உரியதாகவும் அமையும். வரலாற்றியல், கார்ல் ஜஸ்பேர்ஸ் என்பவரைத் தவிர்ந்த ஏனைய இருப்பியற் கோட்பாட்டாளர்கள் அனைவரும் விஞ்ஞான மெய்யியல், வரலாற்றியல் போன்ற ஆய்வுத் துறைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பியக் கல்விக் கோட்பாட்டின் பிரதான இலக்கு உள்ளார்ந்த உண்மையை உணர்ந்து கொள்ளச் செய்வதாக அமைந்தது. கைத்தொழில் வளர்ச்சியும், சமகாலப் பொறியாட்சிப் பண்பாடுகளும் நவீன மனிதரை அந்நியமாக்கிவிட்டன. மனிதரிடத்துப் பதகளம், மனமுறியு, பயம், குற்றவுணர்ச்சி முதலியவை நிறைந்து வருகின்றன. மனிதரின் தனித்துவமான இயல்புகள் மாசுபடுத்தப்பட்டு வருகின்றன. மனிதர் தமது அகவயமான உள்ளுணர்வுகளைக் கண்டு கொள்வதற்குக் கல்வி உதவுதல் வேண்டும். தமது இருப்பின் இயல்புகளை ஒவ்வொருவரும் கண்டு தெளிந்து கொள்வதற்குக் கல்வி துணை செய்தலே மேம்பாடானது.

கற்றவர்களை மத்தியாகக் கொண்ட கல்வியே வற்புறுத்தப் படுகின்றது. கற்றவர்களுக்குப் பூரணமான சுதந்திரம் தரப்படுதல்

வேண்டும். நிறைவின்மையை நிறைவுபடுத்தலே நேர்மியக் கல்வியாகும். ஒவ்வொருவரதும் தனித்துவமான ஆற்றல்களுக்கும் திறன்களுக்கும் ஏற்றவாறு கல்வியை வழங்குதலே பொருத்தமானதாகும். கல்விச் செயற்பாட்டின் வலிமை ஒவ்வொருவரும் தம்மை உணர்ந்து கொள்ளச் செய்தலாகுதல் உறுதிபெறும்.

கலைத்திட்டத்தைப் பொறுத்தவரை விஞ்ஞான பாடம் ஒவ்வொரு வரதும் அகத்தை உணர்ந்து கொள்வதற்கும் உள்ளொளி பெறுவதற்கும், சமாதானத்தை ஈட்டுவதற்கும் பொருத்தமானதாக அமையவில்லை. இதிலிருந்து விஞ்ஞான பாடத்தை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. சமயம், அறவொழுக்கம், மானுடப் பண்புகள் முதலியவற்றைக் கலைத்திட்டத்தில் கட்டாயமாக வைக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகின்றது. அண்மைக்காலமாக மேற்கு நாட்டுப் பொறியியற் கல்லூரிகளில் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுவதையும் காணலாம். இந்த இணைப்பு இல்லாவிடில் ஆளுமைப் பண்புருவாக்கம் சிதறடிக்கப்பட்டு விடும்.

பிரபஞ்சத்தில் ஒருவரது இருப்பிடத்தை விளங்கிக் கொள்வதற்கு சமயக் கல்வி இன்றியமையாதது. தன்னைத் தான் கட்டியெழுப்புவதற்கும் சமயக் கல்வி துணை செய்யும். சுயவிருத்தியில் ஈடுபடும் திறன்களுக்கும் சமயக் கல்வியினால் வளர்த் தெடுக்கப்படும் அறக்கல்வியும் அதனோடு இணைந்தது.

மாணவர் தமது உள்ளார்ந்த இயல்புகளை அறிந்து கொள்வதற்கு ஆசிரியர் துணை நிற்றல் வேண்டும். அதற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தை உருவாக்குதலே ஆசிரியரின் தலையாய பணியாகும். இருப்பியம் பற்றிய அறிவு ஆசிரியருக்கு இன்றியமையாதது. தன்னை உணரும் பாங்கு ஆசிரியருக்கு இருப்பின் மாணவர்களை அவர்கள் இலகுவில் வழிநடத்த முடியும்.

சமகால சமூக பொருளாதார அரசியற் சூழலில் மனிதர் தமது சுயவியல்புகளை இழந்து நிற்கும் அவலங்களுக்கு எதிரான துலங்கலாக இருப்பியம் எழுந்துள்ளது 'கல்வியிலும், கலை இலக்கியங்களிலும் இதன் பாதிப்பு பரவலாக உண்டு. அரசியலில் யுத்தத்துக்கு எதிரான கோட்பாடு விசையாக இது இயங்குகின்றது. கல்வியில் இக் கோட்பாடு முழுமையான ஆளுமையை, பூரணமான மனிதரை உருவாக்கும் பண்புகளை வலியுறுத்துகின்றது.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் அகவயமான அணுகுமுறைகள் பொருண்மை அற்றது என்றும், யதார்த்த மற்றது என்றும், பொருத்தமற்றது என்றும், அறியாமையை வளர்க்கின்றது என்றும் குறிப்பிடப்படும் வேளை அகவயமான அறிவின் முக்கியத்துவம் கிர்கே கார்டினால் வலியுறுத்தப்படு கின்றது. அகவயமான அறிவு, புறவயமான அறிவிலும் மேலோங்கி நிற்றல் சுட்டிக்காட்டப்படுகின்றது. நேர்வியங்களை (Facts) விழுமியங்களாக (Values) மாற்றும் பொழுது

விழுமியங்கள் மீதான நம்பிக்கை இழக்கப்படுகின்றது. புறவயமான அறிவுக்கு அதீதமுதன்மை கொடுக்கப்படும் பொழுது இவ்வாறான அவலம் ஏற்பட்டு விடுகின்றது. இந்நிலையில் எவற்றையும் அகவயமாகத் திருத்தியமைக்கும் முறைமைக்குக் கல்வி அபத்தங்களைக் கொடுத்தல் வேண்டும்.

இன்றைய சமூகச் சூழலும், கல்விச் சூழலும் விழுமியம் குன்றிய நிலைகளில் உள்ளன. இந்நிலையில் குழப்பமும், நேர்மைக் குலைவும், முரண்பாடுகளும் இயல்பாகவே வளர்க்கப்படுகின்றன. கல்விச் சூழலானது தன்னுணர்வை வளர்க்கவும் சுயகாட்சிகளை முகிழ்த்தெழச் செய்யும் வகையிலும் அமைக்கப்படல் வேண்டும். கலை, இலக்கியம், சமயம், மானுடப்பண்பு என்ற புலங்களால் பொருத்தமான கல்விச் சூழலைப் புனைந்து கொடுக்க முடியும். சமூக இயக்கத்தில் தனிமனிதரே நடுநாயகமாக ஆக்கம் பெறுதல் வேண்டும்.

இருப்பியக் கல்விச் சிந்தனைகளுக்கு எதிராக வைக்கப்படும் பொதுவான கண்டனம் மனிதரைப் "பிணியாளராகக்" கொண்டு அணுகு முறையின் மீது பின்னப்பட்ட கருத்தியலாக இருக்கின்றது என்பதாகும். இருப்பியர்களின் கருத்துக்கள் சமயக் கல்வி, அறக் கல்வி என்பவற்றுக்குப் பொருத்தமாக இருப்பினும், விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்விக்குப் பொருத்தமானதாக அமையவில்லை. இதனால் இருப்பிய அணுகுமுறை ஒரு பக்கச் சார்பாகி விடுகின்றது. சுய உணர்வுகளுக்குக் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்படும் வேளை, கல்வி வாயிலான தொழிற் பெறுபேறுகள் கல்வி உலகுக்கும், தொழில் உலகுக்கும் இடையேயுள்ள உறவுகள் முதலியவை பாதிக்கப்படுகின்றன.

மேற்கூறிய திறனாய்வுகள் முன் மொழியப்பட்டாலும், இன்றைய சமூக அவலங்களைத் திருத்துவதற்கும், முற்றிலும் பொருள் சார் நிலைமைகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும், கல்வியிலே சம நிலையை உண்டாக்குவதற்கும் இருப்பியம் துணை செய்வதாக இருக்கின்றது. ஒருவருடைய செயல்களின் முக்கியத்துவத்தை இருப்பியத்துக் கான கல்வி தொடர்ந்து மீள வலியுறுத்துகின்றது.

# விற்யென்ஸ்ரின் -
# அளவைசார் புலனறிவாதத்துக்குரிய கல்வி.

சொற்களிலே சிக்கலடைந்துள்ள பாரம்பரியமான மெய்யியற் கருத்துக்களையும், கல்விக்கருத்துக்களையும் மீட்டெடுக்கும் முயற்சி வின்யென்ஸ்ரினிடத்து முனைப்படைந்தது. அதன் விளைவாக எழுந்த தரிசனமே அளவைசார் புலனறிவாதம். மொழியையும் அனுபவங்களையும் பகுத்து ஆராய்தல் வாயிலாக உண்மை நிலவரங்களின் கருத்தை விளங்கிக் கொள்ள முடியும் என்பது அவரது கருத்து. அனுபவங்களின் நேர்மியங்களைக் குறியீடுகள் வாயிலாக வெளிப்படுத்துவதே மொழி. இந்த வெளிப்பாடு எளிமையானதாகவோ, சிக்கல் பொருந்தியதாகவோ அமையலாம். மொழியின் முழு வலைப்பின்னல்களையும் மேற்கூறிய இருவழிகளிலும் ஆராய்ந்து விடலாம்.

மொழியின் மெய்யியல் சார்ந்த முக்கியத்துவம் இந்நூற்றாண்டிற் பல்வேறு அறிஞர்களினால் வற்புறுத்தப்பட்டுள்ளது. "மொழியும் பொருள் முதல் வாதமும் "மொழியியல் படிப்பு மனிதனை அறியவும், சமூக வரலாற்றைத் தெரியவும், சமூகம் இயங்கும் வகையினை விளக்கவும், மிகவும் உதவியாகவுள்ளது. இதுதான் இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறப்பான சம்பவம்" என்று குறிப்பிடுகின்றனர் (1977).

விற்யென்ஸ்ரின் மொழி பற்றிய பல கருத்துக்களை முன்வைத்தார். வாழ்க்கை நேர்மியங்களுக்கும் மொழிக்குமுள்ள தொடர்புகளையும் விளக்கினார். மொழியைப் பகுத்தாராய்தலும் விளக்குவதுமே உண்மையைத் தேடுதலாக அமையும். நேர்மியங்களைக் காட்சி வடிவில் தருவதே மொழி. நேர்மியங்களும் மொழி வெளிப்பாடும் மிக நெருங்கியவை. மொழி என்பது ஒரு வாழ்க்கைக் கோலம் என்றும் அங்கு நிகழும் தொழிற்பாடுகள் ஒரு விளையாட்டு முறைமை என்றும் குறிப்பிட்டார். மொழியிற் பயன்படுத்தும் ஒவ்வொரு சொற்களுக்கும் திட்டவட்டமான கருத்து உண்டு. திட்ட வட்டமான கருத்தைப் பொதிந்திராத சொல் பொருளற்றதாகின்றது. உதாரணமாக "வானம்" "மலர்" என்பவை பொருள் பொதிந்த திட்ட வட்டமான சொற்கள். ஆனால் "வானம்" "மலர்" என்பவை திட்ட வட்டமான பொருள் அற்ற

சொல்லாகின்றது. இவ்வாறான தொடரியல் பலவற்றைப் பௌதிகவதிகத்தினர் பயன்படுத்தும் பொழுது அவை பொருளற்று இருக்கின்றன என்று குறிப்பிடுகின்றார்.

"அனைத்து யதார்த்தங்களும் இலட்சியப் பாங்கானவை" என்ற பௌதிகத் தொடரை ஆராய்ந்து பார்த்தல் மேற்குறித்த கருத்து மேலும் தெளிவுபடுத்தலாம். இங்குள்ள "யதார்த்தம்", "இலட்சியம்" என்பவற்றுக்குத் தெளிவு பொருள் இருந்தாலும், தொடர் நிலையில் அவை பொருளற்று விடுகின்றன. பௌதீகக் கூற்றுக்களின் பொருளை விளங்கிக் கொள்ள அக்கூற்றுக்களை நாளாந்த வாழ்வின் பொருண்மை கொண்ட மொழிக்கு மாற்றுதல் வேண்டும் என்பது அவரது கருத்து. பாரம்பரிய மெய்யியல் மொழி இவ்வாறாக பல நிறைவற்ற பண்புகளைக் கொண்டுள்ளது.

விற்யென்ஸ்ரின் வழங்கிய சிந்தனைகள் அளவைசார் புலனறிவாதம் அல்லது தருக்க நேர்நிலை வாதம் (Logical Positivism) என்ற மெய்யியல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாக அமைந்தன. மெய்யியலில் இவரது கருத்துக்கள் புதிய அணுகுமுறையைத் தந்தன. புதிய புலக் காட்சியினை ஏற்படுத்தின. மொழியியல் வழியாகக் கருத்துக்களின் பொருண்மையைச் சீர்தூக்கிப் பார்க்கும் திட்டவட்டமான அணுகு முறையினை அவர் முன்னெடுத்தார்.

கார்னாப் என்பவர் மொழியியல் தொடர்பாகத் தந்த கருத்துக்கள் விற்யென்ஸ்ரின் தந்த மெய்யியலை மேலும் படிமலர்ச்சி கொள்ளச் செய்தன. விற்யென்ஸ்ரின் விஞ்ஞானம், மெய்யியல் ஆகிய இரண்டினுக்கு முள்ள வேறுபாடுகளைப் பொருத்தமான நிலைகளில் அணுகத் தவறிய இடைவெளியை கார்னாப் நீக்க முயன்றார். நேர்மியங்கள் (Facts) பற்றிய அறிவை விஞ்ஞானம் தருகின்றது என்றும், மெய்யியலில் குறிப்பிடப்படும் நேர்மியங்களைக் கண்டறிவதற்கு அந்த முறையியல்களும் உபாயங்களும் பயன்படமாட்டாதென்றும் கார்னாப் விபரித்தார்.

அளவை நிலைப் புலனறிவாதம் ஒரு மெய்யியற் தொகுதியாக அமைகின்றதே அன்றி அது ஒரு முழுமையான கல்விக் கோட்பாடு அன்று. ஆனால் அறிவாய்வியலில் (Epistemology) அதன் பங்களிப்பு விதந்து குறிப்பிடப் படுகின்றது. கற்பித்தலியலிலும், அறிவை - வழங்குதலிலும், கையளித்தலிலும் இக்கோட்பாடு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

கல்வியியலில் இதன் நோக்கு யாதெனில் அறிவு - அறியாமை என்பவற்றைப் பிரித்து இனங்காணல், கருத்து - கருத்து இன்மை ஆகியவற்றைப் பகுத்து நோக்குதல், பொருண்மை கொண்டது - பொருண்மையற்றது என்பவற்றை அறிதல் ஆகியவற்றை அறிந்து தெளிவதற்கு விற்யென்ஸ்ரின் வழங்கிய கருத்துக்கள் துணை செய்கின்றன. முழுக் கல்விச் செயற் பாடுகளையும் காரண காரிய

நிலைகளிலே பகுத்தாராய்வதற்கும் நுண்ணறிவு நிலைப்பட்ட செயல்முறைகளை வளர்ப்பதற்கும் உதவியுள்ளன. அறிவென்பது அறிதிட்டம் (Empirical) உடையது. கல்விச்செயல்முறை என்பது நம்பகரமானதும், சரி பார்க்கக்கூடியதும், அறிதிட்டம் கொண்டதுமான தளத்தின்மீது கட்டியெழுப்பப்படுதலே பொருத்தமானது. நடைமுறை நிகழ்வுகளில் இருந்து சரியானதும் தப்பானதும் உணர்த்தப்படல் வேண்டும். இந்நிலையில் அறிவின் பயன்கொள் பாங்கு வற்புறுத்தப்படுதலைக் காணலாம்.

கல்வியின் தலையாய நோக்கம் விமர்சனப் பாங்கானதும், விஞ்ஞான உளப்பாங்கு கொண்டதுமான செயற்பாடுகளை வளர்த்தலாக இருந்ததே சிறந்தது. இவை மொழிப் பயிற்சியின் வாயிலாகவும், மொழிப்பிர யோகத்தின் வழியாகவும் ஈட்டப்படக்கூடியவை.

கற்பிக்கும் முறையியல் தருக்க நிலைப்பட்டதாகவும், நேர்ப்பாங் கானதும் இருத்தல் மேம்பாடானது. அறிவின் மெய்ம்மை நிலைகளைப் பகுத்தாராய்ந்து மாணவர்களுக்கு வழங்கக்கூடிய ஆற்றலும், மொழித் திறனும் ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். ஆசிரியரின் அணுகுமுறைகள் விஞ்ஞான நிலைப்பட்டதும், புறவயமானதாகவும் அமைதல் பொருத்த முடையது. ஒவ்வோர் அறிவுப்புலத்திலும் தரப்படும் எடு கோள்களையும், கருதுகோள்களையும் பரிசோதித்து, முடிவுகளை மேற்கொள்ளும் ஆற்றல்கள் ஆசிரியருக்கு வேண்டுவனவாக வற்புறுத்தப்படுகின்றது. காரணங் காணும் திறனை மாணவர்களிடத்தும், தம்மிடத்தும் ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். காரணங்கண்டு விளக்கமுடியாத வற்றையும், சரி, தவறு என்பவற்றை அறியமுடியாதவற்றையும் தள்ளுபடி செய்தலே பொருத்தமான ஆசிரியத்தின் பண்பு.

சரி. தவறு என்பவற்றைக் காணமுடியாத, காரண காரியத் தொடர்பு களை விளக்கமுடியாத, தருக்க நிலைகளால் உய்த்தறியப் படாத கருத்துக் களைக் கற்பித்தல், நடைமுறை வாழ்க்கைக்கும் கல்விச் செயற்பாட்டுக்கும் பொருந்தாத முயற்சியாகும்.

இவர்களது கலைத்திட்டத்தில் மொழி, இலக்கணம், அளவையியல் முதலியவை சிறப்பார்ந்த இடத்தைப்பெறுகின்றது. மொழியைப் பகுத்தா ராயும் திறன்கள் ஒவ்வொரு மாணவரிடத்தும் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். மொழியைப் பகுத்து ஆராய்வதன் வாயிலாக தெளிந்த சிந்தனை யை உருவாக்கமுடியும். கருத்தற்ற குளப்பங்களிலிருந்து மாணவரை விடுவிப்பதற்கும் அதுவே திறவுகோலாக அமையும். இக்கலைத்திட்ட ஒழுங்கமைப் பில் சமயம், ஆன்மிக அறிவு முதலியவற்றைக் கற்பித்தல் நழுவவிடப் படுகின்றது. விஞ்ஞானக் கல்விக்கு அதீத முக்கியத்துவம் தரப்படுகின்றது. எத்தகைய திறனாய்வும் புறவயப் பாங்கானதாக அமைதல் வேண்டும் என்பது இங்கு

வலியுறுத்தப்படுகின்றது. ஆக்கத்திறன் மிக்க கற்பனைகளை வளர்ப்பதற்குரிய கலைத்திட்ட ஏற்பாடுகளே வற்புறுத்தப்படுகின்றன.

அளவை நிலைப் புலனறிவாக அணுகுமுறை விஞ்ஞான மானுடவியல் (Scientific Humanism) மீது நம்பிக்கை கொள்ளுகின்றது. மனிதரை நடுநாயகமாகக் கொள்ளும் அணுகுமுறை தலைதூக்கி நிற்கின்றது. அறிவின் மிக உன்னதப் பொருளாக மனிதர் முன்னெடுக்கப்படுகின்றனர். அதிமானுடத் தன்மைகள் இங்கு ஏற்படுவதில்லை. விஞ்ஞானத்தின் வழியான மானுட மேம்பாடு முன்னெடுக்கப்படுதல் ஊக்குவிக்கப் படுகின்றது. பள்ளிக்கூட முகாமைத்துவத்தில் ஆசிரியரைப்போன்று மாணவருக்கும் முதன்மைநிலை தரப்படுதல் வேண்டும். பள்ளிக்கூட ஒழுங்கமைப்பு பின்வரும் ஆற்றல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) தொழிற்பாட்டு நிலையில் வினைத்திறன் மேம்பாடு.

(2) பயனுடைமை மேம்பாடு.

(3) மானுட மேம்பாடு.

எல்லாப் பொருள்களும் சார்பு நிலையில் விளக்கப்படுகின்றன. நித்தியமான பொருள் என்பது நிராகரிக்கப்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டு, பள்ளிக் கூட ஒழுங்கமைப்பின் வழியாகத் தரப்பட்ட மரபுகளை யும், பழமைகளையும் கண் மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளும் உளப் பாங்கினை மாற்றியமைத்தல் வேண்டும். புத்தாக்கங்களை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு ஊக்கம் தருதலே சிறந்தது. தருக்க நிலைப்பட்ட வரைவு, இலக்கணங்களை ஆக்கும் திறனும், கண்டறியும் திறனும் மாணவர்களிடத்து வளர்க்கப்படுதலே சிறந்தது.

உண்மை பற்றி விஞ்ஞானக் கோட்பாட்டுக்குப் பொருந்தியதாகக் கல்விச் செயல் முறை இடம் பெறல் வேண்டும். விஞ்ஞானங்களின் விஞ்ஞானத்தை உருவாக்கும் செயல் பணியில் தொடர்ச்சியாக ஈடுபடுதலே சிறந்தது. இக்கோட்பாடு மெய்யியலில் மட்டுமன்றி விஞ்ஞானக் கல்வியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பரிசோதனைகள் அமைத்தல், உற்று நோக்கல், தகவல் சேகரிப்பு, வகைப்படுத்தல், பொதுமை காணல் போன்ற நீண்ட பொறுமையான முயற்சிகளின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விஞ்ஞானக் கோட்பாடுகள் தருக்கவியல் இலக்கணம் முதலியவை தரும் விதிகளுக்கு உட்பட்டதாகவே மொழி வடிவம் பெறுதல் வேண்டும். இந்த விதிகளைப் பின்பற்றா விடில் கோட்பாடுகளின் சமர்ப்பணம் பெறுமதி அற்றதாகிவிடும். இந்தப் பயிற்சியை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

சொற்கள் வாயிலாக நிகழ்த்தப்படும் பொருண்மையற்ற அலங்காரக் கோலங்கள் மீது எச்சரிக்கை கொள்வதற்கும் இந்தக் கோட்பாடு விசை தருகின்றது.

# பசில் பேர்ன்ஸ்ரின் - மொழியும் வர்க்கமும் கல்விக்கையளிப்பும்

**வா**ழ்க்கைத் தொடர்புகளின் வழியாக வடிவம் பெறும் கோலங்களை குறியீட்டு வடிவில் மொழி வெளிப்படுத்துகின்றது. இந்த நிலைப்பாட்டில் இருந்து மேலும் முன்னேறிச் செல்லும் பசில் பேர்ன்ஸ்ரின், சமூகக் கட்டமைப்பின் குறியீட்டுத் தெறிப்பாக மட்டுமல்ல, சமூகத்தின் திரண்டெழுந்த பண்பாடு என்ற அனைத்தும் மொழியால் வெளிப்படுகின்றது என்று விளக்குவதுடன் அவற்றை கல்வியுடன் அவர் தொடர்பு படுத்துகின்றார்.

தொழிற்பாகுபாடு, தொழில்நிலை, அந்தஸ்து, சமூகப் பொறுப்புக்கள், குடும்ப இயல்பு, முதலிய பண்புகளுக்கு ஏற்றவாறு தனித்துவமான தொடர்பாடல் முறைமை இருக்கும் என்பதை அவர் தமது நுண் ஆய்வுகளின் வழியாக விளக்கினார். கல்வி நோக்கில் அவர் மொழியை இரண்டு விதமாகப் பாகுபடுத்தினார். அவை -

(1) பொது மொழி (Public Language)

(2) முறைசார் மொழி (Formal Language)

பொது மொழி வாழ்க்கைச் செயற்பாடுகளோடு இணைந்தது. நேர்ப்பண்பு உடையது, தருக்கப் பண்புகளிலும் உணர்ச்சிப் பண்புகளுக்கு முக்கியத்துவம் தருவது. எளிதாக விளங்கிக் கொள்ளப்படத்தக்கது. முறைசார் மொழி கூடிய தருக்கப் பண்பு கொண்டது, சிக்கல் நிரம்பியது, ஒழுங்கமைக்கப்பட்ட அறிவுத் தொகுதியை அறிவுறுத்த வல்லது.

பாட்டாளி வர்க்கத்தினர் பொது மொழியோடு பெருமளவிலே கட்டுப்பட்டிருப்பர் என்பது அவரது கருத்து. உயர் நிலையில் உள்ளோர் மத்திய தர வகுப்பினர் ஆகியோர் பொது மொழி, முறைசார் மொழி ஆகிய இரண்டையும் பயன்படுத்துவோராய் இருப்பார்கள். இவை கல்வியில் எத்தகைய தாக்கங்களை விளைவிக்கின்றன என்பதையும் பேர்ன்ஸ்ரின் பகுத்தாராய்கின்றார்.

முறைசார் மொழியே பெருமளவில் கற்பித்தல் மொழியாக அமைவதால் பாட்டாளிகள் குழந்தைகளுக்கு அது தொலைவில் உள்ள மொழியாகவும், அந்நியப்பட்ட மொழியாகவும் தொழிற்படுகின்றது. மறுபுறம் அது மத்திய தர வகுப்பினருக்குச் சாதகமாக அமைந்து

விடுகின்றது. இக்காரணத்தால் வாய்ப்பு மிக்கோரின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடச் செயற்பாடுகள் வாய்ப்பு மிக்கதாகவும் அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை முழுநிறைவாகப் பயன்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. அதேவேளை பாட்டாளிகளின் பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்கள் வீணடிக்கப்படுகின்றன.

கல்வியிலே சம சந்தர்ப்பம் என்று மேலெழுந்த வாரியாகச் சொல்லப்பட்டதாலும், பள்ளிக்கூட ஒழுங்கமைப்பினுள்ளே இவ்வாறான நிலையில் சமத்துவம் இன்மையே தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

போர்ன்ஸ்ரின் தமது கருத்தை மேலும் அழுத்தமாக வலியுறுத்துவதற்கு கருத்துக்குறிகள் (Codes) என்ற எண்ணக்கருவினை முன் வைத்தார். மொழியில் நிகழும் கருத்துக்கையளிப்பில் மூன்று முக்கிய செயல் முறைகள் முதற்கண் பகுத்தாராயப்பட்டன. அவை -

1. கருத்தை உள்வாங்கும் தனிமனிதருக்குரிய அறிபரவல் (Orientation) செயற்பாடு.

2. தனிமனிதர் தாம் ஏற்கனவே வைத்திருக்கும் மொழிச் சமிக்ஞைகளை இணைத்து (Association) ஒன்று சேர்க்கும் செயற்பாடு.

3. திருப்தியான துலங்கலைத் தரக்கூடியவாறு குறியீடுகளை ஒழுங்கமைக்கும் (Organisation) செயற்பாடு.

ஆரம்ப நிலையான சமூகமயமாக்கல் செயற்பாட்டில் மொழியின் தொழிற்பாடுகள் நெறிப்படுத்துவனவாய், போதனை செய்வதாய், மனிதத் தொடர்புகளை மேற்கொள்வதாய், கற்பனையைத் தூண்டுவதாய் அமையும் பொழுது மேற்கூறிய மூன்று செயற்பாடுகளும் இடம்பெறும். இவை "கருத்துக் குறிகள்" என்று குறிப்பிடப்படும்.

பேர்ன்ஸ்ரின் சுட்டிக்காட்டுகின்ற பொது மொழி, முறைசார் மொழி, என்பவற்றை "கட்டுப்படுத்திய கருத்துக்குறி" "விரிவுபடுத்திய கருத்துக்குறி" என்று முறையே குறிப்பிடுகின்றார்.

கட்டுப்படுத்திய கருத்துக்குறியில் (Restricted Code) ஒருவரின் மொழி வீச்சு குறுகியதாகவும், மொழிப்பதிலீடுகள் வரையறுக்கப்பட்ட அளவிலும், உடனடியான நடப்பு நிலவரங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படும். பாட்டாளிகள் பயன்படுத்தும் மொழி இவ்வகையைச் சார்ந்ததாகும். ஆனால் சமூகக்கட்டுமானத்தின் உயர் நிலையிலுள்ளோர், மத்தியதர வகுப்பினர் ஆகியோர் பயன்படுத்தும் மொழி "விரிவுபடுத்திய கருத்துக்குறி" (Elaborated Code) வகையைச் சார்ந்தது. மிகவும் பரந்த மொழிப் பதிலீடுகளைக் கொண்டதாகவும், ஆழ்ந்த விரிந்த நிலையில் பயன்படுத்தக்கூடியதாகவும் இம்மொழிப்பிரிவு அமைகின்றது. இம்மொழியே கற்பித்தலில் இடம் பெறுவதால் அது சமூக அடுக்கமைப்பில் உயர்ந்த நிலையில் இருப்போருக்கு வாய்ப்பானதாக

இருக்கின்றது. மேலும் அவர்கள் இருவகை மொழியிலும் ஆற்றலுள்ளோராய் இருப்பதனால் கல்விக்குரிய வாய்ப்புகளையும், கற்றல் சந்தர்ப்பங்களையும் கூடுதலாக அனுபவிக்கின்றனர். இக்கருத்தை மேலும் திட்ப நுட்பமாக விளக்குவதற்கு "கல்விக் கையளிப்பு" (Educational Transmission) என்ற எண்ணக்கருவை முன்வைத்தார்.

தொடர்பாடலின் ஆழ்ந்த அமைப்புக்கள், வர்க்க வேறு பாடுகளின் செல்வாக்கினால் ஊட்டம் பெறுகின்றன. பெற்றாரின் கல்வி மட்டங்களை அடிப்படையாக வைத்து அவர் வர்க்கம் (Class) என்பதை விளக்க முயன்றார். மேலும் ஆரம்பநிலைச் சமூகமயமாக்கற் செயற்பாட்டில் வர்க்க அமைப்பும் குடும்ப பின்புலமும் பெருமளவில் செல்வாக்குச் செலுத்து வதுடன், அவர்களின் பண்பாடும் சூழலும் கையளிக்கப்படுகின்றது. பாட்டாளிகளின் குடும்பமுறைமை கட்டுப் படுத்திய கருத்துக்குறியைக் கொண்டதாகவும் மூடிய தொடர்பாடலைக் கொண்டதாகவும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார். சமூகக்கட்டமைப்பில் உயர்ந்த நிலையில் உள்ளோரது தொடர்பாடல் முறை "திறந்த" பண்பைக் கொண்டதாகவும், காணப்படுகின்றது. இவர்களின் குடும்பத்தீர்மானங்கள் அனைத்தும் அந்தஸ்தினால் தீர்மானிக்கப்படும். இதனால் "அந்தஸ்த்து நிலைக் குடும்பங்கள்" என்ற தொடரும் பயன்படுத்தபடுகின்றது. இக் குடும்பங்களின் தொழிற் பாடுகள் குழந்தைகளின் கற்கும் திறனை முன்னேற்றப்படுத்துகின்றன. பாட்டாளிகளின் குடும்பங்கள் "தனிநபர் நிலைக் குடும்பங்கள்" எனப்படும். இவர்களுக்குரிய தீர்மானங்கள் அந்தஸ்த்தினால் தீர்மானிக்கப்படாது. குடும்பத்தின் முக்கிய நபரினால் மேற் கொள்ளப்படும்.

அந்தஸ்த்து நிலையில் உயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகள், "திறந்த பண்புத் தொடர்பாடல்", "மூடிய பண்புத் தொடர்பாடல்" இரண்டிலும் வல்லவர்களாய் இருப்பதனால் கற்பிக்கும் திறன் இலகுவாகின்றது. கல்விக்கையளிப்பும் எளிதாக மேற்கொள்ளப் படுகின்றது.

கல்விக் கையளிப்பினை முறைசார் கல்வி ஒழுங்கமைப்பின் வழியாகவும் பேர்ன்ஸ்ரின் அணுகினார். அறிவுக் கையளிப்புக் கலைத் திட்டத்தின் வழியாக மேற் கொள்ளப்படுகின்றது. கலைத்திட்டத்தை இவர் இரண்டு பிரிவாக வகைப்படுத்துகிறார். அவை -

1. சேர்த்தல் வகை (The Collection Type)
2. ஒன்றிணைந்த வகை (The Integrated Type)

சேர்த்தல் வகை பாரம்பரியமானது உயர் நிலையில் உள்ளோருக்கு வாய்ப்பு மிக்கது. சேர்த்தல் வகையில் பாடப்புலங்கள் தெளிவாகப் பாகுபடுத்தப்பட்டிருக்கும். ஒன்றிணைந்த வகையில் பாடப்புலங்கள் திறந்த வகையிலும் தொடர்புகளின் அடிப்படையில் இணைக்கப்

பட்டிருக்கும். இரண்டாம் நிலைக் கல்வியில் சமகாலக் கலைத்திட்ட செயற்பாடுகள் ஒன்றிணைந்த வகையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. கல்வியும் மொழியும் அறிவுக்கையளிப்புப் பற்றியும் ஆராயும் பொழுது ஒன்றிணைந்த கலைத்திட்ட ஏற்பாடு சமூக வகுப்பினர்களுக்கிடையே சம சந்தர்ப்பத்தையும், சமூக நீதியையும் ஏற்படுத்துவதுடன் பிரதிகூலங்களை ஒழிக்க வல்லது.

சமூகவர்க்கம், மொழி, தொடர் பாடல் அறிவுக்கையளிப்பு ஆகியவற்றுக்கு இடையே காணப்படும் தொடர்புகளை விளக்கியமை கல்வியியல் பயனுறுதி மிக்க ஒரு செயற்பாடாகக் காணப்படுகின்றது. கற்பித்தலில் சமூக மொழி, சமூக மயமாக்கல் போன்றவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கு இவரது ஆய்வுகள் தூண்டுதல் தந்தன. அறிவுக் கையளிப்பில் நிகழும் செயல் முறைகளை அவர் பின்வருமாறு இனங் காட்டினார். அவை-

1. நிகழ் நிலைப்படுத்தல் (Contextulization)
2. நிகழ் நிலைப்படுத்தல் குலைப்பு (Decontextulization)
3. மீள் நிகழ் நிலைப்படுத்தல் (Recontextulization)

குடும்பச் சூழலில், ஆரம்ப நிலைச் சமூக மயமாக்கலில், பெறும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பெறும் அறிவு உள்வாங்கல் பிரதான "நிகழ்ச்சி" நிலைப்படுத்ததல்" எனப்படும். நியமமான கல்வியில் வழங்கப்படும் அறிவை உள்வாங்க முடியாது தத்தளிக்கும் நிலையில் ஏற்படுவது "நிகழ்ச்சி நிலைப்படுத்தல் குலைப்பு" எனப்படும். புதிய சந்தர்ப்பங்களை உள்வாங்கி அறிவைப் பெற்றுக் கொள்ளும் நிலை, "மீள் நிகழ்ச்சி நிலைப்படுத்தல்" எனப்படும். ஒன்றிணைந்த கலைத்திட்டத்தில் நிகழ்ச்சி நிலைப்படுத்தல் அனைத்து மாணவர்க்கும் சந்தர்ப்பங்களைக் கிடைக்க செய்ய உதவும் என்ற கருத்தும் முற்போக்கானதாகவுள்ளது.

இவர் விளக்கிய வர்க்க வேறுபாடு, மொழியியற் கருத்துக்குறிகள் முதலியவை பல அறிவியற் கண்டனங்களை எதிர் கொள்ளுகின்றன. மேற்கு ஐரோப்பிய நிலவரங்களை அடியொற்றி இவர் விளக்கிய கல்விக் கருத்துக்கள் தென் ஆசிய நாடுகளுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

# நியெறெறே - தற் சார்புக்கான கல்வி

ஆபிரிக்க சமூகப் பின்புலத்தில் நியெறெறே முன்மொழிந்த தற்சார்புக்கான கல்வி (Education For Self Reliance) உணர்ச்சி பூர்வமாக மட்டுமன்றி நடப்பியல் தழுவியதாகவும், அறிவுபூர்வமானதாகவும் அமைகின்றது. "உலகம் நல்லது என்று சொல்லி எம்மீது திணிக்கும் பொருத்தமற்ற செயல்களை உறுதியாக நிராகரிக்கக் கூடிய தன்னம்பிக்கையும் சுயதிடனும் கல்வியால் வளர்த்தெடுக்கபடல் வேண்டும்" என்பது பொருத்தமான தெரிவுகளை மேற்கொள்ளும் அவரது நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றது.

ஆபிரிக்கக் கண்டம் - சிறப்பாக சகாரா பாலைவனத்துக்குத் தெற்கில் அமைந்துள்ள நெடும் பரப்பு பல தனித்துவமான கோலங்களைக் கொண்டுள்ளது. தென் ஆபிரிக்கப் புலத்தைத் தவிர்த்த ஏனைய நாடுகள் பின்தங்கிய அவிவிருத்திக் கோலங்களைக் கொண்டுள்ளன. வறுமையும், எழுத்தறிவு இன்மையும், தொடர் கதையாக உள்ளன. பன்முகப்பட்ட பண்பாட்டுக் கோலங்கள், வழிபாட்டு முறைமைகள், குலக்குழு விழுமியங்கள், நடத்தை ஒழுங்கமைப்புக்கள், நம்பிக்கைகள், பூர்வீக உற்பத்தி நுட்பங்கள் என்பவற்றின் மத்தியிலே அழிவு நிலை முரண்பாடுகள் மேலோங்காது தவிர்ப்பதற்குக் கல்விச் செயற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டியுள்ளது.

மேலைத் தேயச் செல்வாக்கினால் ஆபிரிக்காவில் வடிவமைக்கப் பட்ட கல்வி முறைமையும், கலைத்திட்டமும் சமூக வாழ்க்கை நிலையோடு ஒன்றிக்கத் தவறிவிட்டது. மக்கள் வாழ்வையும், பண்பாட்டையும், விழுமியங்களையும் கல்வி முறைமை வாயிலாக ஒன்றிணைப்புச் செய்யாது அந்நியப்படுத்திவிட்டது. அதிகார முறைமைக் கற்பித்தல் மாணவரின் ஆக்கச் சிந்தனையை மழுங்கடித்து விட்டது. தன்னல மேற்குழாம் (Selfish Elitism) என்பதை உருவாக்குவதற்கே கல்வி பெருமளவில் பயன்பட்டது. கற்றவர்கள் மக்கள் மத்தியில் இருந்து விடுபடுவோராகவே உருவாக்கப்பட்டனர்.

மேற்கூறிய எதிர்மறைப் பண்புகளுக்கு எதிரான கருத்துக்கள், தான் சானியாவைப் பின்புலமாகக் கொண்டு அவரால் எழுப்பப்பட்டன. மக்களிடையே கூட்டுறவை வளர்க்கும் உன்னதமான கடப்பாடும் தன்னிலும் வாய்ப்புக் குன்றியோருக்கு உதவுதலும் கற்பிக்கப்பட

வேண்டும் என்பது அவரது கருத்தாக அமைந்தது. அடிமை நிலையிலிருந்து மக்களை விடுவிப்பதற்குக் கல்வி உதவுவதுடன், கருவிக்கையாட்சிகளை மேலோங்கச் செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அது துணை நிற்றல் வேண்டும். ஆபிரிக்கா மாற்றங்களை வேண்டி நிற்கின்றது. மாற்றங்களை உடனடியாக எங்கோ ஆரம்பித்தல் வேண்டும். ஆண்களையும் பெண்களையும் உற்பத்தியை மேம்படுத்தும் கருவிகளாக்கும் கல்வி முறைமை வேண்டப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்வியைச் சமூக நோக்கு வயப்படுத்தும் முயற்சிகள் இவரால் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைக் கல்வியும் மேற்றொடர் கல்வியும் சமூகத் தேவைகளோடு இணைந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கை மீள வலியுறுத்தப்பட்டன. சமூகத்தையும் கல்வியையும் சமகாலத்திலே மாற்றியமைக்கவும், ஒன்றினுக்கு மற்றையது அனுசரணையாகச் செயற்படவும் வல்ல சமூக நோக்கு முனைப்பு அடையத் தொடங்கின.

சம்பியாவில் கவுண்டா என்பவர் முன் மொழிந்த மானுடவாதமும், தன்சானியாவில் நியெறெறே முன்மொழிந்த சமூக வாதமும், ஆபிரிக்காவின் பண்பாட்டுப் பின்புலத்தையும் நடப்பியலையும் கருத்திற் கொண்டவையாக அமைந்தன.

கல்வியின் அபிவிருத்திக் கோட்பாட்டை நியெறெறே மிகவும் தெளிவாக முன்வைத்தார். பிறர் தரும் பொருள்களையும் வசதிகளையும் கொடுத்து ஒருவரை அபிவிருத்திச் செய்யவோ, மேம்படுத்தவோ முடியாது. தனது முயற்சியால் ஒருவர் தம்மை மேம்படுத்திக் கொள்ளல் வேண்டும். தமக்குரிய உறுதியானதும் புத்திபூர்வம் மிக்கதுமான தீர்மானங்களை அவரே மேற்கொள்ளல் வேண்டும். தான் என்ன செய்கின்றார் என்பது பற்றியும் ஏன் அவ்வாறு செய்கின்றார் என்பது பற்றியும், ஆழ்ந்து விளங்கிக் கொள்ளல் வேண்டும். தமது அறிவையும் திறன்களையும் தொடர்ச்சியாக வளர்த்துக் கொள்வதுடன் சமுதாயத்தில் முழுமையான ஈடுபாட்டையும் சமத்துவமான பங்குபற்றையும் முன்னெடுக்க வேண்டும். இக்கருத்து வளர்ச்சியின் பின்புலத்தில் பொருளாதார சமூகத்திட்டமிடலில் கிராமிய மக்களை ஈடுபடுத்தும் முயற்சிகளும் முனைப்பு அடையத் தொடங்கின.

தன்சானிய மக்கள் காலங்காலமாக அனுபவித்துவந்த எதிர்மறையான தாக்கங்களில் இருந்து விடுபடுவதற்கும், வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை உணர்வு பூர்வமாக அறிந்து கொள்வதற்கும் சோசலிசத்தின் தேசியப் பண்பினையும் தற்சார்பையும் மக்கள் அறிந்து கொள்ளல் வேண்டும் என அவர் வலியுறுத்தினார். கல்வி வாயிலாக சமுதாய விருத்தியும், கூட்டுறவும், தமக்குத் தாமே உதவும் உளப்பக்குவமும் உறுதி செய்யப்படுதலே பொருத்தமானது.

அபிவிருத்தி என்பது கிராமிய நிலை மாற்றத்துடன் இணைந்தது. கிராமிய மக்களின் எதிர்மறை மனக்கோலங்கள் கல்விவாயிலாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். இவற்றின் பின்புலத்தில் வளர்ந்தோரின் கல்வி சிறப்பியல்பினை அவர் விளக்கினார். வறுமையும், இல்லாமைத் துன்பங்களும் "தலைவிதி" என்று எண்ணியிராது, அவை மாற்றியமைக்கப் பட முடியும் என்ற உளத்திடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். வளர்ந்தோர் கல்வியில் ''இல்லாமை'' எவ்வாறு மாற்றியமைக்கப்பட முடியும் என்ற கல்வியைச் செயல் அனுபவங்களுடன் கற்பிக்க வேண்டும். தற்சார்புக்கும் தம்மில் தாமே தங்கி வாழ்வதற்குமுரிய ஆற்றல் தரும் கல்வியே உயர்ந்த நோக்குடைய வளர்ந்தோர் கல்வியாகும்.

தனிமனித நிலைப்பாடுகள் தீவிர முனைப்படைந்து, முதலாளித்துவ முறைமை மனோபாவங்கொண்ட தனித் தனிப் பயிற்செய்கையாளர்களின் வளர்ச்சியானது சமூக நலனுக்கும் தேசிய நலனுக்கும் ஆபத்தானது என்று அவர் கருதினார். மக்களாட்சிச் செயல்முறையுடன் இணைந்த கல்வி வாயிலாக, விவசாய விரிவாக்கம் முன்னெடுக்கப்படுதலே விரும்பத்தக்கது. அனைத்து மக்களையும் ஈடுபடுத்தக்கூடிய வகையில் ஆரம்பம், இடைநிலை, உயர்நிலை மட்டங்களிலே விரிவாக்கம் பரந்த அளவிலே செயற்படுத்தப் பட்டு, கல்வியும் உற்பத்திப் பெருக்கமும் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். கல்வியிலே சமூகப் பங்குபற்றல் உற்சாகப்படுத்தப்படல் போன்று பிரதேச சமமின்மையும் தவிர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுதலே பொருத்தமானதாகும்.

தற்சார்புக்கும் சமுதாய மயமாக்கல் இயக்கத்துக்குமான கல்வி பற்றிக் குறிப்பிடும்போது, செயல்முறைக் கலைத்திட்டம் பற்றிய தெளிவான கோட் பாட்டை முன்மொழிகின்றார். பள்ளிக்கூடத்துடன் ஒரு பண்ணையினை அல்லது வேலைத் தலத்தை ஓர் அலகாக வைத்துக் கற்பிக்கும் (பல நாடுகளில் உள்ள) நடைமுறையினை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒரு பண்ணையாக மாற வேண்டும். பள்ளிக்கூடச் சமுதாயம் ஆசிரியர், பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள பெற்றோர், மாணவர் என்போரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அதன் உற்பத்தி வெளியீடுகளில் மாணவரின் நலன்கள் தங்கியிருத்தல் வேண்டும் என்ற கருத்தை அழுத்திக் கூறினார். இதனுடைய நோக்கம் மாணவர்களை தொழிலாளர்களாகப் பங்கு கொள்ளச் செய்வதன்று -அனுபவ நிலையாகக் கற்றலுடன் தீர்மானங்களை மேற்கொள்ளுர் நீவிர பங்குபற்றலை அவர்களிடத்து ஏற்படுத்துதலும் வற்புறுத்தப்படுகின்றது. ''பள்ளிக்கூடங்களே பண்ணைகளாக மாற வேண்டும்" என்ற இந்தக் கருத்து பல்வேறு ஆபிரிக்க நாடுகளில் பல்வேறு நிலைகளிலே கல்வி முறைமை யிலே செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. இந்தக் கலைத்திட்ட முயற்சியானது வேலையையும் கற்றலையும் ஒன்றிணைப்பதுடன் மட்டும்

நின்றுவிடாது பள்ளிக்கூடச் செயற்பாட்டுக்குரிய நிதியீட்டம் செய்வதற்கும் துணை செய்யும்.

இந்தத் திட்டத்தின் வெற்றியானது சூழலின் உள்ளார்ந்த வலுவிலும் சந்தை நிலவரங்களிலும் பெருமளவு தங்கியுள்ளது. உள்ளார்ந்த வலுவிலும் சந்தை நிலவரங்களிலும் பின்னடைவு ஏற்படும் வேளை பள்ளிக்கூடங்களுக்குரிய நிதியீட்டம் பாதிக்கப்படும். இந்தச் செயற்பாட்டின் வாயிலாக வேகமாக முன்னேறிச்செல்லும் சர்வ தேசக்கல்வித் தரங்களுக்கு ஏற்றவாறு நாட்டின் கல்வியை முன்னெடுக்க முடியுமா என்ற வினாவும் எழுப்பப்பட்டது.

உறங்கிய நிலையிலே கிடக்கும் இயற்கை வளங்களையும், மனித வளங்களையும் கல்வி வாயிலாக உயிர்த்தெளச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவரிடத்து மேலோங்கியிருந்தது. பெருமளவில் நகரங்களிலே குடிகொண்டிருந்த கல்வி நிறுவனங்களின் வலைப்பின்னல் அமைப்பானது நீண்ட தூரக் கிராமங்களுக்கும் விரிவடைந்து செல்லக்கூடிய விசைகளை இவரது முயற்சிகள் வழங்கின. ஆபிரிக்க மக்களின் பழுத்த அனுபவங்கள் நவீன கல்விச் செயல்முறைகளுக்கு உதவாதவை என்ற கண்மூடித்தனமான அணுகுமுறையினை இவர் அடியோடு மாற்றி அமைத்தார். ஆபிரிக்க நாடுகள் தமது கல்விக்கும், பொருள்களுக்கும், அபிவிருத்தி அடைந்த நாடுகளை எதிர் நோக்கியிருக்கும் அவலங்களுக்கு எதிரான நடவடிக்கையாக தற்சார்புக்கான கல்வி முன்வைக்கப்பட்டது. ஆபிரிக்காவின் எழுச்சிக்கு அது நம்பிக்கையான அரணாக அமைந்துள்ளது.

இவரது நடவடிக்கைகளைத் தொடர்ந்து தன்சானியாவில் எழுத்தறிவு வேகமாக வளர்ச்சி அடைந்ததுடன், மக்களிடையே வாசிப்புப் பழக்கமும் முன்னேற்றம் அடையத் தொடங்கியது. கல்விச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மக்கள் வாழ்க்கையுடன் கல்வியை ஒன்றிணைப்பதற்குமான ஆளணியினரின் உருவாக்கமும் ஏககாலத்திலே அங்கு நிகழ்ந்தது.

பொதுவுடைமைச் சிந்தனைகள், நவமக் காட்சிச் சிந்தனைகள் முதலியவற்றை ஆபிரிக்காவின் நடப்பியல்களோடு இணைத்து உருவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பாக இவரது கல்வியாக்கம் அமைந்தது.

# ஜெரோம் புறூனர் - எந்தப் பாடத்தையும் எந்தப் பிள்ளைக்கும் எந்த நிலையிலும் நேர்மை பெறக் கற்பித்தல்

புறூனரின் கல்விக் கருத்துக்கள் உயிரினங்களின் படிமுறை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டதாக அமையும் "படிமலர்ச்சிக் கருவிசார் வாதம்" (Evolutionary Instrumentalism) என்னும் அறிவுப் புலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மனிதரின் படிமுறை வளர்ச்சியில், கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து ஆற்றல் பெருக்கம் விரைந்து நிகழ்ந்து வந்துள்ளது. தமது உடல் வலு, உளவலு, புலன் வலு என்பவற்றைப் பெருக்கிக் கொள்வதற்கு வினைத்திறன் மிக்க கருவிகளை மனிதர் தொடர்ந்து வடிவமைத்து வருகின்றனர். "மனிதப் பண்பாடு" என்பது பெருக்கச் செயலமைப்பின் (Amplification System) களஞ்சியம் என்று கொள்ளப்படும். மனிதர் கண்டறிந்த கருவிகளுன் மொழியே அதிக பலம்மிக்க கருவியாகும். மொழியாலும் ஏனைய பண்பாட்டுக் கருவிகளாலும் ஒவ்வொருவருக்கும் தத்தமக்குரிய தனித்துவமான அறிவையும், திறன்களையும் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

அறிவு, சிந்தனை, மொழிப்பயன்பாடு, செயல் ஆகியவை ஒன்றிணைந்த இடைத் தொடர்புகளைக் கொண்டவை. அனைத்துத் தகவல்களையும் தரவுகளையும் ஏககாலத்திலே மனத்தில் பதித்து வைத்துச் செயற்படுத்துவதற்கு மனித உள ஆற்றல் போதாது உள்ளது. அந்நிலையில் செயற்பாடுகளை எளிதாக்குவதற்கு மனிதர் பல உபாயங்களைக் கண்டறிந்துள்ளனர். வகைப்படுத்தல், கோட்பாடுகளை உருவாக்குதல், காட்டுருக்களை வடிவமைத்தல் போன்றவை அவற்றுள் சில உபாயங்களாகும்.

(அ) அறிவு என்பது திட்டவட்டமான வடிவமைப்புக்குள் கொண்டுவரப்படத்தக்கது.

(ஆ) சிக்கலானவை. எளிய வடிவாக்கப்படத்தக்கவை. எமது அனுபவங்கள் மேற்கூறிய இரண்டு வழிகளினாலும் பிரதிநிதித்துவம் செய்யப்படக்கூடியவை. அவற்றின் உள்ளடக்கம் பற்றிய தொடர்சியான விசாரணைத் திறன்கள் கல்வியின் இலக்காக இருத்தல் வேண்டும்.

தொடர்ச்சியான இந்த விசாரணை மனிதர் தமது சூழலை மேலும் தமது கட்டுப்பாடுகளின் கீழ் கொண்டு வருவதற்குத் துணை நிற்கும்.

அறிவின் "அமைப்பு வடிவம்" அல்லது "அமைப்பு மானம்" (The Structure) பற்றி புறூனர் ஆழ்ந்து சிந்தித்தார். பொருத்தமான அமைப்பு வடிவங்களை ஆக்குவதன் வாயிலாக எந்த வயதினருக்கும் எந்த நிலையிலும் எப்பொருள் பற்றியும் கற்பிக்க முடியும் என்று அவர் கருதினார். எண்ணக்கரு அடிப்படையிலும் அவற்றின் தொடர்புகளின் அடிப்படையிலும் அமைப்பு வடிவங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. கற்பவர்களின் சார்புநிலைக்கேற்பவும் அவை அமைக்கப்படும்.

அமைப்பு வடிவாக்கத்தில் மூன்று பிரதான பண்புக் கூறுகள் சிறப்பிடம் பெற்றிருக்கும். அது

(அ) பிரதிநிதித்துவம் செய்யப்படும் இயல்பு

(ஆ) அதன் சிக்கனவியல்பு

(இ) அதன் வினைத்திறன் வலு

(அ) அனுபவங்கள் மூன்று வகையான பிரதிநிதித்துவம் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1. செயல் வழியாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படுதல் - இதனைச் "செயல்மானக் காட்டுரு" (The Enactive Model) என்று விளக்கினார்.

2. செயற்பாடுகளில் இருந்து புலன்கள் வழியாகக் காட்சியை ஒழுங்கமைத்தல். இது "உருவமானக் காட்டுரு" (The Iconic Model) எனப்படும்.

3. உருவ வழியாக ஆக்கியவற்றைக் குறியீட்டு வடிவில் ஆக்குதல். இது "குறியீட்டுமானக் காட்டுரு" (The Symbolic Model) எனப்படும்.

மேற்கூறியவற்றைப் பின்வருமாறு மேலும் விளக்கலாம்.

ஒரு குழந்தை பறவை போல் நடித்துக் காட்டுகின்றது. இந்நிகழ்ச்சி "செயல்மானக் காட்டுரு". பின்னர் அக்குழந்தை பறவையின் படத்தை வரைகின்றது. அல்லது களிமண்ணால் பறவையின் வடிவத்தைச் செய்கின்றது. இந்நிகழ்ச்சி "உருவமானக் காட்டுரு." அதன்பின்னர் குழந்தை "பறவை" என்று எழுகின்றது இது "குறியீட்டுமானக் காட்டுரு." இந்த மூன்று நிலைகளின் வழியாகக் கற்றல் தொடர்ந்து நிகழ்கின்றது.

கற்றல் என்பது அறிவுத் தகவல்களைத் திரட்டுதல் அன்று. நுண்மதித் திறன்களை விருத்தி செய்யும் ஆற்றல் பெறுதலே கற்றலாகும். செயல் முறையின் போது அடிப்படை உள்ளடக்கமாகிய அமைப்பு வடிவத்தைக் கற்றலே புறூனரால் வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

மாணவரை நடுநாயகமாகக் கொண்ட கண்டுபிடித்தல் வாயிலாகக் கற்றல், பிரச்சினை விடுவித்தல் வாயிலாகக் கற்றல் முதலி

யவற்றை இவர் வலியுறுத்தினார். உள்ளொளிரும் சிந்தனை (Intutive Thinking) பகுப்பாய்வுச் சிந்தனை முதலியவற்றின் வழியாகக் கற்றல் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

அமைப்பு வடிவத்தின் வழியாகக் கற்பிக்கும்பொழுது எந்த மாணவருக்கும் எந்தக் கல்விப்பொருளையும் இலகுவாகக் கற்பித்துவிட முடியும். அமைப்பு வடிவத்தை ஆக்கும்பொழுது பின்வரும் பண்புகள் மீது கவனம் செலுத்தல் வேண்டும்.

1. பாடப் பொருளில் அடங்கிய பிரதான உள்ளடக்கத்தை இலகுவிலே கிரகித்துக் கொள்ளக்கூடியவாறு அமைத்தல்.

2. நினைவிலே இலகுவில் பதித்துக் கொள்ளத்தக்க வகையில் அறிவைப் பொருத்தமான அடிப்படைகளாகவும், கருத்துருவங் களாகவும் ஒழுங்கமைத்தல்.

3. கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் பொது அடிப்படைகளை ஆழ்ந்து கற்றல்.

4. கல்விப் பொருள் அடிப்படைகளைப் பொறுத்தவரை ஆரம்ப நிலை அறிவுக்கும் முன்னேறிய அறிவுக்கும் இடையேயுள்ள இடைவெளியைச் சுருக்குதல்.

சுருக்கமாகக் கூறப்போனால் எவ்வாறு அடிப்படைகள் தம்முள் தொடர்புடையனவாக அமைந்துள்ளன என்பதைக் கற்றலே அமைப்பு வடிவத்தைக் கற்றல் எனப்படும். தாய் மொழியைக் கற்கும் பொழுது மாணவர்கள் நனவிலி பூர்வமாக மொழியின் அமைப்பு வடிவங்களை அறிந்து கொள்ளுகிறார்கள். ஒரு வசனத்தின் அமைப்பு வடிவத்தை அறிந்த ஒருவர் அதனை ஒத்த பல்வேறு வச்னங்களை இலகுவில் ஆக்கிக் கொள்ள முடிகின்றது. அமைப்பு வடிவத்தின் பழக்கத்தால் வசனங்களை ஆக்குகிறார்களேயன்றி அவற்றின் இலக்கண விதிகளை அவர்கள் அறிந்திருப்பதில்லை.

எந்த ஒரு பாடத்தின் உள்ளடக்கத்திலும் அவற்றின் அமைப்பு வடிவினை விளங்கிக் கொண்டால் இலகுவில் கற்றல்இடமாற்றம் செய்து கொள்ளப்படமுடியும்.

அடிப்படையான எண்ணக்கருக்களை நடுநாயகமாகக் கொண்டு கலைத் திட்டம் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். அத்தகைய கலைத்திட்ட வடிவமைப்புச் சுழல் ஏணிக் கலைத்திட்டம் (The Spiral Curriculum) என அழைக்கப்படும். மாணவர் தமது அறிகை விருத்திக்கு ஏற்றவாறு எண்ணக்கருக்களைப் படிப்படியாக விரிவாக அறிந்து கொள்வதற்குரிய வாய்ப்பு இந்தக் கலைத்திட்டத்திலே கிடைக்கின்றது.

எந்த வகுப்பு மட்டத்திலும் ஒரு பிள்ளை தனக்குரிய அறிவையும், நுண்மதித் திறன்களையும் தேடிக் கொள்ளும் செயற்பாடானது குறித்த

அறிவில் முன்னரங்க நிலையிலே தொழிற்பட்டுக் கொண்டிருப்போரின் செயற்பாடுகளுக்கு ஒப்பானதாக இருக்கும். "பள்ளிக்கூடத்திலே பௌதிகவியலைக் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர் ஒரு பௌதிகவியல் மேதாவி" (The School Boy Learning Physics is a Physicist) என்று புறூனர் குறிப்பிடுள்ளார். வடிவமைப்புககளைக் கற்றுக் கொண்டு உருவாக்கப் பட்ட அறிகை அமைப்புக்களைக் கொண்டு புதிய கற்றல் ஒருவரால் இணைத்துக் கொள்ளப்படும். கற்றல் என்பது படிப்படியாக செயல்மானக் காட்டுரு, உருவமானக் காட்டுரு என்பவற்றிலிருந்து குறியீட்டுமானக் கற்றலுக்கு முன்னேறிச் செல்லுதல் வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கு முரிய நுண்மதி ஆற்றலை முழுநிறைவாகப் பயன்படுத்துவதற்கு துணை செய்தல் வேண்டும். சிக்கல் அடைந்து வரும் தொழில்நுட்ப மாற்றங்களின் இந்த நடவடிக்கையே மக்களாட்சியை நிலைபேறு கொள்ளச் செய்யவல்லது.

கல்வி என்பது "மானுடப்படுத்தும்" வலுவைத் தரவல்லது. மனிதரை உயர் மானுடராக்கும் ஐந்து வலுக்கள் பற்றி புறூனர் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். அவை -

1. கருவி செய்தல்.

2. மொழி யாக்கல்.

3. சமூக ஒழுங்கமைப்புக்கள்.

4. குழந்தை வளர்ப்பு மேம்பாடு.

5. உலகை விளக்கவும் பிரதிநிதித்துவப்படுத்தவும் மேற் கொள்ளப்படும் உந்தல்கள்.

நுண்மதிசார்ந்த நேர்மையுடன் அறிவை அறிமுகம் செய்து ஆரம்பித்தல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. "எவ்வாறு கற்றல் என்பதைக் கற்றல்" என்னும் செயல் முறைக்கு இவரது கருத்துக்கள் முன்னுரிமை தருகின்றன.

ஆழ்ந்து பார்க்கும் பொழுது சார்லஸ் டார்வின், சிக்மன் புறொய்ட், ஜீன் பியாசே போன்றோரின் கருத்துக்களின் செல்வாக்கு இவர் மீது ஊடுருவி இருத்தலைக் காணமுடிகின்றது. ஸ்கின்னரது நடத்தைக் கோட்பாட்டினை இவர் தள்ளுபடி செய்து விடுகின்றார். ஸ்கின்னர் சிக்கலான மனித நடத்தைகளைப் "பொறி முறையான காட்டுரு" வாயிலாகக் காட்ட முயன்றுள்ளார் என்று புறூனர் குறிப்பிட்டுள்ளார்.

# மாஓ சேதுங் - சமூகத்தையும் இயற்கையையும் மாற்றியமைப்பதற்கான கல்வி

மனிதர் சமூகவர்க்கத்தின் "விளை பொருள்" ஆக இருப்பதனால் அவர்களது கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் வர்க்க அடிப்படையில் இருந்து கிளர்ந்தெழுவனவாக இருக்கும். பாட்டாளிகளிடமிருந்து கற்றுக் கொள்ளுவதும் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும் முக்கியமானவை. ஏனெனில் எப்பொழுதும் அவர்கள் சரியான கருத்தியலைக் (Ideology) கொண்டிருப்பார்கள்.

சமூகம் என்பது முரண்பாடு கொண்ட இரு வர்க்கங்களினால் ஆக்கப்பட்டுள்ளது என்றும் அவற்றுக்கிடையே போராட்டம் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டு அவற்றின் பின்புலத்திலே தமது கல்விக் கருத்துக்களை முன்வைத்தார். முரணியற் சடவாதம் அவரது அறிவுக் கோட்பாடாக அமைந்தது. உற்பத்திக்கான போராட்டம், வர்க்கப் போராட்டம், விஞ்ஞான பூர்வமான பரிசோதனை என்பவற்றிலிருந்து சரியான கருத்துவம் (Idea) பெறப்படும். சிந்தனை அளவீடுகள் எண்ணளவில் மாத்திரம் அன்றி பண்பளவிலான வேறுபாடுகளையும் கொண்டிருக்கும். அறிவு என்பது புலன் அறிநிலையிலிருந்து பகுத்தறிவு நிலைக்கு மாறுதல் செய்யப்படல் வேண்டும். எத்தகைய ஒரு கருத்துவமும் அதன் நடைமுறையைக் கொண்டே மதிப்பீடு செய்யப்படுதலே உகந்த வழி.

அறிவு என்பது எப்பொழுதும் நிறைவு அடையாதது. நடைமுறையிலே தொடங்கி மனிதர் அறிவைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். மீண்டும் நடைமுறைக்குச் சென்று அறிவைத் திருத்தி அமைத்துக் கொள்ளுகின்றனர். இது முடிவில்லாத தொடர்கதையாகச் சென்று கொண்டிருக்கும். எந்த ஒரு கட்டத்திலும் மனிதருக்குரிய அறிவு முழுமை அடையாததாக, அதாவது சார்பு நிலைப்பட்டதாக இருக்கும். புற உலகம் தொடர்ச்சியாக மாறிக்கொண்டு இருப்பதனால் இன்று மனிதர் சரியென்று கொள்ளும் கருத்துக்கள் நாளை தவறாகவும் மாறலாம்.

இயற்கையை விளங்கிக் கொள்ளவும் சமூகத்தை விளங்கிக் கொள்ளவும் முரணியலே அடிப்படையாக அமைந்ததால், அதுவே

சிந்தனைக்கும் அடிப்படை விதியாக அமைகின்றது. எத்தகைய ஒரு செயல் முறையிலும் முரணியலே வியாபித்துள்ளது. சீன மக்களிடத்து இக்கருத்து “ஒன்று இரண்டாகப் பிளக்கும்” என்ற விடுப்பால் எடுத்துக் கூறப்பட்டது. முரண்பாடுகள் செயற்படும் வேளை ஒரு கட்டத்தில் அளவு மாற்றம் பண்பு மாற்றத்தை ஏற்படுத்தும். முரண்பாடுகளின் எதிர்த் துருவங்கள் மாற்றமடைந்த வண்ணம் இருக்கும் என்ற கருத்தை அவர் வலியுறுத்தினார். முரண்பாடுகளின் எதிர்த் துருவங்கள் மாற்றமடையும் செயல் முறையினூடாக மீண்டும் எதிர்ப் பொருளாகவே உருவெடுக்கும்.

அடிப்படையான பெரும் முரண்பாட்டினோடு இணைந்த தாகவே சிறு சிறு முரண்பாடுகள் வளர்ச்சியுறும் என்ற கருத்தை அவர் மீள வலியுறுத்தினார். இவரது கருத்துக்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் முதலியோரது சிந்தனைகளின்படிமலர்ச்சியாக முனைப்பு அடைந்தன. மேலும், சீனமரபுகளின் மூன்று பெரும்விசைகள் மாஓ மீது செல்வாக்குச் செலுத்தின என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவர். அவை -

*1. மனிதச் சூழலையும், அல் மனித சூழலையும் மாற்றியமைத் தலில் மனிதரை நடுநாயகப்படுத்தும் மரபு.*

*2. கல்வி என்ற எண்ணக்கரு அடிப்படையில் அற நெறிசார்ந்த அரசியல் பண்புடையதுடன் அது வாழ்க்கை முழுவதும் இணைந்து செல்லும்.*

*3. நல்ல அரசாங்கம் என்பது ஆள்வோரின் அறவொழுக்கங் களில் தங்கியுள்ளது.*

கல்வி என்பது வகுப்பறையினுள்ளே அடங்கியது அல்ல. ஒருவரது வாழ்க்கையில் வரையறுக்கப்பட்ட காலப்பகுதியை உள்ளடக்கியதும் அல்ல. அது மக்களின் அறவொழுக்கத்தை, நுண்மதியாற்றல்களை, உடலியக்கத் திறன்களைத் தொடர்ந்து வளர்ப்பதாக இருத்தல் வேண்டும். அது தொழிலாளர்களை சோசலிச உள்ளுணர்வு மிக்கவர்களாக உருவாக்கும் செயல் முறையினை உள்ளடக்கியது.

கல்வி நடைமுறைப்பாங்கானதாக இருத்தல் வேண்டும். போராட்ட நடைமுறைகளில் இருந்து மனிதர் அறிவைத்திரட்டிக் கொள்ளுகின்றனர். அறிவின் முடிவுகள் நடை முறைகளில் பயன்படுத்துதலோடு இணைந்தது. நடைமுறையில் பயன்படுத்தப்படும் ஒரே ஒரு நோக்குடன் மட்டுமே மார்க்சியக் கோட்பாடுகளை ஆழ்ந்து கற்றல் வேண்டும். வாசித்தல் கற்றலாகும் - அவ்வாறே பிரயோகித்தலும் கற்றலாகும். ஒவ்வொருவரும் ஏக காலத்தில் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும் மாணவராகவும் இருத்தல் வேண்டும்.

கற்றல் என்பது புறநிலை நடப்பியல் வழியில் செல்ல வேண்டுமேயன்றி, அகநிலை விருப்பங்களை நோக்கிச் செல்லலாகாது.

விரிவு பெற ஆராய்தலும், பகுத்தறிதலும், தொகுத்தலும், பொருத்தமான செயற்பாடுகளாகும். கற்றல் வாயிலாகச் செய்தல் என்பது பொருத்தமற்றது - செய்தல் வாயிலாகக் கற்றலே பொருத்தமானது. கற்றல் என்பது முன்னோக்கிய நேர் அசைவாக இருத்தல் வேண்டும். பின்னோக்கிய எதிர் அசைவாக இருத்தலாகாது.

எல்லா நாடுகளிலும் உருவான நல்ல அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்ளல் வேண்டும். நாட்டுக்குப் பொருத்தமற்றவற்றைப் பிற நாடுகளில் இருந்து பெயர்த்து எடுத்துப் பொருத்தக்கூடாது. தனித்துப் புத்தக அறிவுடன் கட்டுப்படும் கற்றல் அவரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சமூகத்தில் மிகவும் வலிமை கொண்ட விசைகளை இளைஞர்களே தம்மிடத்தில் கொண்டுள்ளனர். கற்பதற்குக் கூடிய விருப்பமுள்ளவர்களாக அவர்கள் விளங்குவதுடன் குறைந்த பழைமை ஊறல்கள் (Conservative) கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் முதியோர்களிடமிருந்து அனுபவங்களை உள்வாங்கி அவர்களது கூட்டுறவோடு பயனுள்ள பணிகளில் ஈடுபடுதலே விரும்பத்தக்கது.

போதனை என்பது விளைவு தரக்கூடிய உழைப்போடும், தசை நார்ப் பயிற்சிகளுடன் இணைந்து இருத்தல் வேண்டும். முழுமை பொருந்திய மனித விருத்திக்கு இவ்வகை ஒன்றிணைப்பு தவிர்க்க முடியாததாகும். கல்வி வாயிலாகத் தாழ்வுணர்ச்சி நீக்கப்படுதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் கண்மூடித்தனமாக ஆதரிக்கும் உளப்பாங்கினை ஒழித்து, சுயநம்பிக்கையையும், சுய அங்கீகாரத்தையும் கட்டியெழுப்புதல் வேண்டும். கற்றவர்கள் உள உழைப்பையும், உடல் உழைப்பையும் பொறுப்பேற்கத் தயார் நிலையில் இருத்தலே மேம்பாடானது.

கல்வியிலே உழைக்கும் வர்க்கத்தின் தலைமைத்துவம் ஏற்படுதல் வேண்டும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமாயின் இயற்கையையும் சமூகத்தையும் நிலைமாற்றம் செய்தல் (Transforming Society and Nature) அடிப்படையானது. பல்வேறு பண்புகளின் அடிப்படையிலே சின்னாபின்னப்பட்டிருந்த சீனாவை ஒன்றிணைப்பதற் குரிய விசைகளை மாஓவின் சிந்தனைகள் கொண்டிருந்தன. மக்கள் தொழில்களின் அடிப்படையிலே பிரிந்திருந்ததுடன் தொழில்களுக்குரிய வேறுபட்ட உளப்பாங்குகளும் இறுகியிருந்தன. "நல்ல இரும்பை ஆணியாக்கி விடக்கூடாது. நல்ல மனிதரை யுத்தம் புரிவோராக்கி வீணாக்கி விடக்கூடாது" என்பது சீன மக்கள் மனத்திலே இறுகி வேரூன்றிய கருத்தாக இருந்தது. இவற்றை மாற்றியமைக்கும் விதத்திலே மாஓவின் சிந்தனைகள் அமைந்தன.

பயிர்ச் செய்கை நிலங்கள் உரிமை வழியாகத் தூண்டப் பட்டமையும், காலநிலைத் தளும்பல்களால் பயிர்ச் செய்கை பாதிப்படைந்து காலத்துக்காலம் பஞ்சம் ஏற்பட்டமையும் சீனாவின்

அனுபவங்களாக இருந்த வேளையில் “சமூகத்தையும் இயற்கையையும் நிலைமாற்றம் செய்தல் என்ற கருத்து ஆழ்ந்து பரவி மக்கள் மனங்களிலே ஊடுருவத் தொடங்கியது. பயிர்ச் செய்கையிலும், ஆக்கத் தொழில்களிலும் நிகழ்ந்த அறிவுப் பிரயோகம் கூடிய விளைவுகளை வழங்கத் தொடங்கியது. சீன மக்களுக்குக் கிடைத்த இந்தப் புதிய அனுபவங்கள் மாஓவின் சிந்தனைகள் மீதுள்ள நம்பிக்கையை வலுவடையச் செய்தன.

“அறநெறி அரசியற் கல்வி” என்பது இவரது சிந்தனைகளை உள்ளடக்கியதாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. பரந்த செயல் அனுபவங்கள் வழியாகக் கல்வி முன்னெடுக்கப்பட்டது. மாணவர்கள் பண்ணைச் செயல்களிலே பங்கு பற்றுதல், நிர்மாணப் பணிகளுக்கு உதவுதல், தொழிற்சாலை அனுபுவங்களை பெறுதல் என்பவற்றின் வழியாக வாழ்க்கை மெய்யியல் பற்றியும் தெரிந்து கொள்ள முடிந்தது. பொருள் முதல் வாதம், கருத்து முதல் வாதம் முதலியவற்றின் வேறுபாடுகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளல் தொடர்பான கற்பித்தல் முன்னெடுக்கப் பட்டது. தருக்கவியல் பொருள் முதல் வாதத்தினை இயற்கை விஞ்ஞானப் பாடம்புலத்திலே பிரயோகிக்கும் திறன்களும் வளர்த்தெடுக்கப்பட்டன.

புரட்சியை முன்னெடுப்பதிலும் சமதர்ம நிர்மாணத்திலும் ஆசிரியர்கள் தளராது உழைத்தல் வேண்டும். தமது ஆற்றல்களை இத்துறைகளில் அவர்கள் முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். “வர்க்கப் போராட்டம் மறக்கப்படக் கூடியது அன்று” என்பது தொடர்ச்சியாக நினைவில் நிறுத்தப்பட வேண்டியது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். “கல்வி மாற்றத்தின் பொழுது தீர்மானிப்பு வினாக்களாக ஆசிரியர்களே இருக்கிறார்கள்.

மாஓவின் கல்விச்சிந்தனைகளை சீனாவில் பல்வேறு நிலைகளிலே செல்வாக்குச் செலுத்தினாலும் இன்றைய சீனாவின் கல்வியிலே இருமைத்தன்மைகளே இழையோடிச் செல்கின்றன. அவை மாஓவின் சிந்தனைகளுக்கு முரணாகி விட்ட இருமைத் தன்மைகளாகும்.

1. மேதாவிகளை உருவாக்குவதற்காக நன்கு ஒழுங்கமைக்கப் பட்ட, நீண்ட காலம் பள்ளிக்கூட முறைமையை உள்ளடக்கிய செயற்பாடு.

2. கல்வியை வாழ்க்கை நடப்பியலுடன் ஒன்றிணைக்கும், திறந்ததாயும் பரிசோதனைகளை உள்ளடக்கியதாயும் உருவாக்கப்பட்ட கல்விச் செயற்பாடு.

மாஓவின் சிந்தனைகளை கல்வியின் முடிவுகள் பற்றிய கவனத்தைச் செலுத்திய அளவுக்குக் கல்வி நுட்பவியல்கள் மீது கவனம் செலுத்த வில்லை என்ற திறனாய்வும் முன் வைக்கப்படுகின்றது.

## கார்ல் ரொஜர்ஸ் - கல்வியியலில் மானுடக் கோட்பாடு

"கற்பதற்குரிய விருப்பம், வளர்வதற்குரிய தேவை, கண்டு பிடிப்புக்குரிய தேடல், பாண்டித்தியம் பெறுவதற்கான நம்பிக்கை, புத்தாக்கம் செய்வதற்கான உறுதி" என்றவாறு மாணவர்கள் நோக்கில் மானுடக் கோட்பாட்டினை கார்ல் ரொஜர்ஸ் முன்வைத்தார். எதைக் கற்கவேண்டும் என்பதைப் பொறுத்தவரை மாணவரின் ஆற்றல்களைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். கற்றல் என்பது தன் நெறிப்பாடு கொண்டதாயும், விடுதலை கொண்டதாயும் (Self Directing and Independent) இருத்தல் வேண்டும். கார்ல் ரொஜர்ஸ், குட்மன், நியில் முதலியோர் கல்வியியலில் மானுடக் கோட்பாட்டு அணுகுமுறையினைப் பல்வேறு தளங்களிலே வலியுறுத்தினர். மாஸ்லோ தன்னியல் நிறைவு எய்துதலைக் குறிப்பிட்டமையும், ரொஜர்ஸ் "தன்னெறிப்பாடு", "தன்முனைப்புக் கற்றல்" (Self Initiated Learning) முதலியவற்றைக் குறிப்பிட்டமையும் கல்வியியலில் மானுடக் கோட்பாட்டுக்கு வலுவூட்டின.

எவை எமக்குத் தேவையோ அவற்றை மாணவர்கள் கற்றல் வேண்டும். எப்படிக் கற்றல் என்பதைக் கற்றல் (Learning How to Learn) அறிவைத் திரட்டிக் கொள்வதிலும் அதிக முக்கியமானது. மாணவர்கள் தம்மைத் தாமே மதிப்பீடு செய்தலும் இந்த அணுகு முறையிலே ஆழ்ந்து வற்புறுத்தப்படுகிறது.

நவீன கைத்தொழிற் சமூகக் கோலங்களுக்கு ஏற்றவாறு பள்ளிக்கூடங்கள் துலங்கத் தவறியுள்ளமையும், நவீன கல்வி உளவியற் கருத்துக்கள் நடைமுறையிலே புறக்கணிக்கப்பட்டு வருதலும், மாணவர் களைத் தொடர்ந்து துளையிட்டுப் போனதைச் செய்தல் மேலோங்கி நிற்றலும் எதிர்மறைப் பின்புலங்களாயின.

தன்னெறிப்பாட்டுக் கற்றலில் மாணவரின் தேவைகளை நிறை வேற்றுதல் உசாவல் விருப்பினை ஊக்குவித்தல், வினோத விருப்புகளை ஊக்குவித்தல் முதலியவை இடம் பெறும். எப்படிக் கற்றல் என்பதைக் கற்றல் ஒருவித தற்புது மலர்ச்சியைக் (Self Renewal) கொடுக்கவல்லது என்றும் மாற்றமுறும் சந்தர்ப்பங்களின் மத்தியில் புதிய சவால்களுக்குத் தாமாகவே முகம் கொடுக்கும் ஆற்றலை ஏற்படுத்தும். தன்னெறிப் பாட்டுக் கற்றலை அடிப்படையாகக் கொண்டு நவீன கற்பித்தலியலில்

கணிதம், விஞ்ஞானம் முதலிய துறைகளிலே பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அணுகு முறையானது பாரம்பரியமான கற்பித்தலிலும் கூடுதலான விளைவுகளைத் தந்துள்ளது. தன் மதிப்பீடுகள் மாணவரின் சுய ஆட்சி ஆளுமை வளர்ச்சிக்கு அடித்தளமிடுகிறது. கிளாஸர் இந்த அணுகுமுறைமை தொடர்பான விரிவான ஆய்வுகளைச் செய்துள்ளார்.

ஏனைய மாணவருடன் தம்மை ஒப்பிட்டுப் பார்த்துப் பதகளிக்கும் எதிர் மானுடநிலைகளை தன்மதிப்பீட்டு முறைமை ஒழித்து விடுகின்றனர். ஒரு மாணவர் தம்மைப்பற்றிய பொறுப்புணர்ச்சியை வளர்த்துக் கொள்ளத் தனது நெறிப்பாட்டினைப் பற்றிய தற் பொறுப்பினை மேம்படுத்துவதற்கும் துணை செய்கின்றது என்கிறார் ரொஜர்ஸ்.

கல்வியியல் ஆய்வாளர்கள் அறிகை ஆட்சி, எழுச்சி ஆட்சி ஆகிய இரண்டு பண்புகளையும் கற்பித்தலிலே வற்புறுத்திய பொழுதும், நடைமுறையில் அறிகை ஆட்சிக்கே முக்கியத்துவம் தரப்படுகின்றது. ஆசிரியர்கள் எழுச்சி ஆட்சியினைக் கற்பித்தலிலே புறக்கணித்து விடுகின்றனர். அதனால் எதிர் மானுடப்படுத்தலே மேலோங்கிச் செல்கின்றது. இதனைப் பாடசாலைகளிலே நிகழும் ஒருவித உளவியல் வன்செயல் (Psychological Violence) என மானுடக் கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். எழுச்சிகளை உணர்ந்து கற்பிக்கும் பொழுது, மனவெழுச்சிகளை ஆசிரியரும் மாணவரும் பரஸ்பரம் வெளியிடும் பொழுது மாணவர் தம்மைப் பற்றிய கருத்து ஆழத்தை (Personal Meaning) வளம்படுத்திக் கொள்ள முடியும்.

நடைமுறையில் இன்றைய பள்ளிக்கூடங்கள் மாணவர்களுக்கு பல்வேறு நெருக்குவாரங்களை உள்ளடக்கிய பயமுறுத்தல்களை விடுக்கின்றன. அவை மாணவரின் சுயபுலக் காட்சிக்கும் பயமுறுத்தலாக அமைந்து கற்றலில் அதிக பலத்துடன் தலையிடுகின்றன என்பது ரொஜர்ஸ் தரும் ஆழ்ந்த வியாக்கியானம். மாணவரால் செய்ய முடியாத உளப்பணிகளையும், உடற் பணிகளையும் செய்யுமாறு ஆசிரியர்கள் மேதாவித்தனத்துடன் வற்புறுத்தும்பொழுது அது மாணவர்க்கு விடுவிக்கப்படும் பயமுறுத்தலாக மாறுகின்றது.

மானுடக் கோட்பாட்டு அணுகு முறையில் (Humanistic Approach) ஆசிரியர் கற்பிப்பதற்குப் பொறுப்பாளராக நடந்து கொள்ளாது, கற்பதற்கு வழிகாட்டுபவராக, கற்கும் செயல் முறையில் உதவி செய்பவராக, பிரச்சினை விடுவித்தலில் துணை நிற்பவராக, கற்றலுக்கு வசதி செய்து கொடுப்பவராக (Facilitator of Learning) இருத்தல் வேண்டும். கற்றலுக்குரிய பொறுப்பும், பொருத்தமான கற்றலைத் தெரிவு செய்யும் மாணவர்களிடத்து முழுமையாக விடப்படும். மாணவர் தாம் விரும்பியவாறு பள்ளிக்கூடத்துக்கு வெளியேயுள்ள ஓர் அறிஞரை

அல்லது ஒரு கலைஞரைச் சந்தக்க விரும்பின் அதற்கான வசதிகளையும் ஆசிரியர் செய்து கொடுத்தல் வேண்டும். மானுடக் கோட்பாடு வகுப்பறையில் ஆசிரியர் "நலங்காப்பு உளவியலாளர்" (Clinical Psychologist) என்ற பாத்திரத்தையும் ஏற்றுச் செயற்படல் வேண்டும்.

இக் கோட்பாட்டின் இலக்குகளுக்கு ஏற்றவகையில் சிறப்பார்ந்த கற்பித்தல் முறையில் "திறந்த கல்வி" (Open Education) எனப்படும். மாணவர்கள் நிலையாக ஓரிடத்தில் அமராது சிறு சிறு குழுவினராக விரும்பிய செயல்முறைக் கற்றலில் ஈடுபடுவார்கள். இசை, ஓவியம், எண் விளையாட்டு, மண் விளையாட்டு, மலர் விளையாட்டு என்றவாறு விரும்பிய செயற்பாடுகளில் ஈடுபடுவர். பள்ளிக்கூடத்தின் எந்த வகுப்பறைக்குச் செல்வதற்கும் சுதந்திரம் வழங்கப்படும். மாணவர்கள் தமக்குள் நீண்ட நேரம் பேசிக் கொள்வார்கள். மாணவர் கேட்கும் வினாக்களுக்கு ஆசிரியர் விடை சொல்வதுடன் தேவையான சொற்களஞ்சியத்தையும் வழங்குவார்.

திட்ட வட்டமான, கறாரான நேரசூசிகை என்பது வகுப்பறையிலே பின்பற்றப்பட மாட்டாது. விருப்பமான செயல்களில் மாணவர் தொடர்ந்து ஈடுபடுவார்கள். அதிற் சலிப்பு ஏற்பட்டதும் விருப்பமான வேறொரு செயல் முறையினைத் தெரிவு செய்வார்கள். குறிப்பிட்டளவு நேரம் மாணவர்கள் வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பவற்றில் விருப்புடன் ஈடுபடுவதற்கும் பொறுப்பளிக்கப்படுவார்கள். ஆசிரியர்கள் வழி காட்டியாகவும், பங்காளராகவும் நின்று மாணவர் தாமாகவே கற்றுக் கொள்வதற்குத் துணை செய்வார்கள். அவ்வாறே குழுச் செயற்பாடுகள் வழியாக மனவெழுச்சிகளை வளர்ப்பதற்கும், நெறிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திறந்த கல்வியின் செயற் பண்புகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. தாம் பங்குபற்றும் கற்றல் செயல்முறையினைத் தெரிவு செய்யும் சுதந்திரம் மாணவர்க்கு வழங்கப்படுகின்றது.

2. இடநிலைய நெகிழ்ச்சிப்பாடு உண்டு.

3. மிகவுயர்ந்ததும் பல் வகைப்பட்டதுமான கற்றல் சாதனங்கள் பயன்படுத்தப்படும்.

4. பல்வேறு பாடங்கள் கலைத்திட்டத்தில் ஒன்றிணைக்கப்படுகின்றன.

5. பெருங் குழுமுறைக் கற்பித்தல் கைவிடப்பட்டு தனிநபர் கற்பித்தலுக்கும் சிறு குழுக் கற்பித்தலுக்கும் இடமளிக்கப்படும்.

6. ஆசிரியர் வசதி செய்பவராக இயங்குவார்.

7. தமது கற்றலுக்கு மாணவர்கள் தாமே பொறுப்புடையவராவர்.

8. ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே மனந்திறந்த ஒத்துழைப்பு இடம்பெறும்.

9. மாணவரது கற்றலை முன்னேற்றம் பெறச் செய்யும் வகையில் இடர் கண்டறியும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

10. பல்வேறு வயதுடையோரைக் கொண்ட குழுக்கள் இடம் பெறும்.

11. குழுக் கற்பித்தல் நிகழ்த்தப்படும்.

கற்பித்தலியலில் மானுடக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் நல்லியல்புகளும் மானுட நேயமும் கொண்ட ஆசிரிய ஆளணியினர் வேண்டப்படுகின்றனர். மாணவரது உணர்ச்சிக் கோலங்களை விளங்கிக் கொள்பவராகவும், தேவைகளைப் புரிந்து கொள்பவராகவும், ஆசிரியர் செயற்படுதல் வேண்டும். மாணவரோடு இணைந்து செயற்படும் கற்பவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டுமேயன்றி மாணவர்கள் மீது அதிகாரம் செலுத்துவோராகச் செயற்படக்கூடாது.

வகுப்பறையிலே திறந்த கல்வியின் செயற்பாடுகள் எவ்வாறு நிகழ்ந்து வருகின்றன என்பது பற்றியும், அவற்றின் கல்வியியல் செல்வாக்குகள் பற்றியும் விரிவான ஆய்வுகள் ஐக்கிய அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பல முன்னேற்றங்களை நடைமுறைக்கு உட்புகுத்த வேண்டும் என்பதை ஆய்வுகள் தெளிவு படுத்துகின்றன. மானுடக் கோட்பாட்டினை உணர்ச்சி பூர்வமாக அணுகாது பகுத்தறிவு பூர்வமாகவும், நடப்பியல் நிலவரங்களின் அடிப்படையிலும் நோக்கும் பொழுதுதான் மேலும் தெளிவுகளை எட்ட முடியும்.

# ஜீன் பியாசே - பிறப்புநிலை சார்ந்த அறிவாய்வியல்

மூன்று பெரும் விசைகளை உள்ளடக்கியதாக ஜீன் பியாசே (jean piaget) வகுத்த கலவிக் கோட்பாடுகள் அமைந்தன. அவையாவன -

*1. இடைவினை இயல்.*

*2. அமைப்பியல்.*

*3. பிறப்புநிலை அறிவாய்வியல்.*

மனிதருக்கும் சூழலுக்கும் இடையே நிகழும் இடைவினைகள் நடத்தைகளின் ஊற்றுக்கண்களாக இருத்தலை இவர் வற்புறுத்தும் பொழுது இடைவினை இயலைப் (Interactionism) பற்றுக் கோடாகக் கொள்ளுகின்றார். மனித அறிகைக் கோலங்களை அடுக்கமைப்புக்களாக வகுத்துக் கூறும் வேளை இவர் அமைப்பியலை (Structuralism) வற்புறுத்துகின்றார். உயிர்ப் பாரம்பரியக் கண்ணோட்டத்தில் மனிதரிடையே நிகழும் காரணங்காணல், சிந்தனை விருத்தி முதலி யவற்றை வகுத்துக் கூறும் வேளை பிறப்பு நிலைசார் அறிவாய்வியல் (Genetic Epitemology) கோட்பாட்டைப் பின்பற்றுகின்றார்கள்.

இவர் சிறப்பாகப் பயன்படுத்திய ஆய்வு உபாயம் மருத்துவநல ஆய்வு முறை (Clinical Method) யாகும். பிரச்சினை ஒன்றிலே குழந்தையை ஈடுபடச் செய்து, குழந்தையின் செயல் விளைவுகளுக்குப் பின்னனியாக அமையும் சிந்தனை முறைமையையும் உள அமைப்பையும் ஊகித்து அறிவதே இவரால் கொள்ளப்பட்டது. இந்த முறையியலோடு இயற்கையாக உற்று நோக்கும் முறையியலையும் இவர் பயன்படுத்தினார். பௌதிக நடப்பு நிலைகள், கணிதம், எண், இடைவெளி முதலிய புலங்களில் குழந்தைகள் எவ்வாறு உளக்காட்சிகளை உருவாக்கிக் கொள்ளுகின்றார்கள் என்பதை யியாசேயும் அவரின் அணை ஆய்வாளராகிய பார் பென் இன்கெல்டரும் (Barbel Inhelder) ஆய்வு செய்தார்கள்.

பியாசேயின் கோட்பாட்டில் பின்வரும் உயிரியல் ஆக்கக் கூறுகள் உட்பொதிந்து காணப்படுகின்றன.

1. உயிர்ப் பாரம்பரிய நிலையில் மனிதர்களும் ஏனைய உயிரினங்களைப் போன்று சூழலுக்குரிய தழுவல்களை மேற்கொள்ள வல்லவர்கள்.

2. சூழலுக்குரிய தழுவலை மேற்கொள்ளும் உந்தலானது உயிர்ப் பாரம்பரியத்தின் வழியாகக் கிடைக்கப் பெற்ற ஆற்றலாகும்.

3. உந்தலுக்கு ஏற்றவாறு மனிதர் தழுவலில் ஈடுபடும் பொழுது செயலூக்கம் மிக்கவர்களாவும், இயக்கவிசை கொள்வோராயும் தொழிற்படுவர்.

4. தழுவலின் சிறப்பார்ந்த வடிவமாக நுண் மதிசார்ந்த செயல் இடம் பெறும்.

5. முன்னைய அனுபவங்களினால் உருவாக்கப்பட்ட நுண்மதி அமைப்பானது பின்னைய தழுவல் வெளிப்பாட்டுக்கு அடிப்படையாக அமையும்.

தழுவல் இரண்டு வழிகளில் இடம் பெறுவதாக பியோசே சுட்டிக் காட்டுகின்றார் அவை-

1. தன் அமைவாக்கல் (Accomodation)

2. மன் மயமாக்கல். (Assimilation)

முன்னர் கிடைக்கப் பெறாத ஒரு புதிய எதிர்க் கூவல் சிறுவர் களுக்கு விடப்படும் பொழுது, அவர்கள் ஏற்கனவே கொண்டுள்ள அறிகை அமைப்பினை மாற்றிப் புதிய பட்டறிவினை உள்வாங்கும் செயற்பாடு "தன் அமைவாக்கல்" என்று குறிப்பிடப்படும். உள அமைப்பில் நிகழும் "புதியன பொருந்தும்" நடவடிக்கையாக இது அமையும்.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள அறிகை அமைப்பிலே மாற்றங்களைச் செய்யாது அனுபவங்களை உள்வாங்கும் உளச் செயல்முறை "தன் மயமாக்கல்" எனப்படும்.

தழுவல் தொடர்பாக பியாசே வடிவமைத்த இன்னோர் எண்ணக்கரு "திரளமைப்பு" அல்லது திரள்மானம் (Sehema) எனப்படும். இது பட்டறிவின் திரண்டெழுந்த வடிவம். இதற்கு அவர் சிறப்பான ஒரு கருத்தை முன்வைத்தார். உலகு பற்றிய தனிநபருக்குரிய அறிவின் அமைப்பாக விளங்கும் திரளமைப்பு உடல் உள நடத்தைகளைத் தீர்மானிக்கும் மனக்களஞ்சியமாகவும், செயற்படுவதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்புத் திட்டமாகவும் விளக்கப்படுகின்றது. திரளமைப்புக்கு அமையவே அறிவு உள் வடிவமைக்கப்படவும் மீள் எடுக்கப்படவும் கூடியதாக இருக்கின்றது. தழுவல் (Adaptation) ஒழுங்கமைத்தல் (Organization) என்ற இரண்டு செயல் முறைகளின் வழியாக சிறுவர்கள் சூழலுடன் இடைவினை கொண்டு விருத்திப் படிநிலைகளை அல்லது வளர்ச்சி மேம்பாட்டுப்படி நிலைகளை அமைத்துக் கொள்ளுகின்றார்கள்.

வளர்ச்சி மேம்பாட்டுத் தொடர்ச்சியினை நான்கு சிறப்பார்ந்த படிநிலைப் பருவங்களாக அமைத்து பியாசே விளக்கினார். ஒவ்வொரு

படிநிலைப் பருவத்துக்கும் உரிய தனித்துவமான சிந்தனைகள், அறிவு, தொழிற்பாடு என்பவை காணப்படும் என்பது அவரது கருத்து. நான்கு பருவங்களும் அவற்றுக்குரிய பருமட்டான வயது வீச்சும் வருமாறு -

1. புலன் இயக்கப் பருவம்! 0 - 2 வயது.
2. முன் இயக்கப் பருவம்: 0 2 - 6 வயது.
3. திட நிலை இயக்கப் பருவம்: 6 - 12 வயது.
4. முறை சார் இயக்கப் பருவம்: 12 வயதுக்கு மேல்.

வளர்ச்சி மேம்பாட்டுத் தொடர்ச்சியில் சம நிலை, சம நிலைக்குலைவு மீண்டும் சமநிலையாக்கம் என்ற செயற்பாடுகள் வழியாகச் சிறுவர்கள் தம்மைத் தாமே ஒழுங்கு நெறிப்படுத்தலையும் அவர் குறிப்பிடுகின்றார். சூழலுடன் இடை வினைகளை மேற்கொள்ளும் பொழுது தம்மிட முள்ள அமைப்புக்கள் போதாத நிலையில் உள்ளன என்பதை உணரும்பொழுது சமநிலைக் குலைவு தோன்றுகின்றது. அந்நிலையில் சிறுவர்கள் தமக்குரிய கருவிகளையும் அமைப்புக்களையும் மீள் ஒழுங்குபடுத்தி மீண்டும் புதிய சமநிலையை ஏற்படுத்துகின்றனர்.

பிறப்பு முதல் இரண்டு வயதுவரையான காலப்பகுதி புலன் இயக்கப் பருவம் (The Sensorimotor Period) எனப்படும். சூழலைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வதற்குக் குழந்தைகள் இப்பருவத்தில் முயற்சிக்கின்றனர். தமது முயற்சிக்குத் துணையாக குழந்தைகள் நன்கு சீர் பெறாத உடலியக்க அசைவுகளையும், தெறிவினைகளையும், புலன் இயக்கத் தொகுதியையும் பயன்படுத்தி தமது சூழலில் உள்ள பொருள்களைக் குழந்தை கண்டுபிடிக்கின்றது. பொருள்களுக்கும். பொருள்களுக் கிடையேயும், பொருள்களுக்கும் செயல்களுக்கிடையேயும் உள்ள தொடர்புகளைத் தனது அறிகை அமைப்புக்கேற்ப குழந்தை கண்டு பிடித்துக் கொள்ளுகின்றது. தமது கண்களுக்குப் புலப்படாத பொருள்கள் "இல்லை" என்றே குழந்தை கருதுகின்றது. ஒழித்து வைக்கப்பட்ட பொருள்களையும் இல்லை என்றே குழந்தை எண்ணுகின்றது. தனது செயற்பாடு ஒன்றினால் தொலைந்த பொருள் மீளக்கிடைக்குமாயின், அதே நோக்குடன் குழந்தை அந்தச் செயற்பாட்டினை மீளச் செய்யும்.

குழந்தை வளர வளர உடல்சார் செயற்பாடுகள் மிகையாகப் பயன்படுத்தி நடப்பியலை விசாரணை செய்யும். புலன் இயக்கப் பருவநிறைவில் பொருள்கள் பற்றியும், காரணம் - விளைவுத் தொடர்புகள் பற்றியும், கிடைக்கப் பெற்ற அறிவு பற்றியும் திரளமைப்பை வளர்த்துக் கொள்ளுகின்றனர். இரண்டு வயதாகும் பொழுது கற்பனை விளையாட்டுக்களும், ஓரளவு மொழிப்பிரயோகமும் இடம்பெறத் தொடங்கும்.

முன் இயக்கப் பருவம் (The Pre Operational Period) இரண்டு வயது தொடக்கம் ஆறுவயது வரை பொதுவாக நிகழும். எண், கன அளவு, நிறை, திணிவு தொடர்பான கட்புலன் சார்ந்த நிலை மாற்றங்களை அளவு சார்ந்த நிலை மாற்றமாகக் கொள்ளும் பண்பு காணப்படும். அதாவது தவறு கோடல் (Misconception) இப் பருவத்திலே காணப் படுகின்றது. உதாரணமாகத் திரள் களிமண்ணைத் தட்டையாகப் பரப்பிவைத்த பொழுது அதன் நிறை கூடியதென்று சிறுவர்கள் எண்ணினர்.

திட நிலை இயக்கப்பருவம் (The Concrete Operational period) ஆறு வயது தொடக்கம் பன்னிரண்டு வயது வரை நிகழும். வளர்ந்தோர் பயன்படுத்தும் அளவைவியல் பரிமாணங்களை இப்பருவத்திலே சிறுவர் பயன்படுத்தத் தொடங்குவர். தொடர் நிலை அமைப்புக்களை - இப்பருவத்தில் தெளிவாக புரிந்து கொள்வர். திடநிலையான உலகுக்கு அல்லது உருவநிலையான உலகுக்கு (Concrete World) மட்டுமே அவர்களது அளவியற் சிந்தனைகள் பொருத்தமானதாக அமையும். திட நிலை இயக்கப்பருவத்தின் இயல்பினைப் பின்வரும் எடுத்துக்காட்டினாற் புலப்படுத்தலாம்.

1. எல்லா ஆடுகளும் பச்சை நிறம் உடையன.

2. அவனிடம் ஓர் ஆடு இருந்தது.

3. அவனுடைய ஆட்டின் நிறம் என்ன?

இந்த வினாவுக்கு இப்பருவத்தில் உள்ளோர் பொதுவாகத் தந்த விடை "பச்சை நிறத்தில் ஆடுகள் இல்லை" என்பதாகும்.

முறைசார் இயக்கப் பருவம் பன்னிரண்டு வயது தொடக்கம் வளர்ச்சியடையத் தொடங்கும். பகுத்தறிவுடன் சிந்தித்தல், அருவமாகச் சிந்தித்தல், சிந்தனையைத் தருக்க நிலை உறுதி பெற ஒழுங்கமைத்தல் முதலியவை இப்பருவத்தில் நிலைபேறு கொள்ளத் தொடங்கும்.

பள்ளிக்கூடங்களில் பியாசேயின் கோட்பாடுகள் நடைமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவர் குறிப்பிடும் வளர்ச்சிப் பருவங்களைச் சில சிறுவர்கள் முந்திக் கொண்டு முன்னேறிச் செல்வது தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் வயதுக் கட்டுப்பாடுகள் முக்கியத்துவம் பெறாதிருப்பினும், பியாசே குறிப்பிடும் வளர்ச்சி மேம்பாட்டுப் பருவத் தொடர்ச்சியை நிராகரிக்க முடியாதிருக்கின்றது.

சிறுவர்க்குரிய கற்பித்தலியல், பள்ளிக்கூடக் கலைத்திட்டம் முதலிய துறைகளில் ஒரு புதிய கண்ணோட்டத்தை பியாசே உருவாக்கினார் என்பதை மறுக்கமுடியாது. சிறுவர்க்கான நூலாக்கம், விளையாட்டுப் பொருளாக்கம், ஆய்வு கூடப் பொருள்களின் ஆக்கம், மதிப்பீட்டு முறைமை முதலியவற்றில் அவரது கருத்துக்கள் ஆழ்ந்த சுவடுகளைப் பதித்துள்ளன. சிறுவர்கள் எவ்வாறு சூழலுடன் இடைவினை

கொள்ளுகின்றார்கள், எவ்வாறு சிந்திக்கின்றார்கள் என்பவற்றை அறிந்து கற்பிக்கும் பொழுது வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை உருவாக்க முடியும்.

பியாசேயின் கருத்துக்கள்கலைத் திட்டத்தில் பின்வரும் செயற்பாடுகளுக்கு அழுத்தங்கொடுத்துள்ளன.

1. சூழலுக்குரிய தழுவலை மேற்கொள்ளும் பொருட்டு மாணவர் தாமே சுய ஊக்கம் கொள்வர்.

2. செயலூக்கத்துடன் பங்கு பற்றலே வினைத்திறன் மிக்க கற்றலாகின்றது.

3. அறிவு என்பது "பெறுவது" என்பதிலும் பார்க்க, செயற்பாடுகளினால் உள்ளத்திலே வடிவமைக்கப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

4. நுண்மதி சார்ந்த செயற்பாடுகள் நேரியல் அனுபவங்கள் மீது கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

5. பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வினாக்களை எழுப்புவதன் வாயிலாக கற்பவர்கள் தமக்குரிய அறிவைக் கட்டியெழுப்புவதற்குத் துணை செய்ய முடியும்.

6. கற்றல் என்பது அறிகை அமைப்பின் வளர்ச்சி மேம்பாடு.

7. சரியான விடையை துளையிட்டுக் கற்பிக்காது, மாணவர்கள் தாமாகவே காரணங்கண்டு விடை பெறக்கூடிய செயற்பாடுகளை ஊக்குவித்தல் வேண்டும்.

8. மாணவர்களை அடியொற்றிக் கற்றல் தொடர்ச்சிகள் அமைக்கப் பெறுதல் வேண்டுமேயன்றி, பாடங்களின் உள்ளடக்கத்துக்கு ஏற்றவாறு கற்றல் தொடர்ச்சிகள் அமைக்கப்படலாகாது.

9. கற்கும் மாணவர்கள் கோட்பாடுகளை வடிவமைப்பவர்கள் என்ற நிலையில் நோக்கப்படுதல் வேண்டும்.

10. கூட்டல், கழித்தல் போன்ற அடிப்படையான கணிதத் தொழிற்பாடுகளை உடல் சார் தொழிற்பாடுகளின் உசாவல் நிரலை அடிப்படையாக வைத்துப் பரீட்சித்துக் கொள்ள முடியும்.

பியாசேயின் பங்களிப்பு உளவளர்ச்சிக் குறைந்த சிறுவர்களுக்குரிய கற்பித்தலிலும் மேம்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றது.

# அல்பேற் பண்டுறா - சமூகக் கற்றற் கோட்பாடு

மனிதருக்கும் அவர் வாழும் சூழலுக்குமிடையே நிகழும் இருவினை (Reciprocity) உறவுகளால் கற்றல் நிகழ்கின்றது. சூழல் தூண்டிகளுக்கு வெறுமனே துலங்குபவர்களாக மட்டும் மனிதர் இருப்பதில்லை. துலங்கலை உள்வாங்கி நிரற்படுத்திப் புடமிட்டு சூழலில் விரும்பத்தக்க மாற்றங்களைச் செய்யக் கூடியவாறு நடத்தைகள் ஒழுங்கமைக்கப்படு கின்றன என்ற சமூகக் கற்றற் கோட்பாட்டின் அடிப்படையிலே கல்வி கட்டி எழுப்பப்படல் வேண்டும் என்பது அல்பேற் பண்டுறா (Albert Bandura) வின் கருத்து.

சமூகக் கற்றலானது இடைவினை கொள்ளல் என்பதை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் தருகின்றது. அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

(1) சூழலில் உள்ள தூண்டி செல்வாக்கு விளைவிக்கும் நடிபங்காகச் செயற்படுகின்றது.

(2) மனிதரின் அறிவு நிரற்படுத்தும் ஆற்றல் கருத்திற் கொள்ளப்படுகின்றது.

(3) மனிதருக்கும் சூழலுக்குமிடையே நிகழும் இருவினைச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது.

இவர் உற்று நோக்கப்படும் தரவுகளைத் தமது ஆய்வுகளுக்கு அதிக அளவிலே பயன்படுத்துகின்றனர்.

தூண்டிகளாகத் தரப்படும் காட்டுருக்களை பின்பற்றியும் பாவனை செய்தும் சமூகக் கற்றல் இன்னொரு வகையிலே நிகழ்கின்றது என்பதை பண்டுறா சுட்டிக்காட்டினார். காட்டுருக்கள் (Models) மனிதர்களாக இருக்கலாம் அல்லது போதனை வடிவங்களாக இருக்கலாம், குறியீடுகளாக இருக்கலாம். காட்டுருக்கள் வன்செயல் வடிவங்களாக அமையும்பொழுது மாணவர்களிடத்து வன்செயல் வளர்ச்சியுறுவதை பண்டுறா தனது ஆய்வுகளிலே சுட்டிக் காட்டினார்.

சமூகக் கற்றலின் செயற்பாடுகளிலே இரண்டு படிநிலைகள் காணப்படுகின்றன. அவையாவன:

(1) மனிதர் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு அறிவை உள்வாங்குதல்.

(2) விரும்பினால் உள்வாங்கிய ஆற்றலை ஆற்றுகை செய்யலாம் அல்லது ஆற்றுகை செய்யாது விடலாம்.

இவை, உள்வாங்குதல் (Acquire) ஆற்றுகை செய்தல் (Perform) என்ற எண்ணக்கருக்களால் விளக்கப்படுகின்றன. எல்லா மனிதர்களுக்கும் ஏதோ ஒரு வழியில் ஆற்றுகை செய்யத் தெரியும் என்றும், ஆனால் ஏதோ காரணங்களினால் அவ்வாறு செய்யாது விடுகின்றனர் என்றும் பண்டுறா குறிப்பிட்டுள்ளார். உதாரணமாகக் களவெடுக்கப் பலருக்குத் தெரிந்த போதிலும் பல காரணங்களால் அவர்கள் அதனை ஆற்றுகை செய்வ தில்லை. உள்வாங்குதல் அல்லது திரட்டிக் கொள்ளல் என்ற செயல் முறையில் கவனம், தகவல்களை உள்ளத்திலே நிரற்படுத்தல், அல்லது ஒழுங்கமைத்தல் பதித்து வைத்தல் ஆகிய உளச் செயல்கள் இடம்பெறுகின்றன. ஆற்றுகை என்பது உடனடியாகவும் நிகழலாம், தாமதித்தும் நிகழலாம். நடத்தைகள் மட்டுமன்றி மொழி வெளிப்பாடுகளும் உள்வாங்குதல், ஆற்றுகை செய்தல் என்ற இரு தொழிற்பாடுகளினாலும் நிகழ்வதைச் சமூகக் கற்றல் சுட்டிக் காட்டுகின்றது.

சமூக உலகில் பிறரை உற்று நோக்கிக் கற்றல் என்பது தொடர்ச்சியாக நிகழ்கின்றது. பிறரது நடத்தைகளைக் கண்டும் அவற்றின் விளைவுகளைக் கண்டும் சரியான துலங்கலை இனங்கண்டு கற்றுக்கொள்ளல் சமூக இடை வினைகளின்பொழுது தொடர்ச்சியாக நிகழ்கின்றது. உற்றுநோக்கல் வழியாகவே உள்ளார்ந்த வினைத்திறன் கொண்ட பெரும் எண்ணிக்கையிலான நடத்தைக் களஞ்சியம் உருவாக்கப்படுகின்றது. இவற்றை ஆழ்ந்து ஆராய்ந்த பண்டுறா உற்றுநோககல் வழியாக நிகழும் கற்றலில் நான்கு கட்டங்களைத் தெரிவுபட விளக்கினார். அவை

1. கவன ஈர்ப்புக் கட்டம்
2. மனதிற் பதிக்கும் கட்டம்
3. மீளவாக்கும் கட்டம்
4. ஊக்கல் பெறும் கட்டம்

பொதுவாக யார் உயர்ந்த அந்தஸ்து கொண்டவர்கள் என்று கருதுகின்றார்களோ யார் ஆற்றல் மிக்கோர் என்று கருதுகின்றார்களோ அவர்கள் மீது பிறர் கவன ஈர்ப்புக் கொள்ளுகின்றார்கள். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் கவன ஈர்ப்புக்குரிய தூண்டிகளைக் கொடுக்கும்பொழுது கவனத்தை ஈர்க்கும் ஏனைய காரணிகள் பின் தள்ளப்பட்டுவிடும். பலவகைப்பட்ட தூண்டிகளில் கற்பதற்குரிய தூண்டியை முதன்மைப் படுத்தும்பொழுது, ஏனைய தூண்டிகள் பின்தள்ளப்படும்.

மனத்திலே பதிக்கும் கட்டத்தை நோக்கும்பொழுது இரண்டு இணைந்த நிகழ்ச்சிகள் முக்கியமானவை. அவை -

1. ஆற்றுகை செய்பவர்கள் மீது செலுத்தப்படும் கவனம்.

2. அந்த ஆற்றுகையில் நீண்டகால நினைவுக்குரியவாறு தரப்படும் குறியீட்டு வடிவங்கள்.

மீளவாக்கும் கட்டத்தில் மனத்தில் பதிந்துள்ள நினைவுகள் புதிதாகத் திரட்டப்பட்ட ஆற்றுகை நடத்தைக்கு வழிகாட்டியாக அமையும். விளைவுகள் பற்றிய தெளிவான அறிவு எளிமையான பின்னூட்டலாக அமைந்து பின் உருவாகும் நடத்தைகள் மீது ஆழ்ந்த செல்வாக்கை செலுத்தும்.

மீள வலியுறுத்தலும் தண்டனையும் ஊக்கல் பெறும் கட்டத்தில் மிக முக்கியமான வலுக்களாகவுள்ளன. தமது நடத்தைகளுக்குத் தாமாகவே மீள வலியுறுத்தலும், தாமாகவே தண்டனை வழங்குதலும் ஊக்கல் பெறும் நிலைக்கு வலிமையளிக்கின்றன.

ஊக்கல் விசை பற்றிக்கூற வந்த பண்டுறா, தன்னலவிசை (Self Efficacy) கோட்பாட்டை முன்வைத்தார். அதாவது ஒருவரது நடத்தைகள் பெரும்பாலும் அவரால் புலக்காட்சி கொள்ளப்பட்ட தன்னல விசையிலே தங்கியிருக்கும். ஒருவரது நடத்தையை உருவாக்குதலும், அவற்றை நெறிப்படுத்தலும், தொடர்ந்து இயக்குதலும் தன்னலவிசை யினால் தீர்மானிக்கப்படும் கற்றல், உண்ணல், உறங்கல், விளையாடுதல், பரீட்சைக்குத் தயார்செய்தல், தொழில் தேடுதல், திருமணம் செய்தல், பொருள் ஈட்டுதல் என்ற அனைத்தும் தன்னல விசையினால் நிச்சயிக்கப்படும்.

தனி மனிதர் சூழலில் உள்ள தகவல்களை உள்வாங்கி நிரற்படுத்துகின்றனர். கடந்த காலங்களில் உள்வாங்கி நிரற்படுத்திய அனுபவங்களினால் தன்னலவிசை வடிவம் பெறுகின்றது. இவ்வாறாக வடிவம் பெற்ற தன்னலவிசை மீண்டும் சூழலில் ஒருவர் நடந்து கொள்வதைத் தீர்மானிக்கின்றது.

ஊக்கல் பற்றிய அறிகைக் கோட்பாட்டிலிருந்து பண்டுறாவின் "தன்னல விசைக் கோட்பாடு" வேறுபடுத்துகின்றது. இந்த வேறுபாட்டை உருவாக்கும் எண்ணக்கரு "எதிர்பார்ப்பு வினை" (Expectancy) யாகும். தன்னல விசையை மேம்படுத்தும் "எதிர்பார்ப்பு வினை" பற்றி பண்டுறா குறிப்பிடுகின்றார். அதாவது தனது செயலால் மேம்பாடான விளைவு தோன்றும் என்ற உளத்திடத்துடன் ஒருவர் செயற்படுவதை மேற்கூறிய எண்ணக்கரு புலப்படுத்துகின்றது. தமது செயலில் அவநம்பிக்கை அல்லது ஐயப்பாடு தோன்றுமாயின் எதிர்பார்ப்பு வினை அவரது நடத்தையை பாதிக்கும். இந்நிலையில் தம்மைத்தாமே பற்றிக் கொள்ளும் அபிப்பிராயம் அல்லது

தற்புலக்காட்சி முக்கியத்துவம் பெறுகின்றது. தற்புலக் காட்சியின் வாயிலாகத் தன்னலவிசை தோன்றுகின்றது.

தன்னலவிசை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. பலம், பொதுத் தன்மை, உருப்பருமன் போன்ற பரிமாணங்கள் அதில் இடம் பெறுகின்றன. தன்னல விசையின் உருப்பருமனுக்கு (Magnitude) ஏற்றவாறு ஒருவரது செயலாற்றுகைத் திறன் இடம் பெறும். தாழ்ந்த உருப்பருமன் கொண்டோர் கடினமான செயல்களை மேற்கொள்ளும் திறனுடையோராய் இருப்பர். சில எதிர்பார்ப்புகள் குறித்த செயற் பாடுகளை நோக்கியதாக இருக்கும். சில பொதுத்தன்மை வாய்ந்தவையாய் இருக்கும். வலிமை மிக்க தன்னலவிசை எதிர்பார்ப்புக் கொண்டவர்கள் எத்தகைய வலிய தடைகளையும் எதிர் கொண்டு முன்னேறத்துணிவர். ஏனையோர் தடைகள் எதிர் கொள்ளப்படும் பொழுது தமது முயற்சிகளைக் கைவிடுவர்.

முயற்சி ஒன்றில் வெற்றி கிடைக்கும் பொழுது, தன்னலவிசை வளர்ச்சி அடையும். தோல்வி கிடைக்குமாயின் தன்னலவிசை பாதிப்படையும். வெற்றிகரமான ஒரு செயலைப் புரிபவரை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றும் பொழுதும், தன்னலவிசை வளர்ச்சியடையும். சுயமுயற்சி மேலீட்டுடன் முன்னேறும் ஒருவரது மாதிரிவடிவம் தன்னல விசையிற் கூடிய செல்வாக்கைச் செலுத்தும். மாதிரி வடிவமாகக் கொள்பவரும், அவரை உற்று நோக்குபவரும் ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பார்களாயின் தன்னலவிசை கூடியவளம் பெறும். கூடிய முயற்சிகள் செய்து வெற்றி பெறும் பலரை மாதிரி வடிவமாகக் கொண்டு பின்பற்றும் பொழுது தன்னலவிசை வளம் பெறக் கூடியதாக இருக்கும். இச்சந்தர்ப்பங்களில் மாதிரி வடிவமாகக் கொள்பவரின் நடத்தைகளை எவ்வாறு புலக் காட்சிப்படுத்தி உள்வாங்குகின்றார் என்பது முக்கியத்துவம் பெறும்.

பண்டுறாவின் கோட்பாடு ஆசிரியருக்கு பல முன்மொழிவுகளைத் தருவதாகவுள்ளது. குறித்தப் பணிகளை நிறைவேற்றாது இடைநடுவில் கைவிடுதல் குறித்த பாட அலகுகள் கடினமானது என்று சொல்லுதல், மொழியைச் சரியாக ஒழுங்கமைக்காது விடுதல் போன்ற செயல்களில் பெற்றோரும் ஆசிரியரும் ஈடுபடுவார்களாயின் மாணவரின் தன்னலவிசை பாதிக்கப்படும். பள்ளிக்கூட மட்டத்தில் தன்னலவிசைக் கோட்பாட்டை விரிவாகப் பயன்படுத்த முடியும் என்று றோசர் என்ற ஆய்வாளர் கருதுகின்றார். (றோசர் - 1984).

ஆயினும் பண்டுறாவின் மீது முன்வைக்கப்படும் பிரதான திறனாய்வு, அவர் பெரும்பாலும் "குறித்த பயம்", தொடர்புபட்ட பயம்" கொண்டோர் மீது மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாகவே தன்னலவிசைக் கோட்பாட்டை உருவாக்கினார் என்பதாகும்.

ஒப்பீட்டளவில் குறைந்த அளவில் பள்ளிக்கூட மட்ட ஆய்வுகளை அவர் மேற்கொண்டார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பள்ளிக்கூட வகுப்பறைகளில் இசைவுச் சமூக நடத்தைகளும் (Prosocial Behaviour) முன்னேற்றும் நடவடிக்கைகளும் பற்றி இன்று பரவலாகச் சிந்திக்கப்படுகின்றன. வகுப்பில் உள்ள மாணவர்கள் சிலர் சமூக பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அல்லது வலது குறைந்த நிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கப்படுதல் உண்டு. இந்நிலையில் சக மாணவர் பற்றிய தெளிந்த நோக்கை ஏற்படுத்துவதற்கு இசைவுச் சமூக நடத்தை உருவாக்கத்தில் முன்னுரிமை தரப்படுகின்றது. மேலும் ஒத்துழைத்தல், பங்காளிகளாக இருத்தல், சமூக சந்தர்ப்ப நிலைகளை விளங்கிச் செயற்படல், இசைவுச் சமூக நடத்தைகளுக்குரிய காரணங் காணலை வளர்த்தல் முதலியவற்றை மேம்படுத்தும் பொழுது பண்டுறாவின் கோட்பாடுகள் பலதளங்களிலே பயனுடையனவாய் இருக்கின்றன.

# கொலின் ரெறி - பள்ளிக்கூடங்களில் நுண்கணிப் பொறிகளைப் பயன்படுத்தும் புரட்சி

அறிவுத் தொகுதியின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாத சாதனமாகியுள்ள கணிப்பொறித் தொகுதி (Computer System) நான்கு சிறப்பார்ந்த இணை உறுப்புக்களைக் கொண்டுள்ளது. அவையாவன-

1. உள்ளீடு.

2. வெளியீடு.

3. நினைவகம்.

4. மத்திய செவ்வணி.

கணிப்பொறியுடன் இயக்குநர் தொடர்பு கொள்ள உள்ளீட்டு முறைமை துணை செய்யும். கணிப் பொறியானது நுகர்வோருடன் தொடர்பு கொள்ள வெளியீட்டு முறைமை துணை நிற்கும். தகவல்கள் அனைத்துதும் நினைவகத்திலே களஞ்சியப்படுத்தப்படும். மத்திய செவ்வணி அலகு (Central Processing Unit) இந்த அமைப்பின் மூளையாகத் தொழிற்படும். உள்ளீடு, வெளியீடு, நினைவகத்துக்கு அனுப்புதல் பெறுதல் அனைத்தும் மத்திய செவ்வணி அலகினால் மேற் கொள்ளப்படும்.

கணினிப் புரட்சியில் நுண்கணிப் பொறியானது மேலும் ஒரு புரட்சி என்று குறிப்பிடப்படும். சிறியது, இலகுவானது, மலிவானது, நெகிழ்ச்சியானது போன்ற பல பண்புகளை உள்ளடக்கிய நுண்கணிப் பொறியானது வகுப்புக்களிலே தவிர்க்க முடியாத சாதனமாகி வருகின்றது. பள்ளிக்கூடங்களிலே நுண்கணிப் பொறிகளின் பயன்பாடு பின்வரும் அகல்விரிப் பண்புகளை உள்ளடங்கியது என்பது கொலின் ரெறி (Collin Rerry) முன்வைத்த கருத்து.

1. மாணவர் தம்மைத்தாமே நெறிப்படுத்தும் விசாரணைகளை வளர்க்க உதவும்.

2. மாணவர் ஒவ்வொருவரதும் தனித்தனித் தேவைகளையும், தனியாள் விருப்பு வெறுப்புக்களையும், பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட ஒரு வகுப்பிலே வினைத்திறனுடன் கற்றலை நிறை வேற்றிவைக்க நுண்கணிப்பொறி துணை செய்யும்.

3. பாட எண்ணக்கருக்களை வளம்மிக்க அனுபவங்களுடன் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் இவை பெரிதும் உதவும்.

4. கற்றலிலே ஊக்கல் விசையை உருவாக்கவும், பரிகார வழிகளை முன்னெடுக்கவும் இவை துணைநிற்கும்.

நுண்கணிப் பொறிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னதாகக் கல்வியின் இலக்குகள், கலைத்திட்டத்தின் செயல் முனைப்புக்கள், ஆசிரிய வளம், மாணவர் இயல்புகள் முதலியவை பற்றிய சிந்தனைத் தெளிவு வேண்டும். "கல்விக்காகக் கணிப் பொறிகள்" என்பதே பொருந்தும் - "கணிப் பொறிக்காகக் கல்வி" என்பது பொருந்தாது. நுண்கணிப் பொறி ஒரு சாதனமே அன்றி அதிகாரத்தலைமை நிலை கொண்டதல்ல. கற்பித்தலில் நுண்கணிப் பொறிகளைத் தவிர்த்த வேறு பல சாதனங்களும் நுட்பவியலும் உள்ளன என்பதை ஆசிரியர் மனங்கொள்ளல் வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் நுண்கணிப் பொறிகளின் பயன்பாடு பற்றிச் சிந்திக்கும் பொழுது இரண்டு பரிமாணங்கள் தெளிவாகின்றன. அவை

1. கணிப்பொறி நடையுணர்வு.

2. கணிப்பொறி எழுத்தறிவு.

கணிப்பொறி நடையுணர்வு (Computer Awareness) என்று கூறும்பொழுது, அதில் வாழ்க்கையிலும், சமூகத்திலும், அறிவுக் கையளிப்பிலும், கணிப்பொறிகள் வகிக்கும் இடம், கணிப் பொறிகளின் வரலாற்று வளர்ச்சி எவ்வாறு அவை தொழிற்படுகின்றன, எங்கெல்லாம் அவை பயன்படுத்தப்படுகின்றன, அவற்றோடு தொடர்புடைய மானுட விழுமிய வினாக்கள் முதலியவை இடம் பெறும்.

கணிப்பொறி எழுத்தறிவு (Computer Literacy) என்ற பிரிவில் இயங்கும்திறன் கணிமிய ஆற்றல் (Computing Ability) மென்கலம், வன்கலம், பற்றிய அறிவு எவ்வாறு செய்யப்படுகின்றது என்பவை பற்றிய அறிவு இடம் பெறும்.

புறச் சூழலின் தாக்கங்கள் காரணமாக இன்றைய மாணவரின் வகுப்பறை ஈடுபாடுகள் பாதிக்கப்படுகின்றன. பெற்றோர்களிடத்துக் காணப்படும் பள்ளிக்கூட விருப்பு மாணவரிடத்துக் காணப் படுவதில்லை என்ற மாற்றுக் கருத்தும் உண்டு. பள்ளிக்கூட வகுப்புகள் இறுக்கமும், வைராக்கியமும் மிக்க போர்க்களங்களாகி வருகின்றன. ஆசிரிய வாண்மை பல்வேறு நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ளது. யாரும் இலகுவாகக் குற்றம் சுமத்தக் கூடிய பொறிக்குள் ஆசிரியர் தள்ளப்பட்டு விட்டனர். இவ்வாறான எதிர் மறை நிலைமைகளை மாற்றியமைப்பதற்குரிய வலிமையான சாதனமாக நுண்கணிப் பொறிகளின் பயன்பாடு அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எத்தகைய கற்பித்தல் முறைமை பொருத்தமானது என்ற வினாவே இன்றைய பள்ளிக்கூட அமைப்பின் தலையாய கேள்விக்குறியாக எழுந்துள்ளது. அறிவு தேடும் ஒரு சமூகத்தின் தலையாய மூலதனச் செலவாகக் கல்விச் செலவே முன்னுரிமை பெறத் தொடங்கியுள்ளது. இவற்றின் பின்புலத்தில் கணிப்பொறி முறைமை ஆழ்ந்த கருத்துக்கு எடுக்கப்பட வேண்டியுள்ளது.

உலகின் தலையாய நூல் வெளியீட்டு நிறுவனங்களும், கல்விவள நிலையங்களும் கணிப்பொறிகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் பொதிகளைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளன. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை இவை பன்முகமாக அணுகிவருகின்றன. இதன் காரணமாகப் பன்முக இயல்புகளைக் கொண்ட வகுப்பு மாணவர்களுக்கு கணிப்பொறிக் கற்றல் பொதிகள் பெரிதும் பயன்படத் தொடங்கியுள்ளன.

சூழலில் இருந்து தகவல்களையும், அனுபவங்களையும் திரட்டிக் கொள்ளலும், ஒழுங்கமைத்தலும், பயன்படுத்தலும், கற்றலின் சிறப்பார்ந்த பணிகளாகக் கொள்ளப்படும். கற்றலின் "வேகத்தை" அதிகரிப்பதற்கும் ''பண்பு மேம்பாட்டை'' வருவிப்பதற்கும் கணிப்பொறியை அடிப்படையாகக் கொண்டால் கற்றல் நிச்சயமாக உதவும் என்பது நிக்கலஸ் றஸ் - (1984) தரும் முன்மொழிவு. இதன் பொருட்டு இன்று ஆசிரியர்களின் மேற் பார்வையின் கீழ் பொருத்தமான இதவடிவங்கள் (Modules) தயாரிக்கப்பட்டுள்ளன. கணிப்பொறிகளைத் துணையாகக் கொண்ட கற்றல் (Computer Assisted Learning) பின்வரும் நலன்களைக் கொண்டிருக்கும்.

1. செலவு, வளங்கள், நேரம், என்பவற்றைச் சிக்கனப் படுத்துதனையும்.

2. வினைத்திறன் கொண்ட கற்றலை உருவாக்கும்.

ஒருபுறம் ஆசிரியருக்குச் சவாலாக அமையும் பொருத்தமற்ற சுமைகளையும், மாணவர்களுக்குப் பளுவாக அமையும் பொருத்தமற்ற செயல்களையும் கணிப்பொறிகள் நீக்கிவிடுகின்றன.

கணிப்பொறிகள் பற்றிய அறிவு அவற்றை எவ்வாறு இயக்குதல் என்பது பற்றிய அறிவு என்பவை மட்டும் போதுமானவையன்று. கணிமிய ஆற்றல்களுக்கு கலைத்திட்டத்தினூடாக வளர்க்கப்படல் வேண்டும். இந்தத் துறையில் தரவுகளைச் செவ்வணி செய்தல் (Data Processing) என்ற செயற்பாட்டுக்குப் பயிற்சி தருதல் முதற் கண் இன்றியமையாதது. தரவுகளைச் செவ்வணி செய்தல் பின்வரும் படிநிலைகளைக் கொண்டது-

1. தேவையான தரவுகளைத் திரட்டுதல்.

2. பயன்படத்தக்க விதத்தில் அவற்றைத் தயாரித்தல்.

3. அவற்றை உள்ளீடு செய்தல்.

4. தரவுகளைச் சரிபார்த்தல்.
5. தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பாடுகளை நிகழ்த்தி செவ்வணி செய்தல்.
6. களஞ்சியப்படுத்தல்.
7. வெளியீடு செய்தல்.

கற்றல் கற்பித்தலுக்குப் பொருத்தமான முறையில் நீண்ட ஆராய்ச்சிகளின் பின்னர் லோகோ (LOGO) என்ற கணிப்பொறி மொழி நடை உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் எளிதானதும், வலிமை மிக்கதுமான மொழி நடையாக அமைகின்றது. இந்த இரண்டு பண்புகளுக்கும் முரண்படாது, இணங்கிச் செல்லும் முறையிலும், அனுசரணையாகச் செல்லும் விதத்திலும் லோகோ மொழி நடை உருவாக்கப்பட்டுள்ளது.

நுண்கணிப் பொறியை ஓர் உதவிச் சாதனமாகக் கொண்டு கற்பித்தல் பற்றிய விசாரணைகள் (ITMA) அண்மைக் காலமாக முக்கியத்துவம் பெற்று வருகின்றது. (Investigation on Teaching with Micro Computers as an Aid) இவை தொடர்பான ஆய்வுகளும் இணைப்பு நடவடிக்கைகளும் ஆசிரியர்கள், பாட நிபுணர்கள், உளவியலாளர்கள், கலைத்திட்ட நிபுணர்கள், கணிப்பொறி நிபுணர்கள், நிகழ்ச்சித்திட்டம் அமைப்போர், வெளியீட்டாளர்கள் முதலியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பின்வரும் துறைகளில் பொருத்தமான நடிபங்குகளை நுண்கணிப் பொறிகளால் ஆக்கி ஒன்றிணைக்க முடியும் என்பது தெளிவாகின்றது.

1. கரும் பலகை/ பசும் பலகை/ வெண் பலகை.
2. பாட நூல்கள்/ பொது நூல்கள்.
3. கற்பித்தல் துணையங்கள்.
4. பங்காளர்/ துணையாளர்.
5. கருவிகள்/ சூழல்.
6. மாணவர்.
7. பரீட்சையாளர்.
8. முகாமையாளர்.
9. ஆசிரியர்.

மீதித்திறன் கொண்ட மாணவருக்கு மட்டுமல்ல, மெல்லக் கற்போருக்கும் இவை பன்முகமான வழிகளிலே துணை செய்கின்றன.

எழுத்து, உரை நடை, கவிதை என்பவற்றைக் கற்பிப்பதற்கு நுண் கணிகள் வினைத்திறன் கொண்ட சாதனங்களாகி வருகின்றன.

எழுதுதுல் என்பது கற்பதற்குரிய ஒரு கருவியாக, தெரிந்தவற்றைப் பதிவு செய்வதற்குரிய ஒரு கருவியாக, வெளியீட்டுக்குரிய ஒரு கருவியாகப் பயன்படும். எழுதுதலைக் "கண்டுபிடித்தல்" என்பதற்காகப் பயன் படுத்துதல் ஒரு புதிய பரிமாணமாகும். இது மூன்று படிநிலைகளைக் கொண்டது.

1. முன் எழுத்தாக்கம் (P)
2. எழுத்தாக்கம். (W)
3. மீள் எழுத்தாக்கம். (R)

சிந்தித்தல், குறித்துவைத்தல், உசாவுதல், முதல் வரைவு செய்தல் முதலியவை முன் எழுத்தாக்கச் செயற்பாடுகளாகும். இறுதி வடிவத்தை அமைத்தல் எழுத்தாக்கச் செயற்பாடு, திருத்துதல், சரவை பார்த்தல் முதலியவை மீள் எழுத்தாக்கத்தில் இடம் பெறும். மேற்கூறிய மூன்று படிநிலைகளிலும் வளம்மிக்க சாதனமாக நுண்கணிப் பொறிகள் அமைந்துள்ளன.

கவிதை அனுபவங்களை வளர்ப்பதற்கு நுண்கணிப் பொறிகள் பின்வரும் வழிகளில் துணைநிற்க முடியும்.

1. சொற் செவ்வணியத்தின் (Word Processor) துணையுடன் கவிதை எழுதுதல்.

2. கணிப்பொறிக் களஞ்சியத்தைத் துணையாகக் கொண்டு கவிதை எழுதுதல்.

3. கணிப்பொறிகளால் கவிதைகளைப் பிறப்பாக்கம் செய்தல்.

4. பொருத்தமான மென்கலங்களைப் பயன்படுத்திக் கவிதை பற்றிய பன்முக அனுபவங்களைப் பெறுதல்.

மொழிக் கற்பித்தலில் நுண்கணிகள் பெரிதும் பயன்படத் தொடங்கியுள்ளன. கேட்டல், வாசித்தல், எழுதுதல், இலக்கணம் போன்ற அடிப்படைத் திறன்களை வளர்ப்பதற்குரிய பொருத்தமான பொதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இக்கற்பித்தலில் மாணவருக்கும் நுண்கணிப் பொறிகளுக்குமிடையே பயனுள்ள இடைவினைகள் உருவாக்கப்படு கின்றன. வேண்டிய தகவலை முழுமையாகவோ, பகுதியாகவோ, சலிப்பு இன்றி இப்பொறி மீளத்தந்து கொண்டிருக்கும். நுண்கணிப் பொறி வாயிலாக வரைபுகளும் உயிர்ப்பூட்டலும் (Graphics and Animation) ஒலி விளைவுகளும் கற்றல் கற்பித்தலுக்கு மேலும் ஊக்கல் விசைகளாக அமையும். ஒவ்வொரு பாடத்துறைகள் தொடர்பாகவும் அமைக்கப்படும் விளையாட்டுக்கள் கற்றலை மேலும் உற்சாகப்படுத்தும்.

திறனாய்வு நோக்கிலே பார்க்கும்பொழுது ஏற்கனவே நடை முறையிலுள்ள கற்பித்தல் முறையியல்களை மீள வலியுறுத்தும் ஒரு

நடவடிக்கைகளையே கணிப் பொறிகள் மேற்கொண்டு வருதலை நோக்க முடியும். ஆசிரியர்கள் இன்றி நுண்கணிப் பொறிகளால் மட்டும் கற்பிக்க முடியும் என்பது பிறழ்வான ஒரு கண்ணோட்டமாகும். நுண்கணிப் பொறிகளுக்குரிய கற்பித்தற் பொறிகளை ஆசிரியர்களே தயாரிக்க முடியும். ஆசிரியரையும் நுண்கணிப் பொறிகளையும் ஒப்பிடுதலே ஒரு தவறான அணுகுமுறையாகும். மாணவரின் மனவெழுச்சிகளையும், உணர்ச்சிக் கோலங்களையும், நுண் பொறிகளால் நுகர்ந்து கொள்ள முடியாது. வளர்முக நாடுகளில் மாணவரின் அடிப்படைத் தேவைகளே நிறைவு செய்யப்படாத பள்ளிக்கூட சூழலில் நுண்கணிப்பொறி வாயிலாக கற்றலும், கற்பித்தலும் கற்பனையாகவே இருக்கும்.

# மாரியா மெயிஸ் - பெண்ணியக் கல்வி.

நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியிலே பெண்கள் சுரண்டப்பட்டும், ஆண் மேலாதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வந்த நிலைமைகள், மறை பொருளாகவும், மேற்கிளம்பாத சமூக மௌனங்களாயும், கூர்மையாக வெளி வீசப்படாது ஒடுக்கப்பட்ட அறிகைக் கோலங்களாயும் இருந்து வந்துள்ளன. பெண்ணியம் பற்றிய, வளர்ந்துவரும் கருத்துக்கள் ஆண்களிடத்தும், பெண்களிடத்தும் ''உணர்ச்சிவசப்படும்'' கருத்தாடல்களையும் ஏற்படுத்தியுள்ளன. இனம், மொழி, வர்க்கம், நாடுகளின் மேலாதிக்கவாதம் என்ற அமைப்புக்கள் அத்தனையும் மீறிப் பெண்ணியம் வளர்ந்து வருதல் உலகம் முழுவதும் பரவியுள்ள பெண் ஒடுக்கு முறைமையின் பரவலை ஒரு வகையிலே வெளிப்படுத்துகின்றன. ஆயினும் பெண்ணியமானது, வர்க்கச் சுரண்டல் தீவிர சுரண்டலுக்கு உள்ளாக்கப்படும் சர்வதேசத் தொழிற் பிரிவு, நாடுகளின் மேலாதிக்க வாதம் முதலியவற்றை நிராகரித்து விடுவதில்லை. பெண்களின் கல்வி வரலாற்றிலே மீள் கண்டுபிடிப்பையும், மீள் மதிப்பீட்டையும் பெண்ணியம் ஏற்படுத்தியுள்ளது.

ஒடுக்கல், சுரண்டல் என்பவற்றுக்கு உட்பட்ட பெண்களிடத்துக் கூடுதலான அறிவுப்பாய்ச்சலையும், உள்ளுணர்வையும் பெண்ணியம் ஏற்படுத்தியுள்ளது. கோட்பாட்டு நிலைமைகளைச் சார்ந்தும், பொருளாதார அபிவிருத்தி மட்டங்களைச் சார்ந்தும் "பெண்ணியம்" என்ற எண்ணக்கருவின் வியாக்கியானங்கள் வேறுபட்டு நிற்றலையும் மாரியா மெயிஸ் (Maria Mies) ஆய்வுப் பூர்வமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்களின் தளை நீக்கத்துக்குரிய உபாயங்களாக சட்ட நிலைப்பட்ட செயற்பாடுகள், பண்பாட்டுச் செயல் விளைவுகள், பெண்களின் பாலியலோடு பிணைக்கப்பட்ட நடிபங்குகளை மாற்றியமைத்தல், பாரம்பரியமாக உருவாக்கப்பட்ட நடிபங்குகளைக் கல்வி வாயிலாக மாற்றியமைத்தல், தொடர்புச் சாதனங்களிலே பெண்களைப் பாலியல் படிமங்களாகச் சித்திரிப்பதற்கு எதிராகப் போராடுதல் முதலியவை சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. பெண்கள்

இன்றும் பல துறைகளிலே ஒரு "சமூகவியற் சிறுபான்மையினராக"க் கணிக்கப்படுகின்றனர். அரசியல், தொழில், வேலை வாய்ப்பு, கல்வி, குடும்பம் என்பவற்றில் இன்றும் பெண் நிலைப்பட்ட சமத்துவமின்மை தொடர்கதைகளாகக் காணப்படுகின்றன.

ஒடுக்கு முறைகளில் இருந்து பெண்களை மீட்டெடுப்பதற்குக் கல்வி விசை கொண்ட காரணியாகக் கருதப்படுகின்றது. பெண்களுக்குரிய உயர் கல்வி வாய்ப்புகளைப் பெருக்குதல் வாயிலாகவும், தொழில் நுட்பக் கல்வி வாய்ப்புக்களை விரிவாக்குவதன் வாயிலாகவும், கலைத் திட்டத்திலே, பெண்கள் நிலைப்பட்ட உள்ளடக்கத்தை அறிபரவல் செய்வதன் வாயிலாகவும் பெண்களின் விடுதலையிலே புதிய பரிமாணங்களை ஏற்படுத்த முடியும என்ற கருத்துக்கள் முன் மொழியப்படுகின்றன.

இன்று நிகழ்ந்து வருகின்ற புதிய தொழில் நுட்பம் புரட்சியிலே பெண்கள் முழுமையாக இணைந்து கொள்ளாவிடில் பெண்கள் விடுதலையிலே மேலும் பின்னடைவுகளை எதிர் கொள்ள நேரிடும். புதிய தொழில்நுட்பப் புரட்சி என்றும் கூறும்பொழுது கணிப்பொறித் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம், பிறப்பு நிலைப் பொறியியல் முதலிய அறிவுத்துறை வளர்ச்சியில் பெண்களின் ஈடுபாட்டை வேகமாக அதிகரித்தல் வேண்டியுள்ளது. ஆயினும் இந்த முயற்சிகளை மேற் கொள்ளும் பொழுது, பொருளாதார முறைமை அல்லது அடிப்படையான பொருளுற்பத்தித் தொடர்புகளைத் திறனாய்வு செய்யாது தனித்துக் கல்விவாயிலாக பிரச்சினைகளைத் தீர்க்க எண்ணுதல் ஒரு மத்தியதர வகுப்பு அணுகு முறையாகவே அமைந்து விடும் என்பது மாரியா மெயிஸ் முன்வைக்கும் அடிநிலையான கருத்து.

தனிச் சொத்துரிமை ஒழிக்கப்பட்டு சோசலிச நிலைமாற்றம் ஏற்படும் காலகட்டங்களிலே காணப்பட்ட பெண்கள் ஒடுக்குமுறைக் கோலங்களை நிலப் பிரபுத்துவ சமூகத்தினதும், முதலாளித்துவத்தினதும் எச்ச சொச்சங்கள் என்றும் அவற்றைச் சட்டவாக்கங்கள் வாயிலாகவும், கல்விவாயிலாகவும், பரப்புரைகள் வாயிலாகவும் மாற்றியமைத்து விடலாம் என்ற கருத்தும் முன்மொழியப்பட்டுள்ளது. அடிப்படையான உற்பத்தித் தொடர்புகளோடு ஆண், பெண் உறவுகளைத் தொடர்புபடுத்தி இப்பிரச்சினையை ஆழ்ந்து நோக்காதவிடத்து சோசலி ச நாடுகளிலும் இது தீர்க்கப்படாதது ஒன்றாகவே காணப்படும் என்ற கருத்து அவரால் முன்வைக்கப்படுகின்றது.

ஆன் ஓக்லி (Anne Oakley) என்பவர் பாலியல் (Sex) என்பதையும், சமூகப் பாலியல் (Gender) என்பதையும் எண்ணக்கரு அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டியுள்ளார். பாலியல் என்பது உயிரியல் அடிப்படையான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும். சமூகப்பாலியல் என்பது உளவியலடிப் படையிலும், பண்பாட்டு அடிப்படையிலும்,

சமூக அடிப்படையிலும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் இனங்காணப்படும் ஆண், பெண் நிலைப்பாடுகளைச் சுட்டிக்காட்டும் உலக அடிப்படையில் இந்த வேறுபாடுகள் சமூகப் பாலியலாக்கம் (Gendering) என்று குறிப்பிடப்படும். இத்தகைய ஒரு பாகுபாடு சில வழிகளிலே பயனுடையனவாயிருந்தாலும், அதன் குறைபாடுகளையும், மாரியா மெயிஸ் சுட்டிக் காட்டியுள்ளார். இது இயற்கையையும் பண்பாட்டையும் பிரித்து நோக்கும் ''இருமைப்பாட்டின்'' வெளிப்பாடாக அமைகின்றது. நவீன விஞ்ஞான வளர்ச்சியின் பின்புலத்திலே மேலை நாடுகளில் பெண்கள் இயற்கையில் இருந்து பிரித்துவைக்கப்பட்டார்கள். அதாவது இயற்கைக்கும், பெண்களின் பண்பாட்டுக்கும் இடையே வேறுபாடுகள் கற்பிக்கப்படுகின்றன. இந்த இருமைத் தன்மையிலிருந்து மீண்டெழுவதற்கு "பாலியல்" "சமூகப் பாலி யல்" என்ற எண்ணக்கருக்களைப் பயன்படுத்துதல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத வெறும் கற்பனைப் பொருளாகவே அமையும்.

"பாலியல் வன்செயல்" என்பதற்குப் பதிலாக "சமூகப்பாலியல் வன்செயல்'' என்று கூறுவதனால் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. அது ஓர் ஏமாற்று வித்தையாகவே முடிந்துவிடும். மனித இயல்புகள், ஆண், பெண் இயல்புகள் என்பவை எப்பொழுதும் சமூக வரலாற்று இயல்புகளினாலும் நிபந்தனைப்பாடுகளினாலும் தோன்றியவை. இயற்கையுடனும், சமூகத்துடனும் மேற்கொள்ளப்பட்ட இடைவினைகளின் வழியாகத் திரண்டு, விருத்தியடைந்த வடிவமாகவே மனித உடற்கூற்றியல் அமைந்துள்ளது. ஆகவே சமூகப்பாலியல் போன்று உடற்கூற்றுப் பாலியலும் சமூகத்திலும், வரலாற்றிலும் ஆழ்ந்து நிற்பதாகும்.

பெண்கள் ஒடுக்கப்படுதல் என்பது ஆண் வழி உற்பத்தி உறவுகளின் (Patriarchal Production Relations) ஒன்றிணைந்த பண்பாக உள்ளது. இந்த உற்பத்தி முறைமையின் தொடர்ச்சியான வளர்ச்சியும், வரையறையற்ற பொருளுற்பத்தி வாயிலான இலாபமீட்டலும், வரையறையற்ற முறையில் இயற்கை மீது மேற் கொள்ளப்படும் சுரண்டலும், தொடர்ந்து அதிகரிக்கப்படும் உற்பத்தி விசைகளும் பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளை வளரச் செய்கின்றன. இந்நிலையில் பண்பாட்டுக்கு மட்டும் முதன்மை கொடுக்கும் பெண்ணியக் கல்விச் செயற்பாடுகளினால் பயன் நிறையப்போவதில்லை என்பது மாறியா மெயிஸ் முன்வைக்கும் கருத்து.

உலகளாவிய நிலையில் எழுத்தறிவு உயர்ந்து வருகின்ற வேளையில், விஞ்ஞான அடைவுகள் பற்றியப் பெருமிதமாகப் பேசிக் கொள்ளும் நிலையில், பெண்கள் உடலடிப்படையிலும், உள அடிப்படையிலும், மனவெழுச்சி அடிப்படையிலும் பல்வேறு துன்பங்களுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் தொடர்ந்து உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். பெண்கள் மீதான வன்முறைகள் தற்செயலானவை அன்று.

அவை நவீன முதலாளித்துவ ஆண்நிலை உற்பத்தி உறவுகளின் தவிர்க்க முடியாத உள்ளடக்கம். அரசியல் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள ஆண் - பெண் சமத்துவ சட்டவாக்கங்கள் குடும்பம் என்ற தனிப்பட்ட அமைப்பினுள்ளே நுழைய முடியாமல் இருப்பதையும் காண முடிகின்றது. சட்டங்கள் சிலவற்றுக்கு விநோதமான வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றன. நேர்மையின் ஆட்சி (Rule of Right) என்பதற்குப் பதிலாக அதிகாரம் கொண்டோரின் ஆட்சி (Rule of Might) முனைப்புப் பெறுகின்றது.

இன்றைய நிலையில் கல்விக்கும் பெண்கள் அனுபவிக்கும் தொழில் வாய்ப்புக்களுக்கும் இடையே நெருக்கடிகள் எழத் தொடங்கியுள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளில் செயற்பட்டு வரும் புடவை, எலத்திரனியல் தொழிற்சாலைகளில் ஏற்பட்டுவரும் வேலையின்மைக் கோலங்களினால் ஆண்களிலும் பெண்களே கூடுதலான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். புதிய சர்வதேச தொழிற் பிரிவு (New International Division of Labour) பெண்களுக்குப் பாதகமாகவே அமைகின்றது. வளர்முக நாடுகளில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் சுதந்திர உற்பத்தி வலயங்கள், உலகச் சந்தைத் தொழிற்சாலைகள் முதலியவற்றில் படித்த பெண்கள் குறைந்த சம்பளக் கோலங்களுக்குள்ளே கொண்டுவரப்பட்டுள்ளனர். பெண்கள் பொருள் உற்பத்தியாளர்களாகச் செயற்பட்டு வரும் நிலையிலும் அவர்கள் "தங்கியிருப்போர்" என்றே தொடர்ந்தும் வரையறை செய்யப்பட்டு வருகின்றனர். ஆசிய ஆபிரிக்க நாடுகளிலே புதிதாக வளர்ச்சியுற்று வரும் சுற்றுலாக் கைத்தொழில் துறையில் பெண்கள் மூர்க்கத்தனமான சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். "பெண்கள் ஒரு புதிய சர்வதேச மூலதனம்" என்ற விநோதமான கண்டுபிடிப்பு செயற்படத் தொடங்கியுள்ளது. வளர்ச்சி அடைந்த நாடுகளின் சந்தைகளில் ஏற்பட்டுள்ள பொருள்களின் மீள் பெருக்கத்துக்கு மூன்றாம் உலக நாட்டுப் பெண்களின் உழைப்புச் சுரண்டலால் நிகழ்த்தப்பட்ட உற்பத்திப் பெருக்கமே அடிப்படையாக அமைகின்றது.

மேற்கூறியவற்றின் பின்புலத்தில் பெண்ணியக் கல்வி உள்ளடக்கம் பின்வரும் துறைகளிலே கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1. ஆண் - பெண் என்றவாறு சுரண்டலை நிலைக்களனாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட தொழிற் பிரிவுகளை நிராகரித்தலும் ஒழித்தலும்.

2. மனிதர், இயற்கை, வர்க்கங்கள் என்ற எவ்வகை நிலையிலும் காணப்படும் சுரண்டல் வடிவங்களை ஒழித்தல்.

3. சுரண்டல் அற்ற, அடுக்கமைப்புக்கள் என்ற வகையிலே மேலோங்கல் அற்ற உறவுகளை வளர்த்தல்.

4. முடிவில்லாத பொருளுற்பத்தியிலும் செல்வக் குவிப்பிலும் மனித உழைப்பை ஈடுபடுத்தும் இலக்குகளைக் கைவிட்டு, மனித வாழ்க்கைக்குப் போதுமான அளவு உற்பத்தியை மேற்கொள்ளும் பொழுது சுரண்டற் கோலங்களை வீழ்த்த முடியும்.

5. பெண்களுடைய வாழ்வுக்கும் உடலுக்குமான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் ஆழ்ந்த அறிவூட்டலைக் கல்வி வாயிலாக முன்னெடுத்தல்.

6. உலகின் ஒரு பிரிவினரது அவலத்தில் இன்னொரு பிரிவினர் சுதந்திரத்தை அனுபவித்தல் ஏற்புடையது அல்ல என்ற தெளிவை வளப்படுத்துதல்.

7. ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஓர் அணியில் திரட்டும் அதே வேளை ஒரு பிரச்சினையைத் தள்ளிவைத்தலும் இன்னொன்றை முதன்மைப்படுத்தலும் பொருத்தமற்றது. உதாரணமாக வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்திப் பெண்கள் ஒடுக்கு முறையைப் பின்தள்ள முடியாது.

8. உலகச் சந்தை நிலவரங்களோடும் தீவிர இலாபமீட்டல் பொருளாதார நடவடிக்கைகளோடும் பெண்களின் நடப்பியல் உரிமைகளும், சுதந்திரமும் இணைந்துள்ளது என்பதை நிராகரிக்க முடியாது.

மனித நீதிக்கான போராட்டத்தின் ஒன்றிணைந்த பரிமாணமாகப் பெண்ணியம் அமைந்துள்ளது. ஆயினும் பெண்ணியப் போரா்ட்டம் தொடர்பான எண்ணக்கருத் தெளிவின்மையும், குழப்பநிலைகளும், திசைமாற்றும் கருத்துக்களும் நிலவும் வேளையில் கல்விச் செயற்பாடுகள் புதிய நீதியைத் தெளிவுடன் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

# ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - வளர்வுறும் நாடுகளுக்கான கல்வி முன்னுரிமைகள்

ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) மனிதவள மேம்பாட்டுக்கான (HRD) ஐந்து விசைகளைக் குறிப்பிட்டுள்ளது. அவையாவன -

1. கல்வி.
2. உடல் நலமும் உணவு ஊட்டமும்.
3. சூழற்காப்பு.
4. தொழில் வாய்ப்புகள்.
5. அரசியல் - பொருண்மிய விடுதலை.

மேற்கூறிய ஐந்தும் ஒன்றுடன் மற்றையது இடையுறவு கொண்டு இணைந்திருந்தாலும் அனைத்துக்கும் அடிநிலையான தளத்தை அமைப்பதில் கல்வி சிறப்பார்ந்த இடத்தை வகிக்கின்றது.

வளர்முக நாடுகள் கடந்த மூன்று பதின்மங்களின் கல்வி வாயிலான மேம்பாடுகளை வருவிப்பதில் முனைப்பு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன. ஆயினும் கல்வி முதலீட்டுகளுக்கான வினைத்திறன் மிக்க விளைவுகள் பெறப்பட்டனவா என்பது கேள்விக்குறியாகி நிற்கின்றது. கடந்த மூன்று பதின்மங்களின் எண்ணளவிலான பல முன்னேற்றங்களை வளர்முக நாடுகள் உருவாக்கி வந்துள்ளன. எழுத்தறிவுப் பெருக்கம், பள்ளிக்கூட மாணவர் வரவின் முன்னேற்றம், கல்விக்கான முதலீடுகளின் முன்னேற்றம், முறைசாராக் கல்வித் திட்டங்களின் விரிவாக்கம் கிராமப்புறப் பள்ளிக்கூடங்களின் அதிகரிப்பு, பல்கலைக்கழகக் கல்வி விரிவாக்கம் முதலிய பல எண்ணளவு மேம்பாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. அவற்றுடன் இணைந்த கல்விக்கான சமூகக் கேள்வி முன்னேற்றமடைந்து வந்துள்ளது.

இவற்றின் பின்புலத்திலே கல்விக்குரிய செலவுகளின் அமைப்பு தொடர்ச்சியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கல்வி

விரிவாக்கத்தோடு இணைந்த பின்வரும் நெருக்கடிகள் வளர்வுறும் உலக நாடுகளில் எழலாயின.

1. வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிடும்பொழுது கல்வித் தரம் பின்தங்கிய நிலை.

2. வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கல்விக்குரிய செலவுகள் கூடுதலான இடத்தைப் பெறும்பொழுது, ஏனைய நேரடி உற்பத்திக்கான முதலீடுகள் பாதிக்கப்படுதல்.

3. மாறிவரும் சமூகப் பொருளாதார இயல்புகளுக்கு ஏற்ற பொருத்தப்பாட்டினைக் கலைத்திட்டம் கொள்ளாமை.

4. கல்வி பெற்ற மனித வலுவின் கேள்விக்கும், நிரம்பலுக்கும் இடையே சமநிலைத் தளம்பல்கள் நிலவுதல்.

5. படித்தவர்களின் எதிர்பார்ப்புக்கும் வேலை வாய்ப்புக்கும் இடையே இசைவின்மை காணப்படல்.

பொருண்மிய மேம்பாடு, மனித மேம்பாடு என்பவற்றை முன்னெடுக்கும் பொழுது கல்வி மீதான கவனம் மேலும் சிறப்படைகின்றது. கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பதும், மனிதப் பரிமாணங்களை வளர்க்கும் என்பதும் முன்னரிலும் கூடுதலாக உணரப்படுகின்றது. திறன்மிக்க மனிதவள ஆக்கத்தில் கல்வியே கருவியாகி நிற்கின்றது. ஆக்கத்திறன் மேம்பாடு, பொருண்மியப் பங்குபற்றல், அபிவிருத்தி, பண்பாடு முன்னெடுப்பு என்ற அனைத்திலும் கல்வி பங்கேற்பதனால் அதன் மனித விருத்திப் பரிமாணங்கள் மேலும் தீவிரமாக உணரப்படுகின்றன.

தனியாள் உரிமைகளை வலியுறுத்துவதிலும், பிறரது உரிமைகளை மதிப்பிலும் கல்வி முன்நிபந்தனையாக அமைகின்றது. உடல் நலம், உணவு, ஊட்டம், நோய்த்தடுப்பு, முறைமை, வாழ்க்கை எதிர்பார்ப்பு உயர்ச்சி என்ற அனைத்தும் கல்வியுடன் நேரடியாகத் தொடர்புடையன.

கல்வியானது பொருளாதார உற்பத்தியிலும், விளைவிலும் நேரடியான செல்வாக்கு ஏற்படுத்துதலை ஆய்வுகள் தெளிவு படுத்துகின்றன. பல வளர் முக நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்ட நான்கு ஆண்டு ஆரம்பக் கல்வி பொருளாதார உற்பத்தியில் 8.7 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இதற்குக் கல்வியுடன் தொழில் நுட்பக் காரணிகளும் துணை செய்ததாயினும், புதிய தொழில் நுட்ப அறிமுகத்துக்குக் கல்வியே கட்டளைக் கல்லாக அமைகின்றது. இந்நிலையில் கல்வி தொடர்பான முன்னுரிமைகளை (Priorities) மேலும் தெளிவாக வரையறுக்க வேண்டியுள்ளது. முன்னுரிமைகளை மூன்று பண்புக் கூறுகளின் அடிப்படையில் அணுக வேண்டியுள்ளது. அவையாவன -

1. ஆரம்பம், இடைநிலை, உயர்நிலை என்ற கல்வித் தொகுதிகளில் மாணவரின் எண்ணிக்கை அமைவை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மட்டம்.

2. தேறிய தேசிய வருமான அடிப்படையில் தனி நபருக்குரிய வருமான மட்டம்.

3. நாட்டின் புவியியற் பருமன்.

மேற்கூறிய அடிப்படைகளுடன் பின்வரும் தேவைகளையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

1. சமத்துவப் பண்புகள் மீது முன்னரிலும் கூடிய கவனம் செலுத்தல்.

2. கற்பித்தல் பண்புகளை மேலும் மேம்படுத்த முன்னரிலும் கூடிய வளங்களை எல்லா மட்டங்களிலும் ஒதுக்குதல்.

3. கல்வித் தொகுதிக்கு அனுசரனையான முகாமைத்துவம், நிர்வாகம், கற்பித்தலியல் இயல்புகளை மேலும் விருத்தி செய்தல்.

கல்வி முன்னுரிமைகளை அமைக்கும் பொழுது அவற்றை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுப்பதற்குரிய சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். முன்னுரிமைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளை குறுங்காலம், நெடுங்காலம் என்ற அடிப்படைகளில் விரிவாக ஆராய்தல் வேண்டும். சமத்துவத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முறைசார் கல்வி, முறைசாராக் கல்வி, கல்வி என்ற மூன்று மட்டங்களிலும் முன்னெடுக்கப்படல் பொருத்தமானது. அரசியல், பொருண்மியக் காரணிகள், அறக்காரணிகள், கல்விக் காரணிகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அகல்விரிப் பண்புகளுடன் கல்வித் திட்டங்களைச் செயற்படுத்தலே ஏற்புடையது. பிரிந்து துண்டுபட்ட நிலையில் (Piece Meal) கல்வித் திட்டங்களைச் செயற்படுத்துதல் ஒன்றிணைந்த முன்னேற்றத்தைத் தரமாட்டாது.

முன்னுரிமைகளைச் செயற்படுத்துவதற்கான கூர்வினையங்கள் (Strategies) பற்றி அடுத்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. பன்முகப்பட்ட கூர் முனையங்கள் பற்றிக் குறிப்பிடும்பொழுது, மிகுந்த வனத்துடன் திட்டமிடல், தகவல் வழங்கல், போதுமான பரிசோதனைகளை ஒவ்வொரு மட்டங்களிலும் மேற்கொள்ளல், ஒவ்வொரு துணைப் பிரிவுகள் மீதும் கவனம் செலுத்துதல், மதிப்பீடு செய்தல், ஒவ்வொரு கட்டங்களையும் நெறிகைச் செய்தல் முதலியவை சிறப்பிடம் பெறும். திட்டங்களைச் செயற்படுத்தல் பற்றிய காலக்காரணி (Time Factor) மீதும் கவனம் செலுத்த வேண்டும். அடுத்ததாகக் கல்விச் செயற்றொகுதியை பேரண்ட நிலையிலும் (Macro Level) துணைத்துறைகளிலும், நுண்பாக நிலையிலும் (Micro Level) ஒன்றிணைப்புச் செய்தல் வேண்டும்.

வளங்களுடன் கல்வியின் கூர்வினையங்களை இணைத்தலுடன் கல்விசாராக் காரணிகள் மீதும் போதியகவனம் செலுத்துதல் சாலச்சிறந்தது.

கல்விக்குரிய சமூகக் காரணிகள் மீதும் தொடர்ச்சியான செல்வாக்கை நிலைநாட்டுதலே சிறந்தது. கல்வித் தொகுதியானது திறந்த தொகுதி (Open System) தெரிவுத் தொகுதி (Selective System) என்ற துருவங்களைக் கொண்டது. தெரிவுத்தொகுதி பணிப்புநிலையான கற்பித்தல் பண்புகளைக் கொண்டது. ஆசிரிய மாணவ தொடர்புகள் நன்கு வரையறுக்கப் பட்டது, முறைசார்ந்த பண்புகளைக் கொண்டது. மீளக்கற்கும் விழுக்காடு கூடுதலானது. இலகுவாக முகாமை செய்யப்படத்தக்கது, கல்விக்குரிய சமூகக் கேள்வியை இது நிராகரித்து நிற்கும். கல்வித்தரமானது மேல்மட்டத்துக்குரிய தேவைகளினால் தீர்மானிக்கப்படும்.

திறந்த தொகுதியானது கூடிய பங்குபற்றலை உள்ளடக்கியது. ஆசிரிய மாணவ தொடர்புகள் நட்பு நிலைப்பட்டதாக இருக்கும். மீளக் கற்கும் விழுக்காடு மிகவும் குறைந்தது. கல்வி மேல்மட்டங்களை அணுகுதல் மிகவும் இலகுவானது. இதனை முகாமை செய்ய அதிக நிதிவளம் வேண்டும். தெரிவுத் தொகுதியில் இருந்து திறந்தத் தொகுதியை நோக்கிய அசைவ ஒழுங்கமைத்தலும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. கல்வியின் கூர்வினையத்தின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு பரீட்சைகளை ஒழுங்கமைத்தலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

கல்வியை வழங்குவோர் மீதும் நுகர்வோர் மீதும் செல்வாக்குச் செலுத்துதல் கூர்வினையத்திலே உள்ளடங்கும் முக்கிய நோக்கமாகும்.

ஆசிரியவள விருத்தியும், கல்வித் தொழில் நுட்பவிருத்தியும் வளர்முக நாடுகளில் கூடுதலாக கவன ஈர்ப்புக்கு இன்று உள்ளாகின்றன. மனிதவள மேம்பாட்டுக்கான திட்டங்களை முன் மொழிந்து உலக நாடுகளின் உதவியை நிதியாக, பொருள்களாக, தொழில் நுட்ப அமைப்புக்களாகப் பெற்றுக் கொள்ளலும் ஐநா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

# யுனெஸ்கோ - அனைத்துலகப் புரிந்துணர்வுக்கான கல்வி

மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றின் வழியாகப் பல்வேறு நாடுகளில் பல்வேறு மட்டங்களில், அனைத்துலகப் புரிந்துணர்வுக்கான கல்வியை யுனெஸ்கோ முன்னெடுத்து வந்துள்ளது. இனக் குழுமங்கள் என்ற அமைப்பு, தேசியம் என்ற அமைப்பு - அனைத்துலகம் என்ற அமைப்பு என்பவற்றுக்கிடையே முரண்பாடுகளை வலுப்படுத்தாது வளமூட்டும் பொதுப் பண்புகளை முன்னெடுப்பதற்குக் கல்விச் செயல்முறைகளைப் பயன்படுத்துதல் யுனெஸ்கோவின் நீண்ட நெடும் நோக்காக மலர்ச்சி கொண்டுள்ளது. மனிதப் புரிந்துணர்வானது குழுக்களில் இருந்து நாடு என்ற அமைப்புக்கும், அதிலிருந்து அனைத்துலகத்துக்கும் வற்றாத அருவி போன்று ஊற்றெடுத்து வரவேண்டும் என்பது யுனெஸ்கோவைச் சேர்ந்த ரெறன்ஸ் லோசன் என்பவரின் முன்மொழிவு.

இந்த அருவிப் பாய்ச்சலை எவ்வாறு முன்னெடுப்பது? தனிநபர்கள், சமூகக் குழுக்கள், நாடுகள் என்பவை வேறுபட்ட வளர்ச்சி மட்டங்களை, மனப்பாங்குக் கோலங்களைக் கொண்டுள்ளன. அவற்றுக்குரிய சமூகக் கட்டமைப்புக்களும் கருத்தியற் கோலங்களும் துருவப்பட்டு நிற்கின்றன. வசதிமிக்கோர் (The Haves) வசதி அற்றோரைத் (The Have Nots) தொடர்ந்து சுரண்டிவரும் பின்புலத்தின் இந்த வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் கல்விச் செயல் முறையினால் எவ்வாறு மாற்றியமைக்கமுடியும் என்பது பெரும் வினாவாக எழுந்துள்ளது. கல்வி என்பது சமூகத்தினால், சமூகக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் செயல் முறையை முன்னெடுக்கும் வேளையில் மனித மனங்களில் ஊறியுள்ள எதிர்மறை எண்ணங்களை மாற்றுவதற்கும் கருவியாகின்றது.

உலக நாடுகளிடையே பொருளாதார நிலைப்பட்ட ஏற்றத்தாழ்வுகள், தொழில்நுட்ப நிலைப்பட்ட சமமின்மை என்பவை மட்டுமல்ல உள்ளார்ந்த நிலைப்பட்ட பல்வேறு முரண்பாடுகளும் காணப்படுகின்றன. மனிதரை மனிதர் புரிந்து கொள்ள முடியாத வார்ப்பு எண்ணங்கள், இறுகிய உளப்பாங்குகள், சுரண்டல் மனோபாவங்கள் முதலியவை அனைத்துலகப் புரிந்துணர்வைத் தாக்குகின்றன.

எழுத்தறிவின்மை, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தொடர்ச்சியான அவலங்கள், ஊட்ட உணவுப் பற்றாக்குறைவு, முதலியவை உலக நாடுகளிடையே அவ நம்பிக்கையை ஏற்படுத்தி வருகின்றன. மனித அடிப்படைத் தேவைகளுக்கு நிதிபெற முடியாத அவலம் ஒருபுறம் நிகழ, மனிதரைப் பூண்டோடு அழிக்கும் ஆயுதங்களின் உற்பத்தியும் நுகர்ச்சியும் தொடர்ச்சியாக அதிகரித்து வருதல் அனைத்துலகப் புரிந்துணர்வுக்கு அறைகூவலாகின்றது. எதிர்மறையான இந்தப் போக்குகளுக்கு எதிரான கருத்துப்பலத்தைத் திரட்டக் கல்வியைப் பொறுப்பாக்க வேண்டியுள்ளது.

இரண்டுவிதமான விசைகள் இன்றைய உலகிலே தொழிற்படத் தொடங்கியுள்ளன. ஒருபுறம் தனிமனித இச்சைகள் நிரம்பிய விசை, மனித இயல்புகளைத் தாக்கத் தொடங்கியுள்ளது. மறுபுறம் மகிழ்ச்சியற்ற சூழலை உருவாக்கும் தொடர்பு சாதனங்கள் கைத்தொழிற் சமூகம், பொருளாதார வர்த்தக நிறுவனங்கள் முதலியவை தோற்றுவிக்கும் விசைகள் மனிதரிலே தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. எத்தகைய எதிர்மறைச் சூழலிலும் அடிப்படை மனித உணர்வுகள் கிறுங்காமல் நிலைத்து நிற்கும் என்றும், அவை பலப்படுத்திப் பெருப்பித்து மீள்வலுவூட்டப்பட வேண்டும் என்றும் கூறப்படும் பொழுது, அந்தச் செயல்முறைக்குரிய பொறுப்பைக் கல்வி ஏற்க வேண்டியுள்ளது.

பலம்மிக்க இருவிசைகளாகிய முதலாளித்துவம், சமதர்மம் எத்தகைய ஒரு கட்டமைப்பின் கீழ் இணைந்து செல்ல முடியும் என்ற வினாவைப் புதியமானுடக் கோட்பாட்டாளர் ஆவலுடன் எழுப்புதல் உண்டு. நிலைப்பு இணக்கம் (Co-Existence) என்பது ஒரு நீண்டகாலச் செயல் முறை மனித இடைவினைகள், கோட்பாட்டு இடைவினைகள் என்ற நீண்ட செயல் முறைகளின் வழியாக அது கட்டியெழுப்பப்படல் வேண்டும். சுயபரிசீலனை, முற்றுப்பெறாத தீர்மானங்கள், பிறரது உரிமைகளை ஏனோ தானோ என்று எண்ணும் உளப்பாங்கு முதலியவற்றிலே நிலைமாற்றங்களை ஏற்படுத்துவதன் வாயிலாக நிலைப்பு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. "பன்முகப் பாங்கைப் பாதுகாப்பதற்கான உலகை உருவாக்கும் பணி" என்று இதனை யுதான்ற் (Uthant) ஐக்கிய நாடுகள் அவையிலே தெளிவாக முன்வைத்தார்.

நிலைப்பு இணக்கம் என்பது சகிப்புத் தன்மையுடன் இணைந்தது. இது நெகிழ்ச்சி கொண்டது, நம்பிக்கைத் தரும் நோக்குடையது. துருவப்படாது நிற்பது, தனிமனித இச்சைகளிலும் உலகப் பொதுமானுட உணர்வுகளை மேலானதாகக் கொள்ளும் இயல்புடன் சகிப்புத் தன்மை நிலைத்து வாழ்வது. இந்நிலையில் சகிப்புத் தன்மையானது மேலும் ஒருபடி முன்னேறி செயலாக்கம் மிக்க சகிப்புத்தன்மையாக (Active Tolarance) வளம் பெறும். மேலும் அறியாமை, அடாத்து, கொடும் பசி, நெடும் பணி என்பவற்றுக் கெதிரான

ஒன்றிணைந்த போராட்டத்தில் மனிதர்கள் ஐக்கியப்படும் பொழுது "மனிதம்" என்ற பரந்த உணர்வும், அனைத்துலகப் புரிந்துணர்வும் முகிழ்த்தெழும் அதன் அடிப்படையில் ஒரு புதிய மானுடக் கோட்பாடு கட்டியெழுப்பப்படும். யுனெஸ்கோவின் நோக்கம் பன்முகப் பாங்குகளைக் கொண்ட உலகை ஒன்றிணைப்பதேயன்றி, பன்முகப்பாங்குகளைச் சிதைத்து ஐக்கியப்படுத்துவது அன்று (A United, Not a Uniform World).

பல மொழிகள், பன்முகப் பண்பாடுகள், இனத்துவக் கோலங்கள், நாட்டு வேறுபாடுகள் முதலியவற்றை அங்கீகரிக்கப் பழகுதலும், மதிக்கும் மனப்பக்குவத்தை வளர்த்தலும், கல்வியின் வாயிலாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. அனைத்துலகப் புரிந்துணர்வுக்கும் கூட்டுறவுக்கும் எதிரான விசைகளும் தடைகளும் பகுத்தறிவுடன் கண்டறியப்படல் வேண்டும். மானுடப் பொதுப் பிரச்சினைகளை இனங்காணுதலும், அவற்றுக்கான விசை கொண்ட தீர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தலும், முடுக்கிவிடப்படல் வேண்டும். மனிதரில் மனிதர் தங்கியிருக்கும் கோலங்களையும், நாடுகள் மீது நாடுகள் தங்கியிருக்கும் தவிர்க்க முடியாத இருப்பு நிலைகளையும், கல்வி வாயிலாகத் தெளிவுபடுத்துதல் உடனடித் தேவையாகவுள்ளது. ஒரு சிலரால் மட்டுமன்றி மனிதகுலம் முழுவதாலும் இந்தப் புதிய மானுட உணர்வு மகிழ்ச்சியான அனுபவமாக்கப்பட வேண்டியுள்ளது.

மனிதரிடையே நிலவும் நம்பிக்கையற்ற ஐயுறவு, குழுக்களிடையே, இனக்குழுமங்களுக்கிடையே, நாடுகளுக்கிடையே நிலவும் நம்பிக்கைப் பிறழ்வுகளும் சந்தேகங்களும் கொடிய யுத்தங்களாகவும், வெளிப்படாத தண்போர்களாகவும், மனித குலத்தைச் சின்னாபின்னப் படுத்துதல் தொடர்ந்து செல்ல வேண்டுமா என்ற வினாவை யுனெஸ்கோ முன்வைக்கும் புதிய மானுடக் கோட்பாடு (New Humanism) தொடர்ந்து எழுப்பிய வண்ணமுள்ளது.

அனைத்துலகப் புரிந்துணர்வுக்கான கல்வியை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பல செயலமர்வுகளின் பொழுதும் விரிவாக ஆராயப்பட்டு வந்துள்ளது. இதனை ஒரு தனிப்பாடமாகக் கலைத்திட்டத்தில் அமைக்கும் பொழுது, அதற்குரிய பாட நூல்கள், பரீட்சைகள் என்பவை இணைக்கப்படும் பொழுது, அது வெறும் பொறி முறையான மனப்பாடம் செய்தலையும், ஒப்புவித்தலையும் ஊக்குவித்து விடுமென்றும் உணர்வு மூலமான பலாபலன்கள் கிடைக்காது விடுபடலாம் என்ற திறனாய்வும் முன் வைக்கப்படுகின்றன. மறுபுறம் வளர்வுறும் நாடுகளில் உள்ள மக்கள் வறுமையிலும் அறியாமையிலும் தவிக்கின்றார்கள் என்றும் தம்மிலும் தரக்குறைவானவர்கள் என்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் பள்ளிக்கூட மாணவர்கள் என்னும் உளக் கோலங்களும் தோன்றலாம். அந்நிலையில் தவறான புலக்காட்சிகள் தோன்றிவிடும்.

கலைத்திட்டத்திலுள்ள வரலாற்றுப் பாடத்தின் வழியாக அனைத்துலகப் புரிந்துணர்வுக்கான கல்வியை முன்னெடுக்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல், வளர்முக நாடுகள் சுரண்டலுக்கு உள்ளானமை, வரலாற்றுத் தொடர்ச்சியில் மனிதகுலம் அனுபவித்த வெற்றிகள் தோல்விகள், உலக வரலாற்றில் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு பண்பாடும், ஒவ்வோர் இனங்களும் தந்த பங்களிப்பு என்பவை புறநிலைச் சார்புடன் கற்பிக்கப்படும் பொழுது அனைத்துலகப் புரிந்துணர்வு மாணவர் உள்ளத்திலே வளம்பெறும்.

வரலாற்றுப் பாடத்தைப் போன்று புவியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல் போன்ற பாடத்துறைகளும் புரிந்துணர்வை வளர்ப்பதற்கு பலவழிகளிலே துணைசெய்யும். அவ்வாறு கற்பிக்கும் பொழுது பின்வருவனவற்றை ஒன்றிணைத்தல் பொருத்தமானது.

1. உலகப் பண்பாட்டு வேறுபாடுகள், தேசிய வேறுபாடுகள் என்பவற்றுக்கு மதிப்பும் அங்கீகாரமும் தருதல்.

2. ஐ.நா. அமையம் அதன் சிறப்பு முகவர்கள் என்பவற்றின் பணிகளை விரிவாக அறிதல்.

3. முரண்பாடுகளையும் மோதல்களையும் தோற்றுவிக்கும் சமூக பொருளாதாரக் காரணங்களைப் பகுத்தறிவுடன் ஆராய்தல்.

4. மனிதர்களிடையே கூட்டுறவின் பலத்தை உணரச் செய்தல்.

5. செயலூக்கமுள்ள சகிப்புத்தன்மையை நடைமுறைப்படுத்துதல்.

6. திட்டவட்டமான இலக்குகளை நோக்கிய கூட்டான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

7. நல்ல உளப்பாங்குகளைப் பள்ளிக்கூடத்தில் மீள வலியுறுத்துல்.

பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வேளியேயும் அனைத்துலகப் புரிந்துணர்வை வளர்ப்பதற்கு இசை, நடனம், கலைகள், விளையாட்டுக்கள் முதலியவை பயனுள்ள வகையிலே ஒன்றிணைக்கப்படலாம்.

அ. மனித உணர்வுகளின் ஒருமைப்பாடு.

ஆ. உலகம் ஒரு குடும்பம் என்ற உணர்வு.

இ. உலக மக்கள் அனைவருக்கும் ஒரே வகை உரிமைகள் உண்டு என்பது.

ஈ. மனித உரிமைகள் எல்லா மக்களாலும் அங்கீகரிக்கப் படாதிருக்கும் அவலம்.

உ. ஒவ்வொரு யுத்தங்களிலும் மனித அடிப்படை உரிமைகள் மீறி உடைக்கப்படுகின்றன என்ற நடப்பியல்.

என்றவாறான உணர்வுகளை ஊட்டுவதற்கும், மனித அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் உரிய பொது

வேலைத்திட்டங்களில் ஒன்றிணைவதற்கும் மேற்கூறிய பாடங்களும் அவற்றை அடியொற்றிய செயற்திட்டங்களும் துணைநிற்கும்.

அனைத்துலகப் புரிந்துணர்வை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய தொழில் நுட்பச் சாதனங்கள், தொடர்புச் சாதனங்கள் என்பவை பற்றிய விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அறியாமை மீது போர் தொடுப்பதற்கும், வார்ப்பு நிலைப்பட்ட தவறான எண்ணங்களை அறிவினால் தாக்குவதற்கும், சமநிலையான நேர்மியங்களைக் கண்டறிவதற்கும், திறனாய்வுப்புலத்தை மேம்படுத்துவதற்கும், மனிதாபிமானம் மிக்க பொறுப்புணர்ச்சியை வளர்ப்பதற்கும், தொடர்புச் சாதனங்களையும், தொழில் நுட்பச் சாதனங்களையும் வளமுடன் ஆசிரியர் பயன்படுத்தலாம்.

விழுமியங்கள் தொடர்பாக மேலைத்தேயக் கருத்துவங்களுக்கும், கீழைத்தேயக் கருத்துவங்களுக்கும் இடையே பல்வேறு ஒப்புமைகள் காணப்படுகின்றன.

யுனெஸ்கோவின் பல்வேறு செயலமர்வுகளில் அவை நன்கு இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை மாணவர்களிடத்து முன்னெடுத்துச் செல்லலும் ஆசிரியரின் செயற் பணியாகின்றது.

ஒப்பியல் சமயம், ஒப்பியல் மொழி என்ற அனுபவங்கள் வாயிலாகவும் ஆசிரியர் மனிதநேயத்தையும், புரிந்துணர்வையும் வளப்படுத்தலாம். பிற சமயங்களை அறிதல் மொழிகளை அறிதல், பண்பாடுகளை அறிதல், நாடுகளை அறிதல், என்பவற்றின் வழியாக மேற் கொள்ளப்படும் ஒன்றிணைந்த நடவடிக்கைகள் மாணவரிடத்து புதிய புலக்காட்சிகளை ஏற்படுத்துதல் வேண்டும். இருபத்து ஓராம் நூற்றாண்டின் மனித வாழ்விலும், வளத்திலும் இந்தப் புதிய உளப்பாங்கு நம்பிக்கையைத் தருதல் வேண்டும்.

## ஜோன் பேர்குசன் - வான் பல்கலைக்கழகம்:

அமெரிக்க வானொலிச் சஞ்சிகையில் 1922 ஆம் ஆண்டில் வெளிவந்த பின்வரும் வரிகள் வான் பல்கலைக்கழக இயல்பினை நன்கு வெளிப்படுத்தின. "மக்களை மத்தியாகக் கொண்ட வான் பல்கலைக்கழகம், இன்றுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் எண்ணிக்கையிலும் கூடுதலான மாணவர்க்கு ஒரே நேரத்தில் கல்வி வழங்கும் அமைப்பைக் கொண்டிருக்கும்." முன்னர் ஒரு சிலருக்கே உயர் கல்வியை வழங்கிய "தந்தக் கோபுரங்களாக" விளங்கிய பல்கலைக்கழகங்கள் இன்று வானொலி, தொலைக்காட்சி என்ற வான் தொடர்பியற் சாதனங்களைப் பயன்படுத்தி அதிகமானோர்க்கு கல்வி வழங்கும் "திறந்த பல்கலைக் கழகங்கள்" என்ற அமைப்பியலைப் பெற்று வளர்கின்றன. இந்த எண்ணக்கருவை வெடிமேயர் (Wedemeyer) கோம் பேர்க் (Holmberg) மூர் (Moore) கீகன் (Keegan) போன்ற பல கல்வியியலாளர் தெளிவு பெற விளக்கியுள்ளனர். "சாதாரண மக்கள் புதிய காலகட்டத்தின் சிறப்பார்ந்த அறிவை பெற்றுக் கொள்ளும் தேவை யப்பானிய வான் பல்கலைக் கழகத்தினால் இன்று நிறைவு செய்யப்படுகின்றது" என்பது யோஷியா ஏபி என்பவரின் கருத்து.

உயர் கல்வியில் இன்றும் நிலவிவரும் மீத்தெரிவு முறையானது பல்கலைக்கழகக் கல்வியைப் பரந்த அளவிலே வழங்குவதற்குத் தடையாக இருக்கும் நிலையில் திறந்த பல்கலைக் கழகம், வான் பல்கலைக் கழகம் என்ற அமைப்புகள் பாரம்பரியமான அணுகுமுறைகளுக்கு மாற்று வடிவங்களாக எழுந்துள்ளன.

1963 ஆம் ஆண்டில் பிரித்தானிய தொழிற் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற கொறல்ட் வில்சன் வான் பல்கலைக்கழகம் (University of the Air) என்ற அமைப்பை 1964ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் முன்வைத்தார். 1966 ஆம் ஆண்டில் வான் பல்கலைக்கழகம் தொடர்பான வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. நீண்ட விவாதங்களுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் பின்னர் பி.பி.சியின் துணையுடன் திறந்த பல்கலைக் கழக அமைப்பு உருவானது. இதே காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலண்ட், ஜேர்மனி, போலாந்து, ரூசியா போன்ற நாடுகளிலும், ஒலி, ஒளிபரப்பு சாதனங்கள் வாயிலாக உயர்

கல்வியை வழங்கும் நடவடிக்கைகள் விரிவடைந்தன. இலங்கையும் இந்த அமைப்பியலைத் தன்மயமாக்கிக் கொண்டது.

திறந்த பல்கலைக்கழகம், வான் பல்கலைக்கழகம் ஆகியவை பின்வரும் மூன்று பிரதான பண்புகளைக் கொண்டிருக்கும்

1. மக்களையும் இடங்களையும் நோக்கி வந்து இப்பல்கலைக் கழகம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இது "இடம்சார் திறந்த நிலை" என்று குறிப்பிடப்படும்.

2. கற்பிக்கும் முறையியல்களைப் பொறுத்தமட்டிலும் நெகிழ்ச்சி மிக்க வினைத்திறன் அணுகுமுறைகள் கையாளப்படும். இது "முறையியல் சார் திறந்த நிலை" என்று குறிப்பிடப்படும்.

3. எண்ணங்கள் கருத்து நிலைகள் அல்லது கருத்துவங்கள் (Ideas) என்பதிலும் திறந்த நிலை காணப்படும். இது "கருத்துவம் சார் திறந்த நிலை" என்று கூறப்படும்.

பாரம்பரியமான பல்கலைக்கழகங்கள் எங்கு தமது பணிகளை நிறுத்துகின்றதோ அங்கிருந்து இப்பல்கலைக்கழகம் தனது பணிகளை ஆரம்பிக்கின்றது என்ற பொதுவான கருத்தும் நிலவுகின்றது. பல்வேறு காரணங்களினால் உயர் கல்வி புறக்கணிக்கப்பட்ட பல இலட்சக்கணக் கானோர் வான் பல்கலைக் கழகத்தின் வழியாக உயர் கல்விக்குள் நுழைகின்றனர். தொழில் புரிவோர் இப்பல்கலைக் கழகங்களிலேயே கற்று, தொழில் நிறுவனங்கள் உள்ளே மேல் நோக்கிய நிலைக்கு வந்து முன்னேற்றங்களை அனுபவிக்கின்றனர்.

வான் பல்கலைக்கழகம் "காலத்தின் வெளிப்பாடு (An Expression of the Age) எனப்படும். சமகாலத்தின், விஞ்ஞான மேம்பாடு, தொழில் நுட்பம் மேம்பாடு, சமூக மேம்பாடு ஆகிய மூன்று முனைகளையும் இணைத்து அது வளர்ச்சி பெறுகின்றது. இவ்வாறான கல்வி முறைமையில் ஆசிரியரும் மாணவரும் பௌதிக நிலையில் பெருமளவிலே பிரித்து வைக்கப்படு கின்றனர். அதாவது நேருக்குநேர் முகம் பார்த்துக் கற்றலும் கற்பித்தலும் உயிர்ப்புநிலையில் பெருமளவில் இடம் பெறுவதில்லை. கற்பித்தலில், வானொலி, தொலைக்காட்சி, அஞ்சல் வாயிலான பன்முகப் பயன்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பாடத்துக்கும் மாணவர்க்கும் இடையே ஆசிரியர் நிற்பது தவிர்க்கப்பட்டு, பாடமும் மாணவரும் நேரடியாக ஒன்றிணைக் கப்படுகின்றனர். ஆனாலும் இந்த ஒன்றிணைப்பு ஆசிரியரால் நேரடியாகத் திட்டமிடப்படுகின்றது. கண் வழியான காட்சிகள் தவிர்க்கப்பட்டு கேட்டல் வாயிலான ஒருங்கிணைப்பு வேண்டப்படும் பொழுது தொலைக்காட்சியிலும், வானொலியே பலம் மிக்க சாதனமாக அமைகின்றது.

கணித விரிவுரைகளில் அருவமான பிரச்சினைகள் நாளாந்த வாழ்வியற் சூழல்களோடு இணைத்துக் கற்பிக்கப்படும் நிகழ்ச்சிகள் மிகுந்த பயனைத் தந்துள்ளன. இசை கற்பித்தலுக்கு செவிவழித்

தொடர்பை ஏற்படுத்தும் வானொலி பலம் மிக்க சாதனமாகின்றது. நேருக்கு நேர் காட்சிகள் வாயிலாக அனைத்துப் பாடங்களும் நடப்பியல் உணர்வோடு தொலைக்காட்சி வாயிலாகக் கற்பிக்கப்படுகின்றன.

இக்கல்வி முறையில் அமைதியானது திறந்த நிலையில் உள்ளது. புதுமுகத் தேர்வு எதுவும் அற்ற மிக நெகிழ்ச்சியான நுழைவு முறை பயன்படுத்தப்படுகிறது. இப்பல்கலைக்கழகங்களில் மாணவரின் இடைவிலகல் அதிகம் என்று பொதுவாகத் திறனாய்வு செய்தாலும், பாரம்பரியமான பல்கலைக்கழக அமைப்பிலும் இன்று கூடுதலான இடைவிலகல் காணப்படுதலை ஜோன் பேர்குசன் சுட்டிக் காட்டுகின்றார். திறந்த பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் தொழிலாளர் வர்க்கப் பிள்ளைகளுக்குரிய உயர் கல்விக்கு நுழைவாயிலை அமைத்துக் கொடுப்பதால் சமூகவியல் நோக்கில் பலமுள்ள நிறுவனங்களாக மாறி வருகின்றன. வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு கற்க விரும்பும் பெண்களுக்கு இவை மிகுந்த வாய்ப்புகளை வழங்குகின்றன. வீட்டுப் பெண்கள் தொழில் புரியும் பெண்களாக நிலை மாற்றம் பெறுவதற்குரிய வாய்ப்புக்களும் கிடைக்கப் பெறுகின்றன. வயது குறைந்தோரும் தமது வீடுகளிலே அல்லது விடுதிகளிலோ இருந்தவாறு உயர் கல்வியைப் பெறுவதற்கு இதன் வழியாக வாய்ப்புகள் பரவலாக்கப்படுகின்றன.

மாணவருக்குரிய ஒப்படைகள் பின்வரும் முறைகளில் இடம் பெறுகின்றன.

1. கணிப்பொறிசார் ஒப்படைகள் (CMA) இவை கணிப்பொறியின் துணையுடன் திருத்தப்படும்.

2. போதனா முனைவர் சார் ஒப்படைகள். (TMA) இவை போதனா முனைவரால் (Tutor) திருத்தப்படும்.

இப்பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகள் பல்வேறு பிரதேசங்களிலும் வினைத்திறனுடன் இயங்குவதற்கு "பிரதேச நிலையங்கள்" அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களின் செயற்பாடுகளின் விதந்து குறிப்பிடத்தக்கது மாணவர்க்குப் பல வழிகளிலும் மதியுரை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள சீர்மியரின் (Counsellor) சேவையாகும். உயர் கல்வியும், தொழில்களும் பற்றிய போதுமான ஆலோசனைகளும் ஆற்றுப்படுத்தலும் சீர்மியரால் வழங்கப்படுகின்றன.

கலைத்திட்டத்தை ஆராயும் பொழுது, பாடப் பொருள் அல்லது உள்ளடக்கத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், கற்பிக்கும் முறையியல்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு நிபுணர்களின் மதியுரையுடன், பொருத்தமான இயங்கு தூண்டிகளுடன் (Effects) பாடங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. தேவைப்படும் பின்னூட்டல்களை மாணவர்களுக்கு வழங்குவதற்குரிய மாணவர் நிலைப்பட்ட

தொடர்புகளும் ஆசிரியர் நிலைப்பட்ட தொடர்புகளும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. காலத்துக்குக் காலம் கலைத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு வேண்டப்படும் பரிமாணங்கள் உட்புகுத்தப்படுகின்றன. மருத்துவக் கல்வியைக் கூட இப்பல்கலைக் கழகங்கள் வாயிலாக முழுஅளவில் வழங்க முடியுமா என்பது பற்றிய ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது ஏற்றுக் கொள்ளப்பட்ட (Accepted) அமைப்பாகி விட்டது. திறந்த பல்கலைக்கழகப் பட்டங்கள் பாரம்பரிய பல்கலைக்கழகப் பட்டங்களுக்குச் சமநிலையாகக் கருதப்படுகின்றன. பலம்மிக்க அடிப்படை அறிவைச் செறிவாக வழங்குவதில் இப்பல்கலைக்கழகங்கள் கூடிய கவனம் எடுத்து வருகின்றன. கற்றல் கற்பித்தலில் வளமான இதரவடிவங்களைத் (Modules) தயாரிப்பதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகின்றது. வான் வழியாக வினையாற்றல் மிக்க பொறியியற் கல்வியை வழங்கும் முயற்சி சோவியத்தில் வெற்றியளித்துள்ளது. தொழில் செய்துகொண்டு உயர் கல்வி கற்பவர்கள் மத்தியில் இதன் பயன்பாடு தீவிரமடையத் தொடங்கியுள்ளது.

குறைந்த அளவு முதலீட்டுடன் கூடிய அளவினர்க்கு உயர் கல்வியை வழங்க முயலும் மூன்றாம் உலக நாடுகளுக்கு இந்த உபாயம் கவர்ச்சிமிக்கதாக அமைகின்றது. இப்பல்கலைக் கழகங்கள் பாரம்பரியமான பல்கலைக்கழகங்களுடன் தமது தொடர்புகளை வளர்த்துக் கொள்வதன் வாயிலாகப் புலமை உறுதியை ஆக்கிக் கொள்கின்றன. தொடர்பியல் நிறுவனங்களுடன் தமது பிணைப்பை வளர்த்துக் கொள்வதன் வாயிலாகத் தொடர் பாடற் சிறப்பை மேம்படுத்த முயல்கின்றன.

வளர்ந்தோருக்கான கல்வி விரிவு, அதிகமானோர்க்கு ஏககாலத்தில் உயர்கல்வி வழங்கும் செயற்பாடு, குறைந்த செலவில் கூடிய பயன் விளைவுகள் என்ற முத்தரப்பு நன்மைகள் இவற்றினால் ஈட்டப்படுகின்றன.

இப்பல்கலைக்கழகம் "ஓர் உற்பத்தி நிறுவனமாக இருக்கின்றதே அன்றி ஒரு புலமை சார் நிறுவனமாக இல்லை" என்ற மேலேழுந்த வாரியான திறனாய்வு முன் வைக்கப்படுதலும் உண்டு. உற்சாக மிகுதியினால் நூற்றுக்கு மேற்பட்ட பயில் நெறிகளை ஒரே பல்கலைக்கழகம் வழங்கும் பொழுது கல்வியின் தர மேம்பாடுகளை அனுசரித்தல் கடினமாகி விடுகின்றது என்ற இன்னொரு திறனாய்வுக் கருத்தும் முன் வைக்கப்படுகின்றது.

மனித சமுதாயத்தின் ஆரம்பத்திலிருந்தே கல்வியும் வளர்ந்து வந்துள்ளது என்பது சமூக வரலாற்றில் நாம் காணும் உண்மை. மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு ஜீவனும், அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும், தனக்குப் பொருத்தமானதை, தேவையானதைக் கற்றுக் கொள்கின்றது. தேவைகள் மட்டுமல்லாமல், காலம், சூழல் என்பவையும் கல்வியில் அதன் போக்கு, பொருள், இலக்கு, முறை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அத்தகைய மாற்றங்களுக்கு அடிப்படைகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் சிந்தனையாளர்கள் வழங்குகின்றார்கள். அவர்களுடைய சிந்தனைகள் அவரவர் வாழ்நாட் கால, தேச, சமூக வர்த்தமானங்களின் பிரபலிப்பாக விளங்குகின்றன. இந்த அடிப்படையில் கல்வி பற்றிய சிந்தனைகள் பாரம்பரிய நோக்கில் பழையனவாகவும், மாற்ற வழக்கில் புதியனவாகவும் இனங்காணப்படக் கூடியன.

பிளேற்றோ, அரிஸ்டாடில் ஆகியோர் காலத்திலிருந்து, ரூசோ, கொமேனியஸ், புறொபல், பெஸ்டலோசி போன்றோரும் கூட்டாக, டூயி, காந்தி, தாகூர் போன்றோர் வரை பல்வேறு கோணங்களில் கல்வியின் தத்துவார்த்த அடிப்படைகளை விளக்கிய மேதைகளை நாம் காண்கிறோம். அவர்களுடைய சிந்தனைகள் அவர்கள் வாழ்ந்த தேசம் / சமூகம், எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்பவற்றால் உருவாக்கப்பட்டன / நெறிப்படுத்தப்பட்டன என்பது கண்கூடு. ஆரம்பத்தில் ஆன்மீக நோக்கத்தை வலியுறுத்திய சிந்தனைகள் காலப்போக்கில் அரசியல், பொருளாதார, சமூகவியல் அழுத்தங்களையொட்டி வளர்ந்தமை கல்வி வரலாற்றில் பரவலாகக் காணப்படுவது. அண்மைக் காலங்களில், அத்தகைய கல்விச் சிந்தனைகளில் புதிய, புரட்சிகரமான போக்கு உருவெடுத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது.

இவ்விதம் உருவெடுத்துள்ள புதிய சிந்தனைப் போக்கில் கல்வியானது அகல்விரிப் பண்புடையதாய், ஒடுக்கப்பட்டவர்களின் உயர்வுக்காய், சமூக பேதங்களை மாற்றியமைப்பதற்காய், தற்சார்புத் தன்மை கொண்டதாய், மானிட மேம்பாட்டை உறுதிப்படுத்துவதாய் பல்வேறு ஒளிகளில் மிளிர்கின்றது.